[illegible]

அப்பால வரணா கவிராயரியற்றிய

சிவமலைப் புராணம்.

இது,

பழையகோட்டைப் பட்டக்காரர்

ஸ்ரீமான், ராயபஹதூர்

உத்தமகாமிண்ட நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியா

ரவர்கள

[illegible]படி,

விவேகதிவாகரன் பத்திராதிபர்.

ஸ்ரீமான்,

தி. அ. முத்துசாமிக்கோனாரவர்களாற்

பரிசோதித்து,

வசனச்சுருக்கம் எழுதித்

தமது,

திருச்செங்கோடு

விவேகதிவாகரன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

விலை ரூ. 1—4—0

அருணகிரிநாதர் அருளிச்செய்த

பட்டாலியூர்த் திருப்புகழ்

இருகுழை யிடறிக் காது மோதுவ
பரிமள நளினத் தோடு சீறுவ
இணையறு வினையைத் தாவி மீளுவ—அதிசூர
எமபடர் படைகெட் டோட நாடுவ
அமுதுடன் விடமொத் தாளை யீருவ
ரதிபதி கலையிற் பாடு சூழுவ—முனிவோரும்
உருகிட விரகிற் பார்வை மேவுவ
பொருளது திருடக் காசை கூறுவ
புகழ்முடி விலைனைப் பூசலாடுவ—வடிவேல்போல்
உயிர்வதை நயனக் காதல் மாதர்கள்
மயல்தரு கலவிற் போய்வீழ்வதை
உலைதரு திறமிற் சேர வாழ்வதாம்— ஒருநாளோ

முருகவிழ் தொடையைச் சூடி நாடிய
மரகத கிரணப் பீலி மாமயில்
முதுரவி கிரணச் சோதி போல்வய—லியில்வாழ்வே
முரண்முடி யிரணச் சூலி மாலினி
சரணெனு மவர்பற் றான சாதகி
முடுகிய கடினத் தாளி வாகினி—மதுபானம்
பருகினர் பரமப் போக மோகினி
அரகர வெனுமவர்க் காரி யாமளி
பரிபுர சரணக் காளி கூளிகள்—நடமாடும்
பறையறை சுடலைக் கோயில் நாயகி
இறையொடு மிடமிட் டாடு காரணி
பயிரவி யருள்பட் டாலியூர்வரு—பெருமாளே

கத்தூரி யமரு மருகமத மிருகதா படீர இமசல
கற்பூர களப மணிவன—மணிசேர்க்
கட்டார வடமு படர்வன கிட்டேர கலகமிடுவன
கச்சோடு பொருது திமிர்வன—தனமாதர்

கொத்தூரு நறவ மெனவதர ரத்தூறல் பருகி யவரொடு ,
கொற்சேரி யுலையில் மெழுகெனு—வுருகாமே
கொக்காக நரைகள் வருமுன மிக்காய விளமை யுடன்முயல்
குற்றேவல் அடிமை செயும்வகை—யருளாயோ

அத்தூர புவன தரிசன நித்தார கனக நெடுமதி
லச்சான வயலி நகரியி—உறைவோனே [யோ
அச்சோவெ னவச வலகையி லுட்சோர்த லுடையபரவை
டக்காகி விரக பரிபவம்—அறவேபாய்

பத்தூரர் பரவ விரைவுசெல் மெய்த்தூரர் விரவ வருடரு
பற்றாய பரம பவுருஷ—குருநாதா
பச்சோலை குலவு பனைவளர் மைச்சோலை மயில்கள் நடமிடு
பட்டாலி மருவு மமரர்கள்—பெருமாளே 2

சங்கைககத் தோடு சிலுகிடு சங்கிச்சட் கோல சமயிகள்
சங்கற்பித் தோதும் வெகுவித—கலைஞானச்
சண்டைக்குட் கேள்வி அலமலம் அண்டர்க்குப் பூசையிடுமவர்
சம்பத்துக் கேள்வி அலமலம்—இமவானின்

மங்கைக்குப் பாக னிருடிக ளெங்கட்குச் சாமி யெனவடி
வந்தித்துப் பேசி யருளிய—சிவநூலின்
மந்த்ரப்ரஸ் தார தரிசன யந்தத்துக் கேள்வி அலமலம்
வம்பிற்சுற் றாது பரகதி—யருள்வாயே ·

வெங்கைச்சுக் ரீபர் படையயி லங்கைக்குப் போக விடவல
வென்றிச்சக் ரேசன் மிகமகிழ்—மருகோனே [ழில்
வெண்பட்டுப் பூணல் வகையுறு கண்பட்டுப் பாளை விரிபொ
விஞ்சிட்டுச் சூழ வெயில்மறை—வயலூரா

கொங்கைக்கொப் பாகும் வடகிரி செங்கைக்கொப் பாகுசுரும
கொண்டைக்கொப் பாகு முகிலென—வனயானைக்
கும்பிட்டுக் காதல் குலவிய இனபச்சொற் பாடுமிளையவ
கொங்கிற்பட் டாலி நகருறை—பெருமாளே.

உ

கடவுள் துணை.

முகவுரை.

அநாதி மலமுத்த சித்துருவாகிய சிவபெரு[illegible] மாக்கள் நெறியறிந்து முத்திதலைக்கூடுக" எனத் திருவுளத்துக் கொண்ட பெருங்கருணையால், வேதாகம மென்னும் முதநூலை யருளிச்செய்தார். அது தோத்திர ரூபமான விதிபோதமாக இருத்தலின், அக்கருத்தைத் தழுவியே வியாசமுனிவர் பதி னெண் புராணங்களையும் கதாரூப ஞானபோதமாக இயற்றினார். அப்புராணங்களுள்ளே பலவகையான நீதிகளும், மார்க்கங்களுங் கதைகளோடு சேர்ந்து அலங்காரத்துடன் செய்யுட்களாற் கூறப்பட்டுள்ளன. இப்புராணங்களுள்ளே ஒருபிரகாரம், இல்லாது பொருந்தாதாயும், மற்றொரு பிரகாரம் இன்பரூபமாகவும் விளங்குகின்றன.

இந்தப் புராணங்களுள்ளும், உப புராணங்களுள்ளும், பத்தியோக ஞானவழி நின்ற அடியார்களை ஆட்கொள்ளும் பொருட்டுப் பரமேசுரன் எழுந்தருளிய திருப்பதிகளின் மகத்துவங்கள் கலந்து சொல்லப்பட்டிருக்கும் அப்படிச் சுருக்கமாகச் சொல்லப்பட்டவற்றை விரித்தும், சொல்லப்படாது போனவற்றிற்குபபுராணமுறை தெரிந்து, வேறுமகத்துவங்கள் கற்பித்தும் பலதல புராணங்கள், பல பெரியோர்களால் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல்களெல்லாம வடமொழியி லிருத்தல் பற்றித்தமிழ்மாந்தர் கட்குப் பயன்படுமாறு செந்தமிழாய்ந்த பெரியோர் பலர் தாங்கொண்ட கருணையால், தமிழில் மொழிபெயர்த்துதவியிருக்கிறார்கள். மற்றுந் தலங்களெல்லாம் பழங்காலத்தைப்பெருமை பற்றியே சிறப்புடையன வெனக்கொள்ளக் கிடக்கின்றன. மேலோர் வழிபாடு செய்தநெறிகொண்டே மூர்த்தி தல தீர்த்தம் மூன்றுஞ் சிறப்புடையவாகின்றன இப் பட்டாலி சிவமலை என்பது கந்தப்பெருமானுக்குகந்த தலமே. இங்குவழிபட்டோர்களும் மிகப்பெரியோர்களே. இச்சரித்திரமுங் கந்தப்

புராணமெனச் சங்கிதையி லுள்ளதென வடமொழி மான்மியங்
கூறியுள்ளது. வடநூற்புலவர் கூறியசரித்திரத்தை அம்பலவாண
க்கவிராயர் தமிழ்ப் புராணமாகச் சொன்னயம் பொருணயம் பெ
றச்செய்து போந்தார்.

இந்தச் சிவமலைப் புராணத்தையும், சிவமலைக் குறவஞ்சி
யையும் அடியார்கள் படித்துப் பத்திகொள்ளுமாறு, அச்சிட்டு,
வெளியிடுங்கள் என்று நளவருஷம் தைப்பூசத் திருவிழாவன்று,
குட்டைப்பாளையம் ஸ்ரீமான், அர்ச்சுனக் கவுண்டரவர்கள் பிரஸ்
தாபித்தனர். பல இடங்கட்குப் பொருள்கொடுத்தும், ஆள்விடு
த்துந் தேடியும் பிரதியகப்படவில்லை. குறவஞ்சி மாத்திரம் பரி
சோதித்து எழுதப்பட்டு அச்சுவேலை நடந்து வருகிறது. நிக
ழும் பிங்கள வருஷம் சூரசங்காரத் திருவிழா நடந்து, திருக்க
ல்யாண உத்ஸவத்தன்று ஒருபுராணப் பிரதிகண்டு மேற்குறித்த
கனவான் உதவப்பெற்றேன். அந்தப் பிரதி ஆதியும், அந்தமு
மில்லாதது. ஆனால் எனது நண்பர், காங்கேயம் அஷ்டாவதானம்
ஸ்ரீமான், C. V. சேஷாசலநாயடு அவர்கள் 124 படலமுள்ள ஏட்
டுப்பிரதி ஒன்று கொடுத்தனர். கடந்த மார்கழிமீ முதல்தேதி
(15-12-17)ல் பழயகோட்டைப் பட்டக்காரர், ராயபூபதி
ஸ்ரீமான், உத்தமக்காமிண்டநல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியா
ரவர்களும், ஸ்ரீமான் அர்ச்சுனக் கவுண்டரவர்களும், அடுத்த
வரும் தைப்பூசத்தன்று சிவமலைப்புராண மூலமும், வசனமுஞ்
சேர்ந்த அச்சுப் புஸ்தகத்தைப் பல பெரியோர்களடைந்து க
சிவமலையிற் பார்க்க வேண்டுமென்று மெத்த ஆவலோடு அறி
வித்தார்கள் காகிதத்துக்கென்று பொருளும் உதவினார்கள்.
மறுதினமே காங்கேயம் பட்டக்காரர் ஸ்ரீமான், மும்முடிக்கண
பதிப் பல்லவராய மன்றாடியாரவர்கள் ஒரு ஓலைப்பிரதி உதவினர்.
இன்னும் கிடைத்த சில பிரதிகளை வைத்துக்கொண்டு பரிசோ
தித்து எழுதி, அச்சியற்றினேன். இப்பெற்றியாளர்களின் விரு
ப்பமும் எனது எண்ணமும் நிறைவேறும் வண்ணம், எவ்வகை
இடையூறும் நேராது காத்துமுடிப் பித்த ஸ்ரீசிவசுப்பிரமணி
யக்கடவுளது திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றனன். சுபம்.

ஏட்டுப் பிரதிகளிருந்து அன்றன்று மூலச்செய்யுட்களை எழுதி, அச்சேற்றி ஒப்புநோக்கிப், பின்பு சிவமலைப்புராண வசனச் சுருக்கம் எழுதி அச்சியற்றியதுமாகிய விரைவு வேலையால் பிழைகளிருக்கவுங்கூடும். அருமைதெரிந்தோர் மன்னிப்பார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரதிகள் உதவினோர்.

குட்டைப்பாளையம் ஸ்ரீமான், அர்ச்சுனக்கவுண்டரவர்கள் பிரதி 1

காங்கேயம் ஸ்ரீமான் மும்முடிக் கணபதி பல்லவராய மன்றாடியார் பிரதி 1

காங்கேயம் அஷ்டாவதானம் ஸ்ரீமான், C. V. சேஷாசலநாயடு அவர்கள் பிரதி 1

சிவமலை ஜோசியர் மகா-ஸ்ரீ ராமசாமி குருக்கள், பிரதி 1

பிங்கள ஞு தைமீ
19—1—1918
திருச்செங்கோடு.

இங்ஙனம்.
தி. அ. முத்துசாமிக்கோனார்.

உ

நூலாசிரியர் வரலாறு.

நீர்வளம்பொருந்திய சோழமண்டலத்திலே, பூர்வஞ் சைனத்திருந்து பிரிந்து, சைவத்திற் புகுந்து நீறுபூசி வேளாள குலத்திலே, சாலிவாகன சகாப்தம், 1634, கி. பி. 1712 விஜய வருஷத்திற் பிறந்து 60 வது வயதில் இராமாயண கீர்த்தனைபாடி, தஞ்சாவூர் துளசி மகாஹாராஜா, அவ்வேந்தனின் அருமை நண்பரான புதுச்சேரி ஆனந்தரங்கபிள்ளை, மணலி முத்து கிருஷ்ண முதலியார். தேவப்பெருமாள் செட்டியார் முதலியகனவான்கள் சபையில் அரங்கேற்றிப்பெருமையடைந்த, சீகாழி அருணாசலக்கவிராயர் என்னும் பிரசித்திபெற்ற மஹா வித்துவானைத் தமிழ்நாட்டில் தெரியாதார் இரார். அவருக்கு மூன்று குமாரர்கள். ஜேஷ்டகுமாரர் அம்பலவாணக்கவிராயர் என்பவர். இவர் பிறந்த வருஷம் கணக்குத் தெரியவில்லை; என்றாலும், இவரது தந்தை அருணாசலக்கவிராயருக்கு முப்பதாவது வயதில் விவாக

மானதென அவர் சரித்திரத்தில் தெரிகிறது. இதனால் இந்த அம்பலவாணக்கவிராயர் கி. பி. 1742 க்குமேல் பிறந்தவராக வேண்டும். இவர் இளமையிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்கள் நன்குகற்றவர். சைவசித்தாந்த நூல்கள் முறையே பயின்றவர். கொங்குநாட்டின் கிழக்குக்கோடி எல்லையிலுள்ள கொல்லிமலை (சதுரகிரி) அறப்பளீசுரர் சதகம் ஒன்று கூறியுள்ளார். அச்சதகத்தின 100-வது செய்யுளில்'' அம்பலவாணகவிராயனுக்கு மென்புன் கவியையுஞ் சூடியே'' என்பதனால் தெரிகிறது. பாடுவிதமேதான் அச்சதகத்தின் முதற்பாட்டில'' மோழை பூபதிபெற்ற வதிபனைம தருமை மதவேள்'' எனக்குறிக்கிறார். இவனை 7-வது செய்யுளில், கங்காகுலத்தலைவன் என்றும், 73 வது செய்யுளில்'' வேளாளர் குலதிலகன் என்றுங்கூறப்பட்டுள்ளன.

பின்பு இவர்சேலத்துக்குசென்றபொழுது, அங்கு நாளையும் நடக்குஞ் செருப்படித்திருவிழா நடந்தது. அங்குப்பிரார்த்தனைசெய்துகொண்டு போனின்றவர்கள், உண்டிகையில் தக்ஷிணைபோட்டுத் தலைகுனிந்தால் தோலால்தைத்துத தட்டததில் வைத்திருக்குஞ் செருப்பையெடுத்துப், பூசாரி அடிப்பது வழக்கம்; இவருடன் அங்கு வந்தோர் இது என்ன ஐயா? விந்தையாக இருக்கிறது எனக்கேட்டார்கள். அதற்குக்கவிராயர்.

" மருவபாலே சவுந்தரிய லகரிவரை மேவனிறைக்கு மாகவிக்கும், விருப்பாலே பொருளுதவா லோபிகளைச்சேலநகர் வீறுமாரி, குறுப்போலே வரவழைத்துப்பணம்பறித்து நிமிர்ந்ததலை குனியச்செய்து, செருப்பாலே யடித்தடித்துப் புத்திரவப்பலமுறையுஞ் செய்கின்றாளே.,,

எனவிடை பகர்ந்தனர் பின்பு திருச்செங்கோட்டுக்குச் சென்று ஸ்ரீஅர்த்தநாரீசுரர தரிசனம்செய்து வந்தனர். தரிசித்தீர்களா? எவ்விதமாக இருக்கிறது என்று கேட்டவர்களை நோக்கி:—

"எத்தனையோ தமிழ்க்கலைஞரிருந்து தமிழாய்ந்தசெந்தான்மை யிசைச் செங்கோட்டின், அர்த்தநாரீசுரரோவத்து விதப்பெரு நூளாருமவரிரோய் நீண்டுநு, சுத்த சிவா சாரியரோ குடமுனி நேராவர் சூழ்ந்துளாழுஞ். பத்திசாலிகள் சங்கப் புலரினை யாவ ரெனிற் பகரவென்னே.,,

என இச்செயுளைக்கூறினர் என்பர். இவர் இங்கு நின்றுங் காங்கேய நாட்டிற் புகுந்தனர் இவரது சைவப்பொலிவும், பிர சங்க வன்மையும், வாக்குச்சாதுரியமுந்தாமுங் கண்ட பட்டக் காரர் முதலியவிவேகிகள் இவரைக்கொண்டு சிவமலைப்புராணம் பாடுவிக்க வேண்டுமென்றுபேசி அறிவித்தார்கள். ஒப்புக்கொ ண்டு நல்ல நாளில் சபைவனையில், சிவமலையப்பார் தரிசனஞ் செய்து புராணம் பாடத்தொடங்கி 14 சருக்கம் 497 விருத்தத் தில் புராணத்தைப் பூர்த்தி செய்தனர். தெரிந்த பட்டக்காரர் முதலான பக்திமான்கள், அரங்கேற்றுவித்துக் கவிராயா மன மகிழ்ச்சி கொள்ளுமாறு சன்மானம் புரிந்தனர். புராணத்தில் அங்கங்கேபத்திச்சுவைமுதிரப்பொதிந்து சைவமணங் கமழு ம்படி இசைத்திருப்பது இவரது சிவபத்திவலியைக் காட்டுகி றது. பெரிய நூல்களிலே பயின்று அரிய கவிகளின் சுவையி லீடுபட்டவரும் அங்கவருணனை புரிவதில் நுண்ணிய அறிவின ரென்பதையும், இப்புராணம், வள்ளிநாயகியார் திருமணச் சரு க்கத்தில்.---

"கனவினிலு மெமைமெயதிரே காணிலச்சங்கொண்டு வெய் யோன் கதிர் புகாத, வனமதனிற் கடிதோடும் வாலியெதிர் பொ ருதவஞ்சி மளறந்து நின்று, முனைகொளு வெங்கணை தொடுத்து. த்துணைவரொடுஞ் சேர்ந்தவனை முடித்தானென்னத், தனுவிரா கவன் வீரந்தனை நகைக்கு மடவரல் தன் சாநுமாதோ.,,

என்னுஞ் செய்யுள் முதலியவற்றாற்றெரிகிறது. சைவத்தில் இவர் கொண்டுள்ள மேலானமதிப்பை அகத்தியமுனி உபதேச ச்சருக்கத்தில் 6, 7, 8, 9, 10. செய்யுட்கள் விளக்குகின்றன.

இவரது சைவசித்தாந்த சாஸ்திர ஞானத்தேர்ச்சியால் திரிபதார்த்த லட்சணத்தைச் சுருக்கிக்காட்டும் ஆற்றலை, அந்தச் சருக்கத்திலேயே.

''பகருதற்கரும் பதி பசு பாசமோர் மூன்றும்
இகழ்விலாப்பதி போலவை யிருமையு மநாதி
தகைமையாகிய பதியினைச் சார்ந்திடா பாசம்
நிகரிலப்பதி பொருந்திடிற் பாசமே நில்லாது.

என்பது முதலியன நன்கு புலப்படுத்துகின்றன, இப்புராணம் பாடுதற்கு உதவி புரிந்தவர்களின் தகுதி விளங்குமாறு நதடன் சாபந்தீர்த்த சருக்கத்திற் கூறுமாற் காட்டியுள்ள தன்மை பாராட்டத் தக்கது.

வானவர்களிற் சிறந்தோர் மணிகண்டனுடன் மூவர்
மான மன்னரிற் சிறந்தோர் வழுதியுடனொரு மூவர்
மேன்மை வேளாளர் தமின் மிகச்சிறந்தோர் மன்றாடி
தானகன்னனெனுந்தடக்கைச் சருக்கரை மன்றாடி மன்னன்

பன்னரிய புகழ்படைத்த பல்லவராயக் குரிசி
லென்னவரு மூவர்களுமேனைய வேளாளருமவேன்
மன்னவர்க்குத் தொன்றுதொட்டு வழிவழியாயடிமை செய்வா
ரன்னவர்கள் குலதெய்வ மாகிநிற்ப னெங்கோமான்.

என்பன. இன்னும் இவர் வரலாறு அதிகம் தெரியவில்லை.

சிறப்புப்பாயிரம்

மங்குறேய் பொழில் வான்றடவுபட்டாலி மான்மியந்தனைக் கலை வல்ல, புங்கவர் மதிக்கப் பொருணயஞ் சிறந்து பொலிவுறத்தமிழினிற் புனைந்தான், தங்கிய புகழ்சேர் காழியனருணாசலக்கவி யுதவிய புதல்வன், இங்கித மிகுந்த வம்பலவாணனெனுங்கவி ராய நாவலனே.

—*(0)*—

முருகன் துணை.

சிவமலைப்புராணம்.



பாயிரம்.

காப்பு.

விநாயக வணக்கம்.

தானவாரியு மாமகவ னுந்தியந் தடங்
தான வாரிச னும்பணி வெள்ளியஞ் சயிலத்
தானவாரிய னிடத்துறை மலைமங்கை தருமுத்
தானவாரிபெய் தந்திதாள் சிரத்தினிற் றரிப்பாம்.

பால்வண்ண நாதர் துதி.

நீர்கொண்ட கடல்சூழும நிலவுலக முழுதளந்த நெடியமாலும்
ஏர்கொண்ட சதுமுகனு மிமையவரு மருமறையு மிறைஞ்சியேத்த
வார்கொண்ட களபமுலை மாதுநல்ல மங்கையுடன் மருவிவாழுஞ்
சீர்கொண்ட பட்டாலிப் பால்வண்ணர் திருமலர்த்தாள் சிந்தை
[செய்வாம் 1.

நல்லமங்கையம்மன் துதி:

நல்லமங்கை யாய்பபின்வரக் காட்டுமலர்ப் பதந்தோறும கமலத்தோனும், வில்லமங்கை கொண்டருசசித் திடவவாக்கு வேண்டுபெரு விருப்பம நலகும், மல்லமங்கை வாய்நாக மதியுணர்ந்த பரமனிடம மருவிவாழும, நலலமங்கை யிருகோகநகத்தாளையகத்திலுற நாட்டுவாமே 2.

கயிலாசநாதர் துதி.

அரியயன்வே ளிருசுடர்கள் முறைசெய்தொழி லவர்தமிக்கை யன்றென்றியாருந, தெரியமதன் றனையெரித்தும்சிரங்கடிந்தும் முனிநால்வர் தேறயோகு புரிதருநா ளுயிர்களின்பம் புணர்த்துமப் மைவிழி புணைததருனறு, கரியவிரு ளுறக்கண்டுங் கின்றுகயி லாயனையெங் கருத்துள் வைப்பாம். 3

ஞானம்பிகை துதி.

குனிசிலைமார னையெரித்த வெற்றிப்பெற்றெறங் கருணைமனிழிக்
கோதையார்மா, னினிநமக்கென் றெனவிருந்த விறையவன்
மேற்சாயகனைடர்க் கேலதநாண்டிக், கனிமொயனவுள்ளுடைடுதாணி
ன்சரணமெனமற் றவெனுள் கலங்கா வண்ணம, இனியவலப்பாக
மன்பினீந்தஞா னம்பிகைதா ளிறைஞ்சுவோமே. 4

கணபதி துதி.

கரமலையை யுரித்தவன்றோர் சிதைத்திசைப்போர் [illegible]
னைக்கவின்கொள் சாமீ, கராமலையிற் [illegible]
போர் பொறித்தமலர்க் கையானைச்சூ, கரா [illegible]
முருகனுக்கு முன்னவனைக் ககனத் [illegible]
மைந்து காதகானை யடிபணிந்து கவலைதீர்ப்பாம் 5

வேறு. குமரக்கடவுள் துதி.

இலகுமதிவே ணியனுமைதன் னெழிலார் குறங்கின் மணி
ப் புயதகிற், கலபமயிலின் முதுகிலன்பர் கருதநின்வேதா கம
முடிவி, னலகின் முனிவர் காரபன்மா லனியுமகுடமுடிமிசை
யிற், குலவுகுமர னிருசரணக் குளிர்பொற்கமலம் வணங்கல்
செய்வாம். 6

இதுவுமது.

விந்தமதமுஞ் சூர்மருகர் விறலுங்கெடுத்த குறுமுனிவன்
சந்தவிசைச்செந் தமிழறியச் சாற்றுங்குரவன் சிவன்விழியில்
வந்தசிறுவ னிமையமயின் மதலைகங்கை மடந்தைதருங்
கந்தன்மணிக் கிண்கிணிச்சரண கமலமெமது கருத்துள்வைப்பாம்.

வேறு. தேய்வயானை துதி.

சகமுண்டுமிழ்ந்தோன் பெருந்தவமுஞ் சதவேள்விக்கோ
னுயர்தவமும், புகலவரும் வாரணமரிதாய்ப் புரிந்ததவமுங் கருங்
குமரி, குக்கன்மஞ் சரிப்பன னிரண்டுபுயக் குவட்டிற் றிளைக்குங்
குனபமுலை, பிகல்வேயல் விழிக்குஞ் சரிபதப்போ திணையெம்
மிதயத்திருத்தல் செய்வாம். 8

வள்ளிநாயகி துதி.

கலைப்பூணுவ ளொட்டிமலர்க் கரமும்விண் ணாட் டரமகளிர்கர
மூமேனைற் புலத்தில்வருங் கிளிகடியப் பொருந்தவளைத் திடு
மிதனும் புயல்போன் மேனி, வலத்தசுரர் குலகால னைவேலோ
ன் செம்பொன்மணி மகுடமாறும், அலைத்தகமுந் தடவியசீறடி
வள்ளிநாயகிதா ளகத்துட் சேர்ப்பாம் 9

வேறு. திருநந்திதேவர் துதி.

கண்ணுதற்றிரு வடிதொழ வருமயன் கண்ணன்
விண்ணுளோர்பில மீதுளோர் தவமுனி வேந்தர்
எண்ணிலாதவர் நெருக்கற மணிப்பிரம் பேந்தா
மண்ணல்நந்திக ளடிமலர் முடிமிசை யணிவாம். 10

வீரவாகு தேவர் துதி.

மாரவாகுலந் தவிர்த்தினி தாகிபமகிழ்வு
சூரவாகுமன் றனைவனத் திடைவரக் குறித்த
பாரவாகுவீ ராறுடைப் பண்ணவற் கிளைப்ப
வீரவாகுவைச் சிந்தையில் விளங்கவைத் திடுவாம். 11

அகத்தியமுனிவர் துதி

சகத்தானை யன்றவனை மகவானைபரவாகச் சாற்றுமெ
ய்வா, சகத்தானைக் கிரிதனைத்த தண்டானை யொருபத்துத்
தலையானைக்கி, சகத்தானை கொன்றி வென்றோன் றனைப்பரமன்
செய்தானைத் தவிற் செயா, சகத்தானைப் பரவுதிரு வகத்தா
னை நித்தமுமஞ்சலி செய்வாமே. 12

ஆஞ்சநேயர் துதி.

மருவிருந்த கடம்பணியு மார்பன்சொல் பணிசிரத்தா
மனத்துத்தாங்கிப், பொருவிசுநத சிவமலையின மாருதத்திக்கினி
லிருக்கும் புனிதன் பூவிற், றிருவுராங் கொண்டாற் கிளையோன்
முதலெழுபான் வெள்ளமெனுஞ் சேனையுய்ய, வருமருந்து தரு
மனுமன் பாதப்போ தெப்போது மகப்போ துய்ப்பாம். 13

வேறு.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் துதி

அத்திருக்கனைத் தந்தருள்செய் யங்கணை முலைப்பா லினிதருந்தி
யத்தியணங்கு வடிவமைத்தோ னடிமாமுளரி யகத்தினிற்கொண்
டத்திசாத்தி யெனும்நாவார் யாத்தகற்றா னடிபுணையா
யுத்திகட்டேதோன் பதம்பாவு மடியார்சாணுக் கன்புசெய்வாம்

சுந்தரர் மாணிக்கவாசகர் துதி.

மாமுதலைத் தடிந்தகதிர் வைவேலோன் திருத்தாதை மகி
ழப்பாடி, யேமுதலை வாய்பிள்ளை யீனத்தந்தோ னிருசரண
மேத்திக்கூடற், கோமுதலை யொன்பதுநாற் கோடிக்காய் மால
யன்கண்கொண்டு காணு. மாமுதலை மாமீதில் வரவழைத்தோ
ன்சரண மலர் மனதுட் கொள்வாம. 15

நக்கீர தேவர், அருணகிரிநாதர் துதி

நுதலின்விழி காட்டினு நீ நுவற்றிடுப நுவலபிழையே நே
க்கா வென்ன, முதலவன்முன் வலிபேசு முருகாற்றுப் படைப்பு
லவன் முனாரித்தானும், அதிமதுர ரசமொழிகு மினியதிருப்புக
ழ்ப்பாடி யருள் சேராறு, வதன னருள் பெறு மருணை கிரிநாதர்
கழலுமென்னுள் வளருமாதோ. 16

பொன்னம்மை துதி.

தன்னிகரிலாத சததிசிவமலைவாழ் தலக்தார்தா னீகர்நாட்
டா, சன்னகரின் மற்றுமுள்ளா ரைங்கரனகீழ் ஒளித்தபணி யத
னைவானத். தின்னிடையிற் காநீட்டி யேந்திவர வழைத்தேவர்க்
குமிசையக் காட்டும், பொன்னம்மை யெனுந்தாயை மறவாமலெ
ப்போதும் புந்திசேர்ப்பாம். 17

வேறு. அவையடக்கம்.

தெரியுநான் மறைகடேருச் சிவபரன் குருவாம் வேலன்
சரிதம தனையான்செந் தமிழினற் சொலமதித்தல்
கரியமை [illegible] காணுமிந் திரவிற்பற்றப்
புரியுமலம்பச்செல்லும் பாலனோரகு மன்றே,

பண்டருந் தவர்க்குச் சூதன் புகர்வடமொழியை யாவுந்
தண்டமி ழதனாற் சொல்லும் தன்மைவா ரிதியோ ரேழு
முண்டிடு முனிநேர்வாரி யுண்பெனென் றொருவனங்கை
கொண்டுநீர் தன்னையள்ளிக் குடித்திடன் மானுமன்றே. 19

சேடனாயிர நாவினாற் கற்பத்துஞ் செப்பக்
கொணாச சிவகூடலைக்குகன்சரிதம யானகூறல்
நீடுமிவ்வுல கிருளெலா நீக்குவன் யானென்
றோடிமினமினி யொன்றொளிகாட்டுத லொக்கும். 20

வேறு.

இப்புவியெலா மதிக்கத் தக்கவிலை பெற்றதொரு வியன்மா
ணிக்கம், குப்பையிலே கிடந்திடினு மிகழாமற் கொள்வாரந்தக்
கொள்கைபோலச், செப்புமுலை வள்ளிபங்கன் றிருப்புகழாகையி
னல்யான செப்புமிப்பா, வெப்பிழைய தாயிடினுங் கைக்கொ
ள்வ தன்றிநல்லோ ரிகழ்ந்திடாரே. 21

பாயிரம் முற்றிற்று

நைமிசாரணியச் சருக்கம்.

கண்ணகன்ற நீர்க்கலுழியும வாசனைகமழும்
தண்ணெனுமமகில் சந்தொடு வேய்முதற்றருவும்
விண்ணளாவியே மிடைதலான் மதிகதிர் வெய்யோ
னண்ணுமவெங்கதி ரொளிபுகா நைமிசாரணியம்.

துன்றுவானவர் துயர்கெட முப்புரந்துலைபக்
குன்றவார்சிலை யேந்திய பிறைமுடிக்கோமா
னன்றிவேறொரு கடவுளை வழிபாடாவகஞ்சேர்
வென்றிமாதவர் தொகுதியே யிடந்தொறும் விரவும். 2

பரிதிவெங்கதி ரினம்புகாப் பான்மையாற் பரந்த
விருளிருந்திடப் படவராபணி விளக்கெடுக்கும்
பொருவின் மாதவர் புரிந்திடு மகத்தெழு புகையைக்
கருமுகிற்குல மெனமயி னடித்திடுங்கண்டு. 3

சுருதியாகம புராணசாத் திரமொலாஞ் சொல்லும்
பொருளுந் தோன்றிடப் பூவையுங் கிள்ளையும் புகலும்
மிருக முட்பற வைக்குல மானதும் மேன்மைத்
தருமமும்பெரும் புகழையும் பெறவருள் தரிக்கும். 4

உணருந் திடிற் றலைவிலா நாகமுண் டென்றே
ஆனதன் றிவெம் பழியினைட் டொடருமென் றறிந்தோ
மேன்மைமாதவர் புகலுமவ் விதிவிலக் குணர்ந்தோ
பூனையும் புலா லருந்திடா தயிர்க்கன்பு புரியும். 5

கருந்துழாய்ப்பசுங் கண்ணியன் றேவிக்குங் காலத்
திருந்தநான்முகன் பனைவிக்கும் வசிட்டனுக் கினிய
வருந்ததிக்கு மெய்க்கற்பியல் கற்பிக்கு மழகிற்
றிருந்துமாதவர் பன்னியர் பண்ணையுஞ் செறியும். 6

வேறு.

எலிபராப்படமீதி லேறினினைபாடல் செய்யு மினமான்கன்று,
புலிமுலைப்பா லினிதருந்துங் கனி கனைக்கால் ஞெண்டினட்புப்
பொருந்திமேவு, மொலிதிரைநீ ரிக்குருளை யுண்டிடக் கையால்
வாரி யூட்டும் வேழம், வலியகங்க மொடுபசிய கிள்ளையொரு பஞ்
சரத்தில் வாழு மாதோ. 7

வேறு.

இவ்வண்ண மிகவொன்று மின்றருந் தனிவனத்தின்
மைவண்ண னயன்றேவர் வருந்தியுநா டற்கரிய
செவ்வண்ண நளினமலர்த் திருப்பாதப் பெருமான்றன்
மெய்வண்ணந் தனையுணரும் விமலமாஞ் சிந்தையினால். 8

ஆதியுமை யொருபாகத் தண்ணறிரு வஞ்செழுத்தும்
பூதியுங்கண் மணியுமெமைப் பொருளெனவே போற்றுகிற்பார்
காதிலங்குங் காலத்தோன் றனைச்சென்னி யிறபுடைத்த
சோதிநெடு வேலண்ண றாள்புகழ் விளக்கவல்லார். 9

இத்தகைய முனிவரர்க ளெண்ணிலா தவர்நாப்பண்
மத்தகயத் துரிபோர்த்த மணிகண்டன் பதம்பரவும்
வித்தகமெய்ச் சூதமுனி வியாக்கிரா சனத்தினிடை
யெத்தகவு முணர்ந்துபணிந் தேத்தவன்பி னினிதிருந்தான்

ஆங்கவன்றன் முகநோக்கி யரியதவத் தினர்யாரும்
பூங்கமலக் கோனிகர் புனிதமா தவசனைந்த
தீங்கு [illegible] ந்த சிவதலத்தி [illegible] கடெல்லாம்
[illegible] தமினையும். 11

[illegible] கூறக் குன்றெறிவேற்
[illegible] பயக் தலைதுவா
[illegible] விளங்கு
[illegible] றடிபணிந்தார். 12

[illegible] ருமெய்ப்பரன்
[illegible] பறிய சிந்தையின
[illegible] யாருமவணங்கிடச்
சூதமாமுனி சொல்லுறு முனரோ. 13

நைமிசாரணியச் சருக்கமுற்றிற்று
காப்புப் பாயிரமுட்பட விருத்தம், 35.

புராண வரலாற்றுச் சருக்கம்.

அனந்திடற கரிந்தாங் காந்தமாம் புராணத்தாறுசங்கிதையி னிலாருமம், வி[illegible]ரு மீசசங்கிதை தன்னின் விளவினைக் கன்று கொண்டெடுந்த, க[illegible]கள் வண்ணான் றன்னயரன் செய்த கட முனி குரவனுங் கந்த, னுளமபதிந் துறையு மகிமைசோ தல மொன்றுவாத்தினி னினிதினு ரைய்ந்து. 1

அரவணை யானும் பிரமனு மறையு மளப்பரி தாகிய வமலன் குரவனவா [illegible] குனெறி [illegible] வேறங்கக் [illegible] வே ணறுமலாக் கமலச, சரணமனந் திருந்தி மெய்ப்பயிர் பொடிப்பத் தழு தழுத்தெழுமெ [illegible], கமல [illegible] ருசசி மீநின்ற கூம்பக் கணணிலானந்தனீர் பெருக 2

எத்தலங் களினும் விழுமிதாந் தலமு மியம்பருங் கங்கை யிற் சிறப்பாய்ச், சித்தியு மெய்ம்மையு முத்தியு முதவுந் தீர்த்தமு மொன்றனு சகத்தி, னுத்தமமாகுஞ் சோதியு முளவ் தேர்தல மொராவினிற் றெரிந்து, வித்தக முனிவர் யாவருங் கேட்ப மறை கனும் வியந்திட விளம்பும். 3

புராணவரலாற்றுச் சருக்கம், முற்றிற்று.
ஆ திருவிருத்தம் 38.

சிவமலைச் சருக்கம்.

கலைமால் விடையவன கருணையா லரு
ளுலவையில கந்தவே ளுவந்து நிசசனுந
துவளுநா விடையிரு தோகையோ யிறை
சிவமலை மகிமையின் றிறங்கள செபபுவாம். 1

அந்த மாதியின ருகிய வமலனு மொருவன்
றந்த கந்தவே ளினிதுறை சிவமலைத தனமை
சந்த நானமறை சகததிர முகமதாய் விரிந்து
முந்தை நான்முக னுளினு மொழியமுற் றுதால். 2

ஆயினுஞ்சிறி தறிந்தவா றிசைக்குது மமலை
சேயி னின்னரு ளாலெனச செழுமறை நால்க
ளாயும வேதவி யாதனு மடிகளொ றுரைத்த
தூயவாசக முறைசொல்வ னெனவனபிற சொல்வான் 3

வேறு.

கரியத னுரித்துப் போர்தத கண்ணுதற் கடவுண் மேனாட்
டரியலர் புரங்கள் வெல்லத தறுகண்வா சுகிநாணாக
விரிகதிர் பரப்புஞ் செம்பொன் மேருமால வரையைப் பற்றி
வரிசிலை யாகக் கையின் வளைத்திடுங் காலைதன்னில் 4

அந்தமேருவி னுச்சியி னண்டஙகள் பரவச்
சந்த தஞ்சிவ பசனுறை தனிக்கொடு முடியொன்
றிந்த மாநிலத் திடைசிந்தி வீழ்நதது விதனால்
வந்த நாமமுஞ் சிவமலை யெனபபெயர் வழஙகும். 5

வேறு.

ஆதியா முகத்திற் செம்பொ னடுத்திடு முகத்தின் வெள்ளி
யோதிய செபபு மூன்று முகத்தினிற் கலியுகத்திற்
றீதிலாச் சிலையா மிந்தச் செய்கையாற் காமரூபச்
சோதிமா மலையென் றும்பேர் சாற்றினார் அறக்காட்ர. 6

வேறு.

வானதி முடிமேற் றேய்தலா லொளிகொண் மாமதி தவழ்தலா லாத்தி, தேனவிழ் கொன்றை கூவிளமென்மேற் செறிதலாற் றாணுவென் றேது, மேன்மையாற் சத்தி சிவமென வெங்கும் விளங்கலாற் றேனுடை யதனான், மாணிடங் கொண்ட வளத்தினான் முக்கண் வானவ னிகர்க்குமம் மலையே. 7

அண்டமு நிலனு மளக்கலாற் செம்பொனாகமேற் பொலி தருமதனால், விண்டென வெவரும் விளம்பவந் ததனால் வேணு கானங்களும் மவுதலாற், றண்டருக் குலங்க ணிரந்தர மிடைந்து தழைதருப் பசுமைகாட் டிதலால், வண்டுபூ யலங்க லணிந்த ருண் மௌலி மாயவ னிகர்க்குமவ் வரையே. 8

சுந்தமா மலர்மே லிருத்தலாற் கலைமான் கண்டிட னாவுரை தலினா, லந்தமா ணுந்தி வந்திடுபதனா லாடக வுருவமா குகை யாற், சுந்தர மெண்க ணுறுதலாற் பலவாஞ் சராசரம் படைத்த தன்மையினால், வந்தனாற் றிசையு முகம்பெறு மதனான் மலரவ னிகர்க்குமச் சயிலம். ௯

வேறு.

தான நீரென வருவியா றொழுகி மாதங்கப்
பான்மை காட்டிவந் தடுத்தவ ரிடர்துகட் படுத்தி
மேன்மை தங்கிய சித்திக ளுதவிமிக் குயர்ந்த
யானை மாமுகத் தண்ணலை நிகர்க்குமவ் வடுக்கல். 10

வேறு

அஞ்சிறைத் தோகை மஞ்ஞைமீ துறலா லாதியாம் பரம னால் வரலாற், றஞ்சமென் றமரர் பரவலாற் சத்தி தாங்கலாற் றலையிலா றுளதான, மஞ்சணை குறவர் வள்ளிமே ருதலான் மாவி னையட்டிடும் வலியாற், குஞ்சரி களப முலைகலந் திளைக்குங் குமரனை நிகர்க்கு மக்குன்றம். 11

வேறு.

கரீமுகிற்குல மூடியே கருமைகாட்டுதலா
லரிய ரந்திடு கண்கள் பற்பலவுள் வதனாற்
றருவி நீழல்கண் டிருத்தலாற் றானவர் சாயப்
பொருத வந்தகா லிந்திர னிகர்க்குமப் பொருப்பு. 12

வேறு.

அக்கிரி யிடச்சார் பதனிலேயென மனோர்த்துமண் டனையக
ழ்ந்திடுதல், மிக்கவான் கங்கை சிகரமேற் காணுஉ வெள்ளன
மாகினோன் மீது, புக்குநீண் முடியைக் கண்டன னென்னப்
பொருக்கெனப் பாதலம் புகுந்தியா, னிக்கண மதனிற் றிருவடி
காண்ப னென்னமான் முயலுத லினையும். 13

சங்கணி யெயின மடநல்லார் கொழுநர் தங்களோ டே
லை றிருப்ப, வங்கவர் வதனமென் றுசாளரத்தி னணைந்திடு மதி
யைமென் முகத்திற், றங்கவா டவர்க ளணைத்தலு மருணன்
றனைக்கண்டு வாரிசமனைய, செங்கரம் நீக்க வுய்ந்தனா மென்னச்
செழுமதி மேற்றிசை செல்லும். 14

பரிதியூர் தேரிற் கட்டுமோ ரேழு பசும்பரி தன்னைவல் லெ
யினர், தருமகா ருருங் கொடிஞ்சியஞ் சிறுதேர் தன்னிடை கட்
டுதற் காமென், றிருகா மோர்சிப் பிடிப்பதற் கெழலு மிங்கி
வைகண்டபா கருணன், வெருவிமத் திசையாற் பரியினைப் புடை
த்து விசையினின் மேற்கடல் குளிப்பான். 15

உடுக்குல மதனைக் குறச்சிறா மியர்க ளொளிதிகழ் தரள
மென்றெண்ணி, வடுத்தவி ரிளமென் முலைமிசை சூட்ட வடத்
தினுக்காமென வதன்பா, லடுத்துவாரிச மாமலரினைப் பழித்த
வங்கையாற் பற்றுதற் கோச்ச, விடுக்கனுற் றென்றோ டொன்
[illegible] வண்ணமேமருவ மேருவினிடையே. 16

வேறு.

துங்கங் கானவ சாகமே—அங்கங் கானவ ராகமே
சங்க மண்டத் தவர்களே—சங்க மண்டத் தவர்களே. 17

நாகமோதுபுன் னாகமமைவனம்-நாகமோதுபுன் னாகமீமைவனம்
கோகமாமதி லும்பர்குலங்களே-கோகமாமதி லும்பர்குலங்களே 18

மழமினார்சொல்வி தத்தையே-பழகும் பஞ்சர தத்தையே
அழகு மஞ்ஞைக ணித்தமே-விழைவதாய்ச்செயும் நித்தமே 19

வேறு.

இன்ன தன்மைய வாகிய வெழிற்சிவ மலையின்
அன்ன வாகனன் மாதல ருமறை பரவும்
சென்னி யாருடைத் தேசிக னினிதுவீற் றிருப்பான்
அன்ன வெற்பினுக் கிணையெழு புவனத்து மரிதால். 20

வேறு.

சிவமலை யென்றிடச் சிதையுந் தீவினை
சிவமலை யென்றிடத் திருவந் தெய்திடும்
சிவமலை யென்றிடச் சேரும் புண்ணியம்
சிவமலை யென்றிடச் சித்தியாகுமால். 21

வேறு.

ஒருகாலம் மலைசூழ்வோ ருலகமுழு வதுஞ்செங்கோ லோச்சிவாழ்வார்; இருகாற்சூழ்ந் திடுமவரே யிந்திரபட்டந்தரிப்ப ரிணையில்லாத, மருவார்பூங் கடம்பணியு மார்பனையவ் வரையிடத்தில் வந்து காண்போர், திருமாலி னுந்திவந்த வயனாகிப் புவி சிருட்டி செய்வான்றே. 22

வேறு

சகமதினிற் காசிதில்லை யருணையாதித் தலங்கடனிற் புரியுமகந் தவங்க டானம், பகர்விரதம் பூசையிவை செய்யும் பேற்றிற் பலனையுதந் தருமிந்தப் பதியிற்செய்யி, னிகரிலிந்தக் கிரியிடத்தி லயிலவே ருங்கை நீங்காம லினிதுறையுங் கந்தவேளைத், திகழுடுவிற் சிறந்திடுகார்த் திகைநாட் கண்டோர் சிவபதத்தில் வீற்றிருப்பார் திண்ணந்தானே. 23

வேறு.

தலர்பயி லிந்தச் சிவமலை யிடத்துத் தங்கிரன் னியதிகள் முடித்துப், பவமகற் றெழுத்தோ ராறுமுச்சரித்துப் பங்கயக் கடவுளை முனிந்தோன், றிவகிஞளி மலையைச் சூழ்ந்துமே லமர்ந்தசேயினைத் தெரிசனஞ் செய்யிற், கலையி லின்ப சாகரத் தழுந்துங் கயிலையங் கிரிக்கிறை யாவார். 24

உத்தமதரமாந் தலங்களோ ரனந்த முலகினி னிலைபெறு
முதனின், மெய்த்தகு தலங்க டில்லையே யாதி வியன்பதி பல
வத னுள்ளு, மத்த லுலயமா மேருவின் சிகர மீாகையா லறு
முக னமரு, மித்தட மலையி னிகர்வதாய்ப் புவியோ ரேழினி
னியம்புவ ரெவரே. 25

வேறு.

வன்பினு லந்தப் பதியினிற் கொலைசெய மதுவுண விலை
மாத, ரின்ப மார்ந்திடப் பொன்பணி களவுசெய் திடவெந்த
முறையானும், வெம்பிய மனத்தி னினைத்திடி லெண்சித்தி
மெய்முத்தி தருமென்று, லன்பி னுனினைப் பவர்பெறும் பேற்
றினை யாவரே யளப்பாரால். 26

சிவமலைச் சருக்கம் முற்றிற்று.
ஆ. விருத்தம், 64.

சத்திமலைச் சருக்கம்.

அத்திரவி ழித்திருமு கனைய னுட்ப
மெத்திசையு மேதொழு திறைஞ்சுசிவ வெற்பின்
மெய்த்தகுபு கழ்த்திரம் விளம்பினமவ் வெற்பே
சத்திமலை யென்றுபேர் தரித்தமுறை சொல்வாம். 1

வேறு.

கங்கை தங்கிய செஞ்சடைக் கடவுண் முனிமய
மங்கை பர்பினை தனையங்கு மணம்புரிந் தனந்தந்
துங்க வெண்மதி யொருபுடை யுதிகதெனத் தோன்றுந்
தங்கு பேரொளி வெள்ளியம் பொருப்பிடை சார்ந்து. 2

புவன கோடியுரு வமையில் கோயிலுட் புகுந்தங்
கெவரை யுந்தடை புரிகெனச் சிலாதர னியற்றுந்
தவப லன்றரு நந்திவந் தனைசெயச் சாற்றிப்
பவள வாயுமை நலந்தினைத் திருந்தனன் பன்னாள். 3

ஆய காலையி னிந்திரன் முதலிய வமரர்
காயும் வெவ்வட வைக்கனல் கடல்விடங் கடுங்கூற்
றேயுந் தீயசூ ரியற்றிடுங் கொடுமையை யெவர்க்கும்
நாயனார்க்குரைத் தகற்றுதுந் தூயரென நடந்து. 4

ஏன மன்னமுங் காணரு மிமையவ ருறையும்
வான ளந்தபொற் கோயிலின் வாய்தனில் வந்து
கூனி ளம்பிறைக் கண்ணிய மலைமகள் கொழுந
ஞான நாயக வருளுருவாகிய நாதா. 5

அறமனுத் துணை நினைகிலன் பாதக மனைத்தும்
நிறையும் நெஞ்சினுல் சூரனு மவுணனுல் நெடுநாட்
சிறையி னுற்றெமர் படுந்துயர் செப்பமுற்றுதா
விறைவ காத்தருணீயெனக் கூஉய்முறை யிட்டார். 6

வேறு.

திரைக்கட லொலிபோ லிந்திரன் முதலாந்தேவரிம் முறை முறை யிட்டு, மரக்கெறி குமுத வாயுமை புணர்ந்த தரியணை மீதில்வந் தையன், வரைப்புய நந்தி தனைவிளித் திங்கு வானவர் தம்மையுய்த் திடெனக், கரக்கம லங்கள் கூப்பியாங் கவனுங் கடவுளர் தம்மை யுள்ளுய்த்தான். 7

வந்திடு மமர ரெம்பிரான் கமல மலரடி பணிந்துமுன் நிற்ப, விந்துசே கரனுங் கவர்முக நோக்கி யியம்புவான் பொருவருஞ் சேனைத், தந்துபோ ரவுணக் குலங்களை வாட்டித் தருது நும் மியற்றிரு வினைத்துஞ், சிந்தையி லையம் கொள்ளலி ரிருக்கை சேருமென் றினிதருள் செய்தான். 8

அமரர்கள் விடைபெற் றகன்றபி னெம்மை யாளுடைக் குரவனை முகத்து, விமலனே ராறு முகத்தவ னுளன் மென் னுதல் விழிகளின் மிரண்ட, வமலமாம் புலிங்க முதித்தவப் புலிங்க மாறையும் பவனனக் கினிவா, னிமையவர் பரவுங் கங்கையி னுய்க்க விவரவை தாங்கமைந்திலராய். 9

சந்திர மவுலிக் குரைக்க மற்றவனுஞ் சரவண நதிக்குற மிகவுந, தந்தனு லுய்க்க வாறுமா மகவாய்ச் சலசமென் மலர் மிசை மிளிர்ந்தாய், வந்தரான் முகனுஞ் செந்திருமாலும் வானவர் முதல்வனுந் துதிக்க, விந்திளம் பிறைபோல் வளர்ந்தினி திரு ந்தா னிறையவன் விழிவருங் குமரன். 10

வகிர்மதி புனையும் வேணியன் விழியின் மைந்தனைத் தந்த ருள் செய்தி, சகமுழு தீன்ற வெம்பெரு மாட்டி தானறிந் திற் றைநாள் வரையி, னகமகிழ்ந் தன்பாய்த் தன்னிடமாக வருள் புரியாதுகண் ணிடமாய், மகவினைத் தந்தா னென்றுவெங் கோவ மனத்திடை யினைத்திட வெழுந்தாள். 11

குருமணிக் கலன்க ளழுத்திடும் பசிய கொம்பென நடந் திட மலைமான், மருமலர்க் கமலச் சீறடி பெயர்ப்ப மற்றவள் தா ளணிசெம்பொற், பரிபுர பதனை யெந்தை நோக்குதலும் பதித் திடு நவமணி யதனிற்; றிருமக டனினு மெழில்பெறு மொன் பான் சேயிழை யவருதித் தனரால். 12

மின்பரி புரத்தி லுதித்திடு மொன்பான் விளங்கிழை யவ ரையு மெந்தை, யன்பொடு நோக்க வம்மடந் தையர்தம் மாலிளந் தளிரிளவயற்றி, னின்புறு கருப்ப முறுதலு மதனை யிமய மான் கண்டுவெந் தழலிற், பின்புநெய் சொரிய மூண்டிடுங் கனல்போற் பெருகுவெங் கோபமேற் கொண்டு. 13

வேறு.

பரிபுரந்தரு பாவையர் தங்களைப் பார்த்துக்
குருமணிக்கலன் றுங்கிய கொம்பனீர் நீர்கொள்
கருவு யிர்த்திடா திருந்திடக் கடவிரெ னறிசைத்துக்
கருமுகிற்குலம் கண்படு கயிலையை நீங்கி 14

திருவும் வாணியும் தவஞ்செய்துந் தீண்டுதற் கரிய
விருமலர்ப்பதஞ் சிவந்திட நடந்துதெற் கேகி
மருமலர்ப்புரம் பொடித்தகார் முகத்தினில் வந்த
வொருந்த னிப்பெருஞ் சிவமலைச் சாரலி னுற்றாள். 15

இருள டங்கலும் பருகிட வெழுந்த செங்கிரணத்
தருண பானுவிற் றிகழுமச் சிவமலை தனைக்கண்
டுருகு மன்பொடு தடக்கிரி யுச்சியி லொருபா
லருளொ டுக்கவ முயன்றுகொண் டிருந்தன ளமலை 16

இன்ன வாறுமை தவமுயன் றிருந்தன ளாக
மன்னு மாபுரந் தனிலவரு மொன்பது மாதர்
சினை யொன்பதி நதியுடன் கடுக்கையுஞ் செறித்த
பொன்னின் வார்சடைப் புண்ணியன் றிருவடி போற்றி 17

ஐய வெங்களுக் கண்டங்க ளனைத்தையு மீன்ற
தைய லம்பிகை தந்திடுங் கொடியசா பத்தான
மெய்யு றுநகருஞ் சமந்தியா மெலிந்தனம் விரைவி
னுய்யு மாறருள் புரிகெனப் பணிந்தினி துரைத்தார் 18

இரந்து வேண்டிய மாதரை யெம்பிரா னோக்கி
முருநகை யொன்றிடு மோன்மா துமையவண் முனிவாற்
புரிந்த சாபத்தை நீக்குவார் புவனத்தி லெவரோ
திருந்த மற்றவ ளிடத்தினி னீவிர்கள் சென்று 19

அன்பி னோடிரா பகலினு மவள்பணி தலைக்கொண்
டின்பு றப்பணி செய்திரே லுங்கள்பா லிரங்கி
யன்பினாற்புரி சாபத்தை மாற்றுவ ளுங்க
ளின்பெலா மகன் றினியதாஞ் சுகம்பெறு வீரால் 20

தெக்க ணத்திசை தனிலுயர் சிவமலை யிடத்தின்
மைக்கண் மாதுமை தவத்திருக் கின்றன ளவளை
மொக்கு ளன்னபூண் முலைத்துணை மடநல்லீர் நீவி
ரிக்கணத் தினிற் சென்மினென் றிறையவன் மொழிந்தான்

ஏற்றின் மேல்வரு மெம்பிரா னருள்சுரத் தினிதாய்ச்
சாற்று வாசகஞ் சிரத்தினு மனத்தினுந் தாங்கி
மேற்ற லைக்கிழித் தெழுஞ்சிவ வெற்பில் வந்தெய்தி
யாற்று நற்றவ வுமைமுன்வந் தடிதொழு தேத்தி 22

வம்பி ருழுவைமா தமொன் பதின்மரு மதங்கொள்
கம்ப மாவுரி போர்த்திடுங் கண்ணுதல் புனைந்த
தம்பி ரான்புகல் மொழிப்படி தடங்கிரி யுதவு
மெம்பி ராட்டிசொல் லேவல்கள் செய்தினி திருந்தார். 23

வேறு.

அண்ட கோடிக ளனைத்தையு மீன்றுகாத் தருள்செயு மெம்மன்னை, கொண்ட வெஞ்சினந் தணிப்பதற் காகவெவ கூற் றுயி ருண்டாளார், றண்டி பூரயணி மால்மழு விடையின்றிக் கலசமென் கரந்தன்னின், மண்டு தீம்பு மறிநுதல் விழியிள மதிகொன்றை மலர்த்தாரும், 24

கரிய கண்டமுங் கரந்து வெண்ணீற்றொளி கவின்றரு தனி மெய்யுந், தெரிய நான்மறைப் பாதுகை மீதினிற் சேர்த்திய திரு த்தாளு, மரிய யோகபட் டிகையுங்கட் டங்கமு மாகமன் மத கோடி, யுருவ மிக்குள தவரென வடிவுகொண் டுமைதிரு முன் வந்தார். 25

வந்து நின்றிடுந் தவர்தமை யிருமென மணிப்பொற்று தனமி ட்டுக், கந்த வார்குழ லாரியை கூறுவாள் காசினி தனினீவி. ரெந்த நாடிங்கு வந்ததென் காரிய மியம்புமி னெனவெந்தை யிந்து ரத்திரு நுதற்கயல் விழிமினேன் செய்புது மினிக்கேளாய்

வேறு.

எந்த வூருமெந் நாடுமெப் புவனமு மெமக்குச்
சொந்த மாயினும் வேலைசூழ் தொல்புவி யிடத்தில்
மந்த ராசலத் துத்தர திசையினில் வசிப்போம்
புந்தி யார்வமோ டிங்கியாம் வந்தவற் புதங்கேள் 27

இந்தி மங்கையைத் தூடியிடைக் கமலையை யிகழ்திடுங் கவின்சேருங், கலவி வாமனத் தருந்ததிக் கதிகமாங் கற்பும் வாரிதிசூழுந், தரணி நேர்தரு பொறையுநற் குணங்களுந் தரு மழு மூயிர்க்கன்பு, புரியுஞ் செய்கையு மீகையுஞ் சீலமும் புகழ் மையுந் தவப்பேறும். 28

பெருமையும் பெறுமங்கையும் பருவமாம் பேதைதனை
கழைமென்றோள், மருவியீரெழு புவனத்தும் நிகரிலா மைந்
தனைத் தரவுள்ளங், கருதி யத்தகு கனனியை யும்பரிற் காசினி
தனிலெங்குந், துருவி வந்தனன் கண்டனை முன்முன்செய் சுப
தவப் பெரும் பேற்றால். 29

கரிய மைவிழிச் சிற்றிடைப் பசியதோட் கன்னிநீ யரிதா
கப், புரியு மாதவப் பேறும்யாஞ் செய்திடும் புண்ணியத் திர
ளான, சரிதை யின்பயன் தானுமொன் றாயது தயவுசெய் திடி
லென்னே, யரியநன்மக வுதித்திடுங் காலையி லருக்கர் நேரா
யென்று. 30

தவ வுருக்கொடு வந்தவ ரிம்முறை சாற்றலு முமைகே
ளாச், சிவ சிவாவென மலர்க்கரங் கொடுதுளைச் செவிபுதைத்
தயர்ந்துள்ளங், குலவெட னப்பனைத் தெழுமுலை சுமந்திடை
கொம்பரி னசைந்தொல்க, வயண கன்றிரண டடிபெயர்த் திடு
முன மருமறைப் பொருளானேன். 31

நஞ்சமர்ந்திடு மிடறுமுக் கண்களும் நாலெனுந் திரடோ
ளும், பிஞ்சுமா மதிநதியறு கிதழியும் பிணையலும் பொலிந்தோ
ங்கும், பொன்செய் செஞ்சடை மகுடமுங் காணவே பொரு
விடை மேற்றோன்றி, யஞ்ச லஞ்சல்நீ யெனவுமை கரம்பிடித்
தாண்டகை யிவைகூறும். 32

வேறு.

அந்த வார்குழற் கவுரிகே ளினையன்றிக் காதன்
மைந்தனைத்தர வேதுவேண் டின்னுடன் மருவு
மந்த மில்லதோ ரனைத்து முள்ளடங்காம
லெந்தம் பார்வையின் வந்தன னிணையிலாக் குமரன் 33

மனைமதிக் கரு வழிவரு வுருக்கொடு வந்தருண் மகவுந்தா
னினைது யாமக வேயன்றி வேறில்லை நிகழ்ந்தது மதனைக்கே,
ளனையு சேயைநீ விழியினிற் காண்குதி யனையொடு மணிக்கசத்,
தன தடங்களிற் யால்கரந் தொழுகுமித் தன்மையுந் தெரிவா,
யால். 34

இந்தி மால்வரை தன்னினீ யருந்தவ மியற்றிடு மதனுலிக், கந்தரக்கிரிப் பெயர்கூத்தி மலையெனச் சொற்றிடப் பொலிந் தோங்கு, மந்த ரத்தளவாம் வெள்ளி மலையினு மதிகநல் விருப் பாய் நின், மைந்த னுங்குகன் வாசமுற் றிடுமிதன் மகிமையா ரறிவாறே. 35

என்ன வோதிமுன் னேன்மலை மங்கையை யிடபமே னுகந் தேற்றித், துன்னு பூதவெம் படையொடு கயிலையரு சோதி மால் வரைச்சார்பிற், பொன்னி னுண்மல ரம்புயம் பூத்திடும் புனற்சர வணத்தெய்தித், தன்னை நேரிலா னுமைமுக நோக்கி நின்றனையரைக் காணென்றான். 36

பனிவ ரைத்திரு மாதுமம் மகார்தமைப் பார்த்தினி தருள் கூர்ந்து, நனி மகிழ்ச்சியின் மூவிரு சேயையும் நளினமென் கர மோச்சி, யினி தெடுத்தன ளோருரு வாய்முக மிரண்டுமூன் றுருமுந்நான், கெனு மணிப்புய மாகினன் மேலவர்க் கிறை வனுமொரு கந்தன். 37

அன்ன தன்மைய தாகிய மைந்தனை யணிமணிக் குறங்கே ற்றிப், பொன்னி னன்னமென் றிதலைகள் பூத்தெ தாளிர் பொம்மல் வெம் முலைத்தீம்பா, றன்னை நன்மணி வள்ளத்திற் சொரிந்து மைந்தனுக் கருளுட னூட்டி, யென்னை யாளுடை யானுக்குந் தனக்கும் நன்னிடையில் வைத்தினி தாக. 38

சுரர்கள் கற்பக நறுமலர் பொழிந்திடத் துந்துமி யைந்தா ர்ப்ப, வரகரா வெனக் கணங்களு முனிவரு மடியருந் துதித் தேத்த, விரவுசூரர மகளிர்முன் னடித்திட விஞ்சைய ரிசைபா டக், கரையிலா மகிழ் சிறந்திட விணையிலாக் கயிலையுச்சியி னெய்தி. 39

ஏற்றி னின்றிழிந் தெம்பிரா னிமையவெற் பீன்ற மங்கை யுமாகு, மாற்றருந் திறற் குகனொடுங் கோயிலின் வந்தரி யணை மீதில், வீற்றிருந்தனன் பூவினின் வந்தவன் மேகமேனியன் விண்ணோ, ரேற்றல்சால்கண நாதரு முனிவரு மடியிணை பணி ந்தேத்த. 40

வேறு.

கொந்த லர்க்கருங் குழலுமை வெள்ளியங் குவட்டிற்
சிந்தை யன்பொடு பரனுடன் சென்றபின் சிலம்பின்
வந்த மாதரார் கொள்கரு மூன்றிரச்சியால் வருந்தி
யந்த ரத்துயர் சிவமலை யதனிலே யிருந்தார். 41

சத்திமலைச் சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் 105

வீரைச்சருக்கம்.

வேறு.

சூரனெஞ்சமுங் கிரவுஞ்ச சயிலமுந் துளைத்த வேலனைத்தந்த
காரைநேர்கரு குழலுமை தவஞ்செய்த காரண மதனுன்முன்
றாரை வென்றிட வருமலை சத்தியென் றுற்றதை யுரைத்தாம்பின்
வீரைமாநக ரென்றொரு திருப்பெயர் மேவியகதை சொல்வாம் 1

வெள்ளி மால்வரைக் கோயிலி னரியணை மேவியபின் வெள்ளைப்
பிள்ளைமாமதிப் பிளவணி வேணியன் பிராட்டி தன்முக நோக்கி
வள்ளைவார்குழை மாதுநின்பத மலர்மணிச்சிலம்பினில் வந்த
கள்ளறுமலர்க் கோதையர் கொண்டிடுங் கருப்ப மங்கதனாலே. 2

பொருவி லாதமெய் வருந்தின ரவர்பெறும் புதல்வரா னவராரு
மருளி னேடிநீ நல்கியகுமரனுக் கன்புட னேவற்செய்
பெருமை நீங்கிலாத் துணைவராய்த் தூணிடை பிறந்திடுமரிபேறு
வெருவலங்கையாற்புடைத்திடும் வலியுளவென்றி வீரர்களாவார்.

அன்னதாலவர் கருவுயிர்த்திடும்வகை யருள்புரி கெனவீசன்
சொன்ன வாய்மைகேட்டகங் களி தூளும்பிடத் தோகைநல்லவளுங்கா
ரென்னுமைவார்குழ னூபுரமாதர்க ளின்னணமினிதாகப்
பின்ன மின்றியே கருவுயிர்த் திடவெனப் பேசின ளருளோடும்.

வாரிணங்கிய மூலைத்திரு மடந்தையும் வாணியும் பணியுந்தாட்
பாரவெம்முலை யுமையவ ளிம்மொழி பகர்தலுஞ் சிவவெற்புச்
சாரல்வாயுறு மொன்பது மாதருந் தடக்கையின் வாள்கொண்ட
வீரவாகுவே யாதிய வொன்பது வீரர்கடமைப் பெற்றார் 5

பின்னுமவ்வட மாதர்கள் வெயர்வையிற் பிறந்தனர் விறல்பூண்ட
மன்னு வீரமா ரிலக்கரிவ் வாறவர் வந்திடு மதனாலே
பன்னு வீரமா புரமென வாயதப் பதிக்கினி தாம் நாம
மின்னு மப்பதிக் கேதுவால் வரும்பெய ரிசைத்திட முற்றுதால். 6

வேறு.

ஒருமிவ் வண்ணம் வந்த விலக்கத் தொன்பானும்
வீரர்களாரு மெய்ச்சிவ வெற்பின் மீதேறிக்
காரமர் கண்டத் தெந்தையை யுன்னிக் ககனத்தா
ராரும் வியப்புற வேதவ நோற்றா ரதுபோது. 7

வேறு.

வீறுபெறு நானுமுகன் மேயபத மின்று
மாறுமென வெவ்வெளிமருண் மேவமணி வண்ண
னீறில்பத மானதுமி னித்தவிரு மென்று
வேறுபல வெண்ணமுற மெய்த்தவ மிழைத்தார் 8

இன்ன வாறிவர் தவம்புரிந் திடுமதை யிதழிப்
பின்னலான் றிருவுளத் தெண்ணி யவர்க்கரும பெற்றி
தன்னை நல்கிட வண்டரக ளனைத்தையுந் தந்த
மின்னிடைக்கொடி குகனொடு மவிடையின் மேற்கொண்டு 9

தொலைவிலா வலிப்பூத வெப்படைத் திரள்சூழக்
கலையரிக் குலம் நெருங்கிய சிவமலைக் கண்வந்
தலகிலாத் திறல்வீரர்க ளானவர்க் கெல்லாந்
தலைமை வீரவாகுப் பெயர் தரித்தவற் பார்த்து. 10

புரங்கொல் புன்னகைப் புண்ணியன் கூறுவானீவி
ருரந்தவா துசெய் தவங்கண்டு நெஞ்சக முவந்தேம்
நிரந்த ரந்திரு நீங்கிடா நிலைமையா யிருக்க
வரங்கள் வேண்டிய துரைத்திடும் வழங்குது மெனலும். 11

ஐய நின்றிரு வடிமலர்க் காம்பணி விடைசெய்
துய்ய வேண்டுமென் றிசைத்தனும் பரமனுண் மகிழ்ந்து

கையில் வேற்படை தாங்குமிக் கந்தனென் சிறுவன்
மெய்ம்மையாக நும் முன்னவ னெவரினு மேலோன். 12

இவன் மொழிப்படி யேவல்செய் தாற்றுமி னெமக்கும்
புவனம் யாவையும் தந்தவிப் புனிதைக்குஞ் செய்யும்
தவலருப் பணி தனிலொரு சகத்திர மடங்கா
மிவனளிக்குவ னீவிர்வேண் டிடுமிய லனைத்தும். 13

என்னவே புகன் றெம்பிரா னுமையொடுங் கயிலை
தன்னி லெய்திலாக் கோயிலைப் புக்கிருந் தனன் சயிலக்
கன்னி தந்திடுங் குமரனைச் சிவமலைக் கானின்
மன்னு வீரராந் துணைவர்பா லருளொடும் வதிந்து. 14

வேறு.

கயத்தொடு கயத்தை மூட்டிக் கடுஞ்சமர் விளைத்தும் வெற்பாம்
புயதது ணை வீரர் மற்போர் புரிந்திடச் செய்துஞ் சீற்ற
வயத்தொடு வயத்தைத் தாக்கி யரியபோர் மூட்டிவித்துஞ்
செயத்தகு மிவ்வா றுடனெறிந் துவீற் றிருந்தார் மன்னே 15

ஆர மார்பலை நாடிர மாதர்க ளருளும்
பார வாகுள வீரர்க ளப்பருப் பதத்தின்
சாரல் வாயுதித் திடுதலா லப்பதி தனக்கு
வீர மாபுர மென்றுபேர் விளங்கிய தன்றே. 16

வீரைச் சருக்க முற்றிற்று.

ஆ விருத்தம். 120

அகத்தியமுனி உபதேசச் சருக்கம்.

முனிதருஞ் சுரர்களு மாதவஞ் செயும்
புனிதருந் தொழுந்தலைப் புகழ் பகர்ந்தனம்
கனிதரு மனமினா கந்தவேள் குறு
முனிவனுக் காகம மொழிந்த தோதுவாம் 1

கருந்து ழாய்பசுங் கண்ணிய னுந்தியங் கமலத்
திருந்து வந்திடு மயன்றனைக் குட்டிமே னிவ்வா
றருந்து னைவரோ டாடல்செய் திருக்குமந் நாளில்
வருந்து மும்பர்க்காய்க் கடலுணு முனியங்கு வந்தான். 2

வேறு

வந்த மாதவன் றூவிரு முகமுடை வள்ளல்
கந்தமா மலர்ச் சேவடி பணிந்து கைகூப்பி
முந்தை வேதனுந் தெளிகிலா மறைப் பொருண் முழுது
மெந்தை பேயெனி யென்றெரிந் திடும்வகை யிசைத்தாய் 3

ஆங்க தன்றியே பஞருசலிக் கமலன்முன் னுரைத்த
தீங்க கன்றிடும் வடமொழிக் கெதிர தாய்ச் செப்பும்
பாங்கி ருந்தமி ழியலெலா முரைத்தனை பரிவாற்
றேங் கருட்கிட னுனையன்றி வேறிலைத் தெரியின் 4

மாற்ற ரும்பிறப் பறுத்துநின் மலரடி நிழலின்
வீற்றி ருந்திடும் படிக்கருண் மெய்ம்மையா கமத்தி
னாற்றை பேற்கினி தருள்செய வேண்டுமென் றடியிற்
போற்றி நின்றிடக் கருணையாங் குமரவேள் புகலும். 5

தருமசிந்தனை யுடையவ ராய்த் தவம் பயின்றவராய்
அருமறைப் பொரு ளாய்ந்திடு மகத்தராய்ச் சஞ்னக்
கருவகற்றிடு முயர்ச்சியிற் கலந்தவன் பினராய்ப்
பொருவி லாவுயி ரிடத்தன்பு பூண்மனத் தினராய். 6

ஆக்க மாகிய வரனுரு வாகுமஞ் செழுத்து
நீக்க மின்றியே பயின்றிடும் நினைவுடை யவராய்த்
தீக்கை சுத்தரா யிருக்குமச் செய்கையோர்க் கிறைவன்
வாக்கி னாற்சொலு மாகமம் வகுந்திட லாமால். 7

தான நன்மகம் பொறைதவந் தருமநல்லொழுக்க
மேன்மையாங்குல மொடுகல்வி விச்சையாசார
மானதம்வெளி யிரண்டினும் பூசனைமகிமை
யானநற்குண மியாவுமுன் னிடத்தினினமைந்த. 8

ஆதலா லுனக் கோதலா மெனவுரைத்தங் குப்
பேத மொன்றிலாத் துணைவராம் வீரசைப்பிரிந்து
தாதகித்தரு நீழலிற் றணித்திருந் தினிய
வாதரத்துடன் குறுமுனி தெளிந்திட வருள்வான். 9

வேறு.

எந்தைதன் ஞான்கு திசைமுகந் தனினு மெழுந்த தாலியப்பருவேத
மந்தமி லுச்சி முகத்தினி லுதித்த தாகம மதனை யெம்மன்னை
வந்தனை செய்ய வுரைத்தன னெந்தை மற்றவன் மடியினிலிருந்து
சிந்தையன்புறயாம்கேட்டன மதனைத் தெருட்டுவ னுனக்கெனச்செப்பி.

வேறு.

பகரு தற்கரும் பதிபசு பாசமோர் மூன்று
மிகழ்வி லாப்பதி போலவவ் விருமையுமனாதி
தகைமை யாகிய பதியினைச் சார்ந்திடா பாசம்
நிகரிலப்பதி பொருந்திடிற் பாசம் நில்லாது. 11

என்ன வவ்விய றனையெலா மெடுத்தினி தியம்பி
பன்னு மங்கையிற் கனியெனத் தெருட்டினன் பதும
னின்ன முநதெரி யாமறைப் பொருளினை யீசன்
தன்னுளம்பெரு மகிழ்வுறச் சாற்றிய குரவன். 12

அருளொடுங்குகன் மொழிந்திடுமாகம மனைத்தும்
மொருதரஞ்சொன வுடனுணர்ந் தலகெலாஞ் சொல்லும்
பொருளுமபோனிறைப் பூரண வடிவ மாந்தன்மை
மருளெலாங் கெடத் தெளிந்தனன் மலையமா முனிவன்.

அகத்திய முனி உபதேசச் சருக்கம் முற்றிற்று.
ஆ விருத்தம். 133.

அகத்தியமுனி பூசைச் சருக்கம்.

மாயச் சூரன் மருக ரிருவர் மெய்
தீயக்காய்ந்திடுஞ் செந்தமிழ் மாமுனி
நேயத்தான் மலை நேரிழைந்தநதருள்
சேயைப்பூசனை செய்முறை யோதுவாம்.

எந்த வேளையில் யாதுகேட்பினுமவை யாவுஞ்
சிந்தையாகுலந் தீர்த்திடச் செப்பின னெனக்குக்

வேறு

தந்தை தன்னினுந் தாயினுந் தமரினு மன்பர்
எந்தை கந்தவே ளெனநினைந் தகத்திடை யினிசைப்பான். 2

வேறு.

வரையரசன் பண்டுசெய்த மாதவத்தின் வந்தவிள மானின்கன்றே
கரையில்பிற விக்கடலைக் கடக்கவருள் செய்தபெருங் கருணைக்குன்றே
இரவு பகற்றனித்துணையே யுயிர்க்குயிரே யாருமிணை யில்லா நின்னை
யரவியருச்சனைபுரிய வென்மனது பூண்டதெனப் பரிவிற சொன்னான். ௩

வேறு.

வேலையுண்டிடுந் தவமுனி யிவ்வுரை விளம்பலு மதுகேளாச்
சேலைநேர் விழியுமையவ ளருளிய திருமகனொரு கோடி
காலையாதவ னொருபுடை யுதித்ததெனக்க விணுறுபடிவத்தின்
நீலமாமயின் மீதினிற் றோன்றினனிகரில வேறுபடை தாங்கி. 4

முனிவரன்கண்ட தீர்த்தமு மகிழ்ச்சி மூண்டிட நீர்படிந்திடுதற்
கினியமா தீர்த்தமொன்று கண்டங்கை யிருந்திடுங் குண்டிகைக்கங்கை
தனையுமுட் கலந்து படிந்து நீறணிந்து சங்கரன் விழிமணி தாங்கிக்
கனியுமன்புருவா யாறெழுத்தெண்ணிக் கந்தவேடிருமுன்பு வந்து. 5

நெய்முதலா னறியகுற டெரிஞ்சகுழம்பிருக நிறையவாட்டி
மைதவிர்கங் காநதிமஞ்சனமாட்டி கலைமருட மணிபபூணோடு
கொய்மலர்த்தா மஞ்சாந்தங் குளிர்நானமிவைபலவுங் கூற்றைக்காய்ந்த
வையனுரை யாகமத்தின் விதிப்படிக்குவளைநதமுத மாதியாக. 6

வேறு.

திருமுன்புகிவேதனஞ்செய் தீபெட்டு முகமணியற் றிப்பின் செய்யும்
பொருவிலருக்கிய முதலா யீந்துகந்த வேள்மலைத்தார் பூசைமுற்றுங்
கரவிலன்பினுடன் புரிந்து தொண்டர் தமக்கிரங்கியிரதக் கடியகானி
லருளுருவாய்முளைத்தனையென் றஞ்சலித்துத் துதிக்கின்றானன்பினோடும்

வேறு.

மூவர்கண் முதல்வனான முக்கணன் குகனேபோற்றிக்
காவியங் கருங்கட் செவ்வாய்க் கவுரிதன் மைந்தபோற்றி
பாவியேன் பிழைகணோர்த்துப் பணிக்கொள வந்தாய்போற்றிப்
தேவர்கட்கிட்டோய் போற்றி சிவமலைக் கொழுந்தேபோற்றி 8

வெய்யதா னவர்கள்செய்யும் வினையினுன் மெலிந்து நீற்கு,
மையர்க ளுய்யவந்த வருட்பெருங்கடலே போற்றி
மையல்கொண் மனத்தேனின்பொன் மலரடிக்கன்ப னாகச்
செய்யவிங் குவந்துவந்த சிவமலைக் கொழுந்தே போற்றி. 9

தத்தியதிரைநீர்வேலிச் சகத்தவ ரமரரியார்க்கும்
யுத்தியுந் தருமப்பேறும் பொருளுநல் லுண்டிடக்கப்
யத்தியுமெளிதினங்கைப் பழமெனவிருநான் கென்னுஞ்
சித்தியுமுதவவந்தசிவமலைக் கொழுந்தேபோற்றி. 10

வேறு.

எனத்துதித்திறைஞ் சிடுங்குடமுனிவன்மே லெம்பிரானரு ளுள்
கூர்ந்து, சினத்தைவென்றிடு முனிவனின்னெழுக்கமுஞ்செய்த
பூசையுமன்பு, மனைத்துங்கண்டியா முவந்தனம் வேண்டிடு
மருவரங்கேளென்ன, மனத்தின் மாசறு முனிவனு மண்ணலை
வணங்கிமற்றிது கூறும். 11

கார்த்திகைத்திட வருங்குழலுமையவள் கண்மணி யெனவந்த
கார்த்திகேயநின் னடிமலர்க்கருச்சனை கடையனேன்செயுமிந்தக்
கார்த்திகைப்பெரு மதியினிற்கலைநிறை கதிர்மதியுடன்சேர்ந்த
கார்த்திகைத்திரு நாளினிலெந்தைநீ கருணையினினிதுற்ற. 12

இந்தவெற்பினைத் தரிசினஞ்செய்தவ ரித்திருநகர்தன்னின்
வந்திருந்தவர் வந்திடமுயன்றவர் மதித்தொருகணமேனுஞ்
சிந்தைசெய்தவர் பாதகராயினுந் தீயவெம்பகைநீக்கி
யந்தமில்பெரும் போகங்கடுய்த்துநின் னடிமலர்பெறவேண்டும்.

இன்னுமோர்வர மியான்கண்டதீர்த்தத்தை யெளிதினிற்றரிசித்
தோர், மன்னுமங்கையாற்பரிசித்தோரங்கதில் வரன்முறைபடிந்
தோர்கள், சென்மமேழினிற் செய்திடும்பவவினை தீர்ந்து நின்
மலர்ப்பதை, நன்னிழற்கணே யினிதிருந்திடும்படி நல்லருள்செ
யவேண்டும். 14

என்னவேபொதியாசலமுனிவர னிசைத்தலு மதுகேளா
என்னதாகெனப் பணிந்துமைமகன்பொதி யாசலந்தனின் வந்து

மாமணிமுடியமரர்தவ னைச்செலவிடுத்துமெய் மகிழ்ந்துவீரர்களோடுந் தன்னதிச்சையா யாடல்செய்திருந்தனன் தடவரை நெடுங்கானில். 15

அகத்தியமுனி பூசைச்சருக்கம், முற்றிற்று.

ஆக விருத்தம். 149.

அநுமன் பூசைச் சருக்கம்.

வாரிவரப்பக் கிரியுருவ வடிவேல்விடுத்தோன் றிருவடியின்
வாரியயின்றோ னருச்சித்து வழுத்துமாறு சிறிதுரைத்தேம்
வாரிதுயின்றோ னேவலினான் மலர்மான்சனகி தனைத்தேட
வாரிகடந்தோன் குகனடியின் மலரிட்டருச்சிப் பதுசொலுவாம்

அந்தமேருக் கொடுமுடிக ளதிரப்பிடுங்கி த்திசையதனுற்
சிந்த வெறியும் வலிபடைத்த திறல்சேர்வாயுச்சிவ னருளாற்
றந்த மதலை குகனைநெஞ்சிற் றரிக்குமறிவன் பொரவெதிர்த்து,
வந்தவவுணர் காலனனு மானென்றுரைக்கும் வயவீரன். 2

வேறு.

மாதவஞ்செய்யச் சிந்தையிலுன்னி வளம்பெறு காசியில் வந்து, மேதகு கங்கை நதியினிற் றோய்ந்து மெய்ம்மையாம் வெண்பொடி யணிந்தங், கோதரு மெழுத்தஞ் செண்ணிவானள வு மோங்கிய பனிவரை மகடன், காதலனுயகனைப்பூசனைசெய் துட் கனிவொடு துதித்தினி திறைஞ்சி. 3

ஆலயவலமாய்ச் சூழ்வருபோதி லருமறைமுடிவெலாந் தெளிந்த, சீலமாதவனும் வியாதனுங்குறலுந் தெரிந்துமா முசுக மனங்கியம்பிக், காலமோர்மூன் றுந் தெரிந்திடுமுனிவ கருதருந்தவஞ் செயக் கடல்சூழ், ஞாலமேற்புனித தலமுறையென்ன நான் மறைமுனிவர னவிலும். 4

பரிதிதன்னிடத்தி லரியதாங்கலைகள் பயின்றிடு மனுமகே னெஞ்சிற், கருதியவரங்கள் விரைவினிலீந்து கதிதரு மொரு தலமதனிற், சுருதியுந் தொடரா வெம்பிரான்றனக்குத் தூயமா மறைப்பொருளுரைத்த, குருபரனுனவள் ளிலைகெடுவேற் கொற் றவனினிதுவீற் றிருக்கும்,

சிவன்மலையதன்பே ரக்கிரியிடத்திற் சென்றுவானவர்த மைக் காக்க, வுவரிநஞ் சயின்ற நீலகந்தரத்தி னொருவனைப்ப திட்டைசெய்து வப்பின், கவளமாகளிற்று முகன்பினருதித்த கந்தவேடனையுமர்ச்சிக்கிற், பவமுழுதகற்றி வரம்பல பெற்றுப் பாசமோ சனஞ்செயலாமால். 6

அன்னமாதலத்தி னறுமுகத்தவனை யருச்சனைபுரியிலிவ் வகிலந், தன்னிடைப்புனித தலந்தொறுமுறையுஞ் சம்புவையு மையையுங் கரனை, மின்னயிற்கரனைச் சிவாகமநூலின் விதி வழிவழாமன்மெய் யன்பின், பன்னருமுகம னுடனருச்சனைகள் பன்னிய பயன்தரு மாதோ. 7

வேறு.

தெக்கணதி சைக்கணது செம்பொனுரு வாகு
மக்கிரிவ ராககிரி யானதின் வடக்கு
முக்கணன் விருப்பொடு முடிக்குநதிநேரா
மிக்கபுவி யோர்புகழ் காவேரிநதித்தெற்கு. 8

ஆதிசிவன் பட்டிமுனி யன்பினொடு காணப்
போதியிடை தாண்டவம் புரிந்தநகர்க் கீழ்பால்
கோதில்பசு வுக்குநிலைகூட்டுபதி யென்ன
மேதினிசொல் வஞ்சிநகர் மேற்றிசைய தாகும். 9

வேறு.

கூறு மந்தச் சிவமெனுங் குன்றந்தான்
மாறிலாவண்ட மட்டுமுயர்தலால்
ஆறுசேர்சடை யான்சிவலோகத்துக்
கேறநாட்டிய வேணிநிகர்க்குமால். 10

எனவிவைமெனது சூரவனும் வியாத னிசைத்திடமாருதி வினவி, மனமகிழ்ந்தெழுந்து நருமதை நதியின் வந்ததி னியதி யிற்படிந்து, புனலிடைசுயம்பு வாய்முளைத்தெழுந்த புனிதமாமி லிங்கமொன் றெடுத்து, தினகரனூருந் தேரினைத் தடைசெய் சிவன்மலைச் சாரலின்வந்து. 11

வேறு

மண்கிழித் தாம்புவிசெழிக்க வருங்காஞ்ச நதியாடி
விண்கிழித் தோங்கும் புறத்தினெழு மேருமுடிச் சிவமலையைக்
கண்குளிரக் கண்டுதடங் கரங்குவித்தக் கிரியின்மிசை
மண்ணளிக்குஞ் சுருதிவழிய் வடியிலிங்கப் பதிட்டைசெய்து 12

ருத்திரன்மெய்யண் டருச்சித்துப் புனலாட்டிச் சாந்தமுதற்
சாத்தியபூ ஷணிவே தனஞ்செய்து தாழ்ந்து துதித்
தேத்திவலஞ் சூழ்வருபோ திரவிகிர ணம்புகுதா
னாத்திகிழ வினிதுறையு மருட்குமர னுருவுகண்டான். 13

வேறு.

கண்டவுடன் சூழ்ந்தெழுந்து கற்பகப்பூங்கை கொத்த கரங்கள்கூப்பி, விண்டமொழி தழுதழுப்ப வுடல்முழுதும் புளக மூற விழிநீர்சோர, பண்டொருகா லந்தனினு மறியாவற் புதம்பெருகப் பகர் பேரின்பத், தெண்டிரைவா ரிதியினிடை மூழ்கியருவுருவுருவாஞ் செய்கைதாங்கி. 14

தன்னையுநியாதமகிழ் தலைசிறப்பக் கூத்தாடித் தட்டமி ட்டுப், பின்னாவன் றிருவடியினருச்சனைசெய் தினியமுத்திபெ றச்சித்தத்தின், உன்னருங்கற்பகப்பூவி னலர்கொடுவந் தருச் சனைசெய் தயர்வான்கங்கை, யின்னறுமென்புனலாட்டித் தூசு சந்தமலர்மாலை யிவையுஞ்சாத்தி. 15

மானமுறை யிகழ்ந்ததிரு வமுதுமுதற் சிற்றுண்டி வன்க பாலியு மானகிலே தனம்பண்ணி யிடையிடையா சமனர்க்கிய மாதியீந்து, தூகலங்கொண் மூகமனீ ரெட்டுடனே மாபூசைது வன்றிச்செய்து, தேனொழுகு கடம்பணியுஞ் சேர்ந்தனடி தாழ்ந் துதுதி செய்யலுற்றான். 16

வேறு,

திரவாரி திடர்ப்பட வோர்கொடியிற்
கரவேறொடு காங்கய னேசரணம்
அரவாணை மெய்க்கணி யாயணிவோன்
குரவா சரணங் குமராசரணம். 17

மூட்டாமரை போலே முனிர்துவிலக்-கிட்டாய்சரண மி
றைவா சரணம், மட்டார்குழல் வாரண மாதுதனர், தொட்டா
டிய மாசுகனே சரணம். 18

திருமாலய னிந்திரன் மாதவர்சொல்—பொருளாகிய வற்
புதனே சரணம், அருளாலிம வெற்பர சன்மகளாம்-வருமாது
மை கண்மணி யேசரணம். 19

வேறு.

என்றுதுதித் திறைஞ்சிநிற்கு மநுமன்முனர் தோகைமயி
லேறிவாரனோர், குன்றெறிவேற் படைதாங்கி கருணையே திருவுரு
வாங் குமரன்றோன்றி, வன்றிறல்சேர் மாருதிநீ செய்திடும்பூ
சனை கண்டு மகிழ்ந்தோம் வேண்டும், நன்றுவரங் கேளெனவு
மஞ்சனைபுத் திரன்டாழ்ந்து நவிலுற்றான். 20

வேறு.

பிரசமா மலரின்மேய பிரமன்மா லின்னங் காணாப்
பரமனற் குரவனின்பொற் பதத்திலர்ச் சனைசெய்தன்பி
னிரவொடு பகலு நீங்கா தேவல்செய் துய்யு மிந்த
வரமரு ளடியேற் கென்ன வள்ளலுங் கருணைகூர்ந்து. 2

வேறு.

அருகதனில் வருதியெனப் புறந்தடவி கனகன்வலி யடக்
குத் தூணில், வருமடங்கலேற்றினிகர் புயவலியும் பெறுதியென
வரமுநல்கிப், பொருவருவா னதிநீருந் தருமலருங் கொணர்ந்து
நம்மைப் பூசைசெய்திங், கிருபின்முத்தி யுந்தருது மென்றுதன
துருவினிடை யிற்புக்கானல். 22

எந்தைபிரான் கருணைகொடு கொடுத்தவரம் பெற்றவன்று
னியம்புவண்ணஞ், சந்ததமுந்தப்பாமல் வானுலகிற் பாய்ந்து
நறுந்தருப் பூக்கொய்தங், கந்தரகங் கையுங்கொணர்ந்து குகனு
டன்சங் கரனையர்ச்சித் தங்குதன்பேர், வந்திடவோர் புனற்றட
ங்கண் டினிதுசிவ மலையினிடை வசிக்குநாளில். 23

காசினியெலாஞ் சூழ்ந்து யாழில்வல்ல நாரதன்றெக் கண
த்தை நோக்கி, மாசுதவிர்த் திடுகாசி கேதாரங் காஞ்சியண்ணா
மலைவேங்கைத்தாட், டேசமுனி பதஞ்சலிக்காப் பரமனிடங் கா

ட்டுசெம்பொற் றில்லையாதி, தேசுபுகழ்த் தலங்களெல்லாங் கண்டிறைஞ்சி யொப்பில்சிவ வெற்பில் வந்தான். 24

குடமுனிக்காத் திருவுருவங் கொண்டுவந்த சேய்தனையுங் குன்றந்த, மடமயிலை யொருபாகம் வைத்தபிரான் றனையும் வழிவாய்ப்பக்கண்டு, தடமலர்க்கை யிணைகூப்பி நிலமிசையெட்டுருப்புமுதற் றாழ்ந்தெழுந்து, திடமனத்தனுகிநின்றுதரிசிக்கும் போதனுமன் சேணிற்பாயந்து. 25

கற்பகநன் மலரொடுவிண் கங்கையுங்கொண் டண்ணல் குகன் கமலத்தாளில், அற்புடனன் னீராட்டித் திருமலரா லருச்சனைசெய் ததனைக்காணுஉ, மற்புயமா ருதியைமிகப்புகழ்ந்து முக மன்புகன்று வானிலுற்ற, பொற்புறுநன் மலரிங்கு வந்த தெவ்வா றெனமுனிவன் புகறலோடும். 26

வஞ்சகக்கம் பத்துடையோன் காமுழுது மொருநொடியில் வன்னிக்கீந்த, வஞ்சனைதன் மகன் புகல்வான் யாழ்முனிவ சூர்க்கிளைகளனைத்தும் வீட்டிக், கஞ்சமலர்க் கண்ணனயனிந்திரன்வானோர் முனிவர் கவலைதீயிற், பஞ்செனச்செ யெந்தைதனக் கரிய தோகற் பகப்பூ பகர்தி யென்றான். 27

மாருதிசொல் வினவியயாழ் முனிவானுஞ் சத்திசிவ மலையினீங்கிச், சீருலவும் பொன்னுலகிற் சென்றனனிந் திரனவன்சொல் செய்திகேட்டுப், பாருலகில் வந்து குகனடியிலருச் சனைபுரிந்த பரிசுபின்ன, ராருமறி யப்புகல்வாம் வாயுமகனாறு முகன் பொன்னடி நீங்காமல். 28

பத்தியுடனிம்முறையாய் நெடுநாளர்ச் சனைபுரிந்து பாமன் யாகம், வைத்தவுமை தருமதலை தாளிணையிற் பணிந்து நின்னை மறவாவன்பர்க், கொத்தமுத்தி யெனக்கருள வேண்டுமெனப் புகன்றிடலு மும்பர் போற்றும், வித்தகனுகிய குமான் மாருதியை நோக்கி யிவை விளம்புவானல் 29

நவிலரிய பல்கோடி யுகங்கண்டு வேண்டுவரநனிகள் பெற்றுப், புவியிலும்ப ருலகினிக ரெவருமின்றி மேருகிரிப் புறத்திலேகித், தவவடிவி னிருதியக்கண் வருதியாம் பின்னர்முத்தி தருது மென்னச், சிவன்மதலை விடைகொடுக்க வவன் பணித்த மொழி மனத்துஞ் சிரத்துந்தாங்கி. 30

மத்தகய முனிவன்பின் வந்தபிரா னடிநாளும் வணக்கஞ் செய்யச், சத்திசிவ மலேப்பிரியப் பொருந்தாமற் றனதுசத்தி தன்னிற்பாதி, எத்தலமு மிணையிலசிவமலை நிறீஇ விண்ணெ றியா லிலகுமேரு, அத்திரிபான் வடபாலி லினிதுசென் றங்கிரு ந்தனனலனுமன் றனே. 31

அநுமன் பூசைச் சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம், 180.

இந்திரன் பூசைச் சருக்கம்.

வேறு.

மந்தி ராசலம் பொருபுயமாருதி வந்து
புந்தியார்வமோ டருச்சனை புரிதிரம் புகன்று
மிந்தி ரன்குக னுடைமராடிய வேதஞ்
சிந்த வங்குவந் தருச்சனை செய்திற மிசைப்பாம். 1

அண்டமாயிரத் தெட்டினிற் செலுத்தர சாண்மை
கொண்ட சூரபன் மன்செயுங் கொடுமைகண் டஞ்சி
விண்டலத்தவர் யாவரும் மேருமால் வரையி
னெண்டி சாமுக முனிவரு மொருங்கமர்ந் திருந்தார். 2

அந்த நாள்வயி னொருபகன் மலேமக ளருள்சேய்
விந்தை யாடலை மதித்தொரு முகமதாய் மேவி
கந்த மாதனத் திருந்துதன் னிச்சையாற் ககனூர்
விந்த மாதிய பொருப்பெலாம் வேறுறு மகிழ்ந்து. 3

நண்ணு மால்வரைச் சிகரங்க ளிலமுற நாட்டிக்
கண்ண கன்றபாற் கடலினை யுவர்க்கட லாக்கி
எண்ணு மற்றய கடலேயும் வேறதா வியற்றி
விண்ணின் மீன்களை முறைபிறழ்ந் திடும்படி விடுத்து. 4

மன்னு திக்கயந் தனைத்திசை மாறிட மறித்துப்
பன்ன கங்களெட் டினையுமோர் திக்குறப் படுத்துப்
பொன்னி நாட்டுள தருக்களைப் புவியிடைப் பொருத்தி
இன்ன வாறெம்பி ரான்விளையாடல்செய் திருந்தான். 5

தேன விழ்ந்திடு கடம்பணி தடம்புயச் செவ்வே
ளானவன் செய்யு மாடலீ தென்றறியாமற்

ருனைவர்புரி மாயவஞ் சனை யெனமதித்து
வானவர் ச்த மகனொடுஞ் சினத்தொடும் வந்தார் 6

நாடி யீங்கிவை புரிந்தவர் யாரென நண்ணித்
தேடி னொரவர் தம்மையுங் கண்டிலர் திகைத்து
வாடி நின்றிடுங் காலையின் மதலையாய் வந்தங்
காடல் செய்திடுங் குமரனைக் கண்டன ரமரர். 7

மாய வஞ்சக வல்லனு மசுரனீங் கிவன்றான்
சேயனும்படி மழவுருத் தாங்கியிச் செய்கை
யேயெ னுந்துணைக் குள்ளினி தியற்றின னென்னாக்
காயும் வெஞ்சமர் தொடங்கினன் குமரன்மேற் கண்ணன். 8

விசய மாமழுத் தோமரஞ் சக்கிரம் வேல்வாள்
தசைமணங்கமழ் முத்தலைப் படைகொடு சரங்கள்
திசையெ லாஞ்சுடு தீப்படை புனற்படை திகாந்த
மசைய மண்டிடு மாதரும் படைமுதலனைத்தும். 9

குதலை மென்மொழி தெளிகிலா மழவுருக் கொண்ட
மதலை மேல்விடுத் தார்த்தன ரவைவந்து மலைமான்
றிதலை பூத்தொளிர் திருமுலைப் பாலயில் சேய்தாள்
அதனை மும்முறை சூழ்ந்துபின் போயின தன்றே. 10

தொட்ட யாற்பல படையெலா மதலைதன் றுணைத்தாட்
கிட்டி வந்தனை செய்தல்கண் டிந்திரன் கிளர்தோட்
டட்டி யாலமுண் டானலன் கவுத்துவந் தன்னை
யிட்ட மார்பினன் றானலனயனல னின்னும். 11

தக்கன்மா மகம் பொடியெழத் தேவர் மாதவர்கள்
திக்கெலாமிரிந் தோடிடத் தடிந்தருள் செய்யு
மிக்கவீரபத் திரனலன் சிவனுடன் மேவச்
சக்கரக்கா னுதவிய தனயனு மல்லன். 12

வீரமிஞ்சிய வவுணருஞ் சிறைவரும் வெய்ய
சூரபன்மனுந் தானல னுயிரந் துணைக்கைப்
பார கேசரிமுகனலன் மாயவன் படையை
பாரமாயணி தாரக னீரனு மல்லன் 13

மற்றுளார்வலி நமக்கிலை யேயா வெண மதித்துக்
கொற்றவச்சிரந் தனையெடுத் தெதிராய்க் குறுகி
யற்றலார் புரம் பொடியெழ நகைத்தவன் பாலன்
மற்றடம்புய வரையின்மே லெறிந்தனன் மாதோ. 14

துங்க வச்சிரப் படைவந்து திருவடி தொழுமுன்
கங்கை மைந்தனோர் கார்முகங் குனித்தொரு கணையா
லங்கெதிர்த்திடு மிந்திரன் முதலிய வமரர்
தங்கள் சென்னியும் புயங்களுந் துணிந்திடத் தடிந்தான். 15

அண்டர் கோன்முத லமரர்க ளியாவரு மமரிற்
கண்ட துண்டமாய் வீழ்ந்தனர் பொன்னவன் கண்டு
சண்டமாருத வேகமாய் வந்துமை தருசேய்
முண்டகப் பதந் தொழுதுமுன் னின்றிவை மொழிவான். 16

மாயை தந்திடு சூரபன்மன்னெனு மவுண
னேயு மண்டங்க ளாயிரத் தெட்டினுக் கிறைபூண்
டேய புனமுெழில் செய்விதத தனறியுஞ் செருக்காற்
றூய கற்புடைச சசிபுயந் தோய்ந்திட நினைந்தான். 17

அன்ன வாறுகண் டிந்திரன் சசியுட னகன்று
பொன்னின மேருவி னமரர்கள் சிலரொடும் போனன்
பின்ன ரிந்திரன் றருமகன் சயந்தனும் பெயரோன்
மூன்னும் வானவர் பலரொடு மும்பரில் வதிந்தான். 18

வெள்ள மாயிரஞ் சேனையோ டருக்கனை வெகுண்டேன்
கள்ள விழ்ந்தபூங் கற்பக நாட்டிடைச் சென்று
கொள்ளை யிட்டெரி யூட்டியிந் திரன்றரு குமரன்
றள்ளருந்திறற் சயந்தனென் றெருபெயர் தரித்தோன். 19

அத்தனிப்பெருஞ் செல்வனை யமரரைப்பற்றி
மெய்த்துணைக்கர முதுகுறக் கயறரினால வீக்கி
அத்தி நாளுறு வீர மாயேந்திரத்தடைந்து
சித்த நோகுற வல்லியிட் டருஞ்சிறை செய்தான். 20

என்று யோகுநீத் தெம்பிரா னியமா மயிலை
என்று நன்மணம் புணர்ந்தவ னிடங்கலந் தின்புற்

றென்று நின்றனைத் தருகுவ னிளம்பிறை போல
என்று நீவளர்ந் தருளிமேவிவ்விடம் வந்து. 21

குன்ற மன்னனோட் சூரரி முகன்முதற் கொடிய
கன்று வெஞ்சினத் தவுணரைக் கொன்றுபோர்க் களத்தி
லென்று நூற்றின்மே லெட்டுக மியாமிருந் துன்ப
மென்றுநீ தவிர்த்தரு ள்செய்வை யெனறுகாத் திருந்தேம். 22

ஐய நின்விளை யாடலென் றறிந்திலா தசுரர்
செய்யு மாயுமென் றெண்ணிநின் பால்வந்து தேவர்
வெய்ய தாஞ்சம ரியற்றியிங் கிருந்தனர் மிசைசேர்
மையலூழ்வினை வலியினு லவர்க்கிது வந்த. 23

தெரிகி லாதுசெய் தீமைகளனைத்தையும் பொறுத்துத்
திறவரம்பெறு சூரபன் மாவையுஞ் செயிதததுச
சுரர்களுய்ந்திடும படிக்கருள் புரிகெனத் துதித்துப்
பரவி யேபினும பணிந்தனன் பண்ணவர் குரவன். 24

அந்த மாதியின் றாகிய வருட்பெருங் குமரன்
சிந்தை யிற்பரி வாகியே தேவர்க டமமோ
டிந்தி ரன்றனை யெழுகென வெழுந்துவா தன்னோர்
கநத வேடிரு தாண்மலர் பணிநதுகை கூப்பி. 25

அண்ட மியாவையு மீன்று யிரனைத்தையுங் காக்குந்
தண்டளிர்ப்பத வம்பிகை யருளிய தனய
தெண்டிரைக் கடல் விடமுண்டு சிதரன் முதலாம்
அண்டர் தங்களைக் காததரு ள்மரர்தங் குரவ. 26

அரிபணப்பகு வாயர வாகிய சாபம்
பிரிவுறச்செய மைங்கரற் கிளையவெம் பெரும
பரவினோர்படிக் காடினோர் பவந்துடைத் தருளை
புரிய கிரதி தவபல னுதவிய புதல்வ. 27

அருணவட்புய மலரவ னகந்தையை யடக்குந்
தருணநாண்மலர்ப் பாணிய வடியவர் தமக்காய்க்
கருணையேதிரு வுருவமாய் வந்தருள் கந்த
பொருணி ரம்புமா கமக்குறு முனிக்கருள் புனித. 28

தேவாரிமை யுண்டிடு வடலைமேற் றிரண்
டோத வந்ததாம் நின்னுடன் யாம்பொரு முயல்வித்
திதெலாம்பொறுத் தின்னருள் புரிகெனச் சிவந்த
பாத பங்கய முடியுறப் பின்னரும் பணிந்தார் 29

சரண் பணிந்திடு புங்கவர் தங்களிலிறையாம்
புரந்த ரனைறனைப் பார்த்திவை புகலுவான் சூரன்
வரங்குலைந்திட வவன்குல முழுவதும் வாட்டி
நிரந்தரந்தரு நீங்கிடா தின்னக ரரசு. 30

தருதும் வானவர் தம்மொடு மேருவிற் சார்ந்தங்
கிருவெனப்பெரு விடைகொடுத் திந்திர னரிய
திருவிருக்கும்விண் ணாட்டவர் தங்களுக் காபோர்
திருமுகத்துட னுடல்செயறுமுகச் செம்மல். 31

வேறு.

அம்பொன்மால் வரைக்கு முருகையன் விடைபெற்றெழும் போதவ் வமரர் கோன்பொன், செம்பதும முகநோக்கிப் பணி வரைமா தவத்திலவந்த செல்விதந்த, வெம்பெருமா னென்றறி யா தமர்பொருதி வச்சிரங்கொண்டெறிந்த பார,வெம்பிழை தீர்ந்திடும்படிக்கு விளம்புகென வந்தணனும் விளம்புவானல். 32

வேறு.

பாத கண்டத்திற் றெக்கண திசையினற் பகலை
யிரவு செய்தவன் றனைச்சிவன் செய்துநின் றிலரஞ்சங்
கிரம காதவன் கொடுவரு காவிரித் தென்சார்
தரணி யேய்புகழ் சிவமலை யென்றொரு சயிலம். 33

அந்தமால்வரை யுச்சியி னறுமுகத தமலன
சந்த தங்குடி யாயிருந தருளுருந தாங்கி
வந்திருந்தவர் தமக்கெலாம நல்வரம் வழங்கு
மிந்த முப்புவ னத்தினு மதற்கிணை யிலதால். 34

கயிலை தன்னினுங் கந்தமா தனத்தினுங் சூரிய
புயல் கிழித்தெழு திருத்தணி தன்னினும் புவியிற்
பயிலு மறமுள பெருகுப்புக பன்னினும்புகைவே
லயிலவன் விருப்பாகவிற் றிருக்குமவ் வடுக்கல். 35

ஆசிலங்கிரி தனிற்சென்று வேற்படை யவனைப்
பூசை செய்திடிற் செய்பிழை பொறுப்பதை யன்றி
ஈச மென்றுமில் பெருவரம் வேண்டுவ நல்கிப்
பேசருந்தனி முத்தியு முதவுவன் பின்னர். 36

என்று பொன்னவ னியமபதுமகபதியிசைப்பா
னன்று சொற்றனை யையவம்மலை பொன்னி னதிப்பா
லொன்று மென்றிடிற் றெக்கணத்துவாரியி லோங்கும்
வென்றி வீரமா மயேந்திர ஞாங்கரின் மேவும். 37

துங்க மிக்குயர் சூரபன் மன்றமர் சூழ்ந்து
சிங்க வேறெனப் பற்பல கோடியாத் திரிவா
ரங்க ணெய்தியா மறுமுகத் தமலனை யன்பிற்
பொங்கு பூசனை புரிவதெவ் வாறெனப் புகன்றார். 38

வேறு.

ஆதலாற் சிவ வெற்பி லணுகியே
போத மூர்த்தியைப் பூசை புரிந்திட
வாதுகாலம தல்லவினிச்சில
போது தன்னிற் புராரி குமாரனால். 39

வேறு.

மட்டிலாப்பெறு வரம்பெறு சூரன்வாழ்வன்றி
யட்டின் மேலுமா யிரவண்ட மீதினிலிருக்கும்
பட்ட தானவர் கிளைபெலா மொருங்குபட் டிடுநாள்
கிட்டவந்தது வஞ்சக ரொழிந்தபின் மேகளியாம். 40

அரந்தை தீர்த்தருள் சிவாசல மெனும்வரை யதிற்சென்
றுரந்த வாதவேற் படையவனடியிலன் புகந்து
நிரந்த ரும்படி பூசனை செய்குவ மென்னப்
புரந்த ரற்குமெய்ப் புளகுறப் பொன்னவன் புகன்றான். 41

இனிதுரைத்தனை யையநீ யென்றுவா னவர்கோன்
புனிதன் முப்புரம் பொடித்திட வுரகநாண் பூட்டிக்
குனிவி லாச்செயுங் குன்றிடை யமரர்தங் குழுவுந்
தனியமைச்சனு முடனுறச் சார்ந்தினி திருந்தான், 42

வேறு.

இன்ன வாறிவ ரிருக்குமற் றவுணர்க ளெவர்க்கு
மன்னர் மன்னனுஞ் சூரபன் மன்னெனும் வலியோன்
றன்ன தானையாற் சயந்தனாதியசுரர் தம்மை
இன்னல் செய்தமு மவுணர்க ளியற்றுதல் வினவி. 43

கந்த வேடனை விழியினாற் கருணையாற் றந்த
தந்தை யான்மதுத் துளித்திடு சலசமீ திருக்கு
மந்தணன்றிரு மாலவ னிந்திரனமரர்
வந்து வெள்ளியங் கிரிவயின் முக்கண்வா னவனை 44

பரவி நிற்றலு மெந்தைமான் முகமலர்ப்பார்த்து
வருக வென்றுரை செய்தனன் மலரவர்ப்பார்த்துச்
சிரம சைத்தனன் புரந்தரற் கெதிர்நகை செய்தான்
விரவு வானவர் தமையெலாம் நோக்கினன் விழியால் 45

இன்ன தன்மையா யாவர்க்கு மினிதருள் சுரந்த
பொன்னின் வார்சடைப் புண்ணியப் புனிதனை நோக்கி
அன்ன வாகனன் பாகசா தனனுடனமரர்
பன்னக த்தின்மேற் றுயில்பவன் யாவரும் பகர்வார் 46

இடியை நேர்தரு சொற்பகர் தானவர்க் கிறையாங்
கொடிய சூரபன்மன் செயுங் கொடுமைகள் கூற
முடிவு றாதினி யாகிலுங் காத்தருண் முக்க
ணடிக ளென்றலு மஞ்சலி ரெனர்ப்பகர்ந் தமலன் 47

வேறு.

கருணையே திருவுருவாய்ச் சண்ணுதலி லுதித்தருளுங் கந்தவேளை, யருகழைத்துக் குறங்கிருத்திப் புறந்தடவி யுச்சிமோந்தன்பினோக்கிப், பொருவின்மைந்த சேட்டி தன்பால் வீரமயேந்திரமென்னும் புரத்துள்வைகும், அருள்சிறிது மில்லாத சூர்க்கிளைகளெனச் சொல்வ தனைத்தும்விட்டு. 48

தேவர்சிறை விடுத்துமக பதிக்கினைய பொன்னுலகாள் சிறப்புநல்கிப், பூவுறைவோன் முதலெவரும் பொருந்தாசினியவின் முறை புரியச்செய்து, வாவிசைவி னெனவுரைத் தீராயிரம்வெள்

ளம்பூத வடைவுத்தியைத், தாங்கியவித்திடுங்குண்டோ நான்முக
லாம் படைத்தலைவர் சயிலகோரம். 49

உரமிருந்த் புயவீர ரோரிலக்கத் தொன்பதின் மருல்கமு
ண்டோ, வரவிந்த மலரவனிந் திரன்வானோ ரிவ்வனிக மனைத்து
ங்கூட்டி, இரதகயதுரகமுந் தந்திணையிலாப் படைக்கலமு மீனிது
நல்கிப், பரமன்விடை கொடுத்தருள வப்படியே யெந்தைதென்
பாற் பாரில்வந்து. 50

தானவர்கள் கிளைமுழுதுந் தொலைத்துமக பதிமைந்தன் ச
யந்தன் விண்ணோர், வானவா தஞ் சிறைநீக்கிப் பரங்குன்றில் வந்து
தெய்வயானை தன்னை, மேன்மைபெறு மணம்புரிந்து பொன்னு
லகாளிறைமைசுரர் வேந்தற்கீந்து, வானவர் சேனாதிபதியாங்
குமாரநாயகன் கயிலை மன்னும் பின்னர். 51

கற்பகப்பூ நறியமணங் கவர்ந்து வந்து தென்வசந்தக் கால்
கள்வீச, விற்புருவ வரமகளிர் சித்திரப்பா வையினடிப்ப விண்
ணோ ரேத்தக், கற்பனை யாழ்வல்லோர்க ளிசைவிரவத் துந்து
பிகள் கல்லென்றார்ப்பப், பொற்புமிகும் வெள்ளிமலை போன்ற
வெள் வாரணப்பிடரிப்போந்துலாவும். 52

மிக்கசெல்வச் செருக்காலுஞ் செப்பையென் றண்ணாந்
தெழுந்து விம்முகொங்கை, மைக்குழலிந்திராணி யின்ப வாரிதி
யிற்மூழ்கிய் காதன் மயக்கத்தாலு, மக்கயிலை நிகர்த்த சிவாசலத்
தெய்தி யெந்தைபிரானடியிற் பூசை, மெய்க்கிரமமாய்ப்புரிவோ
மெனவிருந்த நினைவயர்ந்தான் விண்ணோர் வேந்தன். 53

அங்கதனான் மருட்கைமெய்ச் சிக் கானலைத் தண்ணீரெனவே
யலைமான்போலப், பைங்கனக மண்டபத்தில் யமைத்த சித்திரப்
பொற்பாவை யெல்லாந், திங்கண்முகச் சசிபோற்கண்டின்பநல
மன்புடனே திளைக்கவெற்பாந், துங்கமணிப் புயத்தணைக்கக்
கையுறுவாறதனாற் றுயரம் பூண்டும். 54

செப்புமுலை யயிராணி சோவந்தா ளீயெவடான் செப்பு
கென்று, மொப்பரிய சயந்தனுற்றலார்மகனீ யேதுக்கிந் குற்று
வென்று, மிப்படிசின் மதிமாறு பட்டுமக பதிமயங்கி யிருக்குங்

காலை, எப்புவியுங் கண்டுவரு மியாழில் வல்ல நாரதனைச் செய்
தினனால். 55

இந்திரனைக் கற்பகக்கா விடையினிற்கண் டாசிமொழிபி
யம்பவன்னா, னந்தமுனிவரனை முன்போலேத்தி முகமன்புகலா
தார்நீ யிங்கு, வந்ததென விங்குநில்லாதே னெனவும் புகலவிந்த
மகவானுக்குச், சிந்தைகலங்கிய தென்னென்றையுறாச் சசிமருங்
கிற் சென்றான் மன்னோ. 56

இந்த முனிதனைச்சசி கண்டஞ்சலிசெய் தினியமுக மன்ப
ல்கூறி, யந்தவிசின் மீதிருத்தி யெப்புவியின் மீதிருந்திங் கடை
ந்தாயென்னச், சந்தமலருங் கூந்தற் சிற்றிடைசேல் விழித்துவ
ர்வாய் கனியினின்சொற், குந்தநகை யயிராணி கேட்டிட நார
தமுனிவன் கூறுவானால். 57

பூதலமெலாஞ் சூழ்ந்து வந்தனனுங் கொருபுதுமை புகலக்
கேண்முன், சீதரன் பூவுலகளவு காணவுருக் கொண்டதெனத்
தென்பார் தோன்று, மேதகுசிவாசல மென்றொருமலையங் குளது
தன்மேல் வெற்புஞ் சூருங், காதயில் வேற்படை தாங்குங்கந்தனினி
திருக்கின்றான் கருணைகூர்ந்து. 58

சித்தர்முனி வோரியக்கர் கின்னரர் மாலயன்முதலாந் தே
வர்யாரும், நித்தமகலாது குகனடியி லருச்சனைபுரிவார் நியமத்
தோடு, மத்தகைய மாதவத்தி லஞ்சனைமா தருளியசே யனுமா
னென்போன், இத்தலத்துத் தருமலரு மந்தாரகங் கையுங்கொடு
வந்திணை யிலாத 59

ஆறுமா முகத்தவனைப்பூசைசெய்து மலரவனையாகச்சிறி,
மாறதா யெதிர்த்த பகைவரைத்தடியக் கனகனுயிர் வாட்டும்,
யாளி, யேறுமாவலியு மின்னும் வேண்டுமினி தாம் வரங்கள் யா
வும் பெற்றான், வேரியாமுரைப்பதென்னை யிந்திரனச் சிலசையிலு
மீதிற்சென்று. 60

கஞ்சனையஞ் சப்புடைக்குங் கரகமலக் குகன்பதத்தைக்
கண்டாற்றீயிற், பஞ்செனவே பாதகங்களொழிந்து மனத்தெண்
ணவரம் பலிக்குமென்னத், தஞ்சமென்றோர் தமைக்காக்கத்துக்

கவனுங் கவலையன்றித் தானின்றென்ன, விஞ்செனுரைத் தியாழ்
முனிவன் றிசைமுகத்தோ னுலகினிடை யேகினனால். 61

நாரதனவ் வுரைபகர்ந்து போயபின்னர் புரந்தரன்பாணறைமென்
கூந்தற், கூரயில்வேல் விழிச்சசி சென்றுரை செய்வானைமணை
யன்புகூர்ந்து காத்த, தாரணி யீராறுபுயச் சண்முகவேள் பூமி
யிலம் பரத்தைத் தாண்டும், பாரமகா மேருநிகர் சிவமலையென்
னொருநாமம் படைத்த வெற்பின். 62

உச்சிதன்னி லிருந்துதன்னைத் தரிசித்தோர் பூசித்தோ
ருள்வந்தன்னின், இச்சையுட னினைந்திடுவோர் தமக்கினிய
வேண்டுவா மெல்லாந்தந்து, பச்சைவண்ண னறியாத பதமல
ருந் தருவனெனப் பகர்ந்தான்வீணை, விச்வசுமுனிவரனீது நிச்
சயமென்றே பரிவின் விளம்பலோடும். 63

சிவமலை யென்றுரைத்திடுசொற் செவிபுகுமுன் மருணீங்கி
த்தெளிவுவந்து, பவளவிதழ்த்தவளநகைப் பான்மொழியம்பி
கை தந்தபாலனுக்கு, முவமையிலான் றன்னுடன்யான் முடன்று
சமர்புரிந்தபிழையொழியப் பூசை, யவனையன்பிற் செயவெமது
குரவனன்று னுரைத்த தலமவனிதன்னில். 64

மேதகுசீர்சிவா சலத்தினப்பொழுதி னெய்துதற்கு விறற்
றூமென்னும், பாதகன்றன் றனைவெள்ளம் பரவியதான் முற்று
மற் படிறனிற்று, மேதினிவிட்டகன்ற பின்னர் பணிவமென
விருந்தவெண்ணம் மயர்ந்துமிக்க, சீதமதிமுக மடவார் மையலி
னுஞ் செல்வமென்னுஞ் செருக்கிலாழ்ந்து. 65

இத்தனைநாள் தானுமெந்தை யிணையடியைப் போற்றுமலிரு
ந்தேனந்தோ, உத்தமவானோரிடத்துங் கலகமேநிதம் விளைவி
துண்மைமேவும், வித்தகநாரத முனிவன் செப்பிய சொலென்ன
னவின்மேனுள் மாயன், அத்திகடைந்தாரமுதந்தந்தவண்ண மான
வெந்தை யருளினுலே. 66

என்னவுரைத் திகலயிராவதத்தி லிவர்ந்தமரர்குழா மிரு
பாற்சூழப், பொன்னுலகந்தனை நீத்துப்பூதலத்தின் மீதினிற் சம்
புத்திலெய்தி, மன்னவர்தம் புரமெரித்த வரிசிலையாம் பொன்
மேரு வரையின்வந்த, மின்னவிருஞ் சிவமலையை யாயிரங்க
ண்ணாற்கண்டு வியப்பமெய்தி. 67

உளர்திமிமிர் தண்டமுக டூரீஞ்சிமிர் சிவன்மலையினுக்கி பெய்திக், கார்திகழு மணிகண்டன் றனையுமவ னிடப்பாகங் கலந்துமேவும் ,பார்முழுதுந் தருமெங்களம்மையுமை யவள் பதத்துங் பணிந்துவெய்ய, சூர்கிரிவா ரிடிகடிந்து மன்பர்குழாங் கனைக்காத்துச் சுடர்வேருங்கும். 68

முருக வேடனையுங்கண் டடிபணிந்து கரகமலமுடிமேற் கூப்பிக், கருணை திருவடிவா யெங்குடிமுழுதுங் காக்கவிந்தக் கடியகானத்,' திருமலையி லெழுந்தருளி வந்தனை யென்றுரோமமெலாஞ் சிலிரப்ப வன்பின், உருகியுடற் கண்களெலாம் புனல் பெருக மனமொருமித் துவப்பிரேனும். 69

கற்பகப்பூ நறியசருக் கரைதேன் மஞ்சன மிளநீர் கன்னற்சாறு, பொற்பமை தண்டயிரெண்ணெய் வானமுத மான்றருநெய் புதியதீம்பால், பற்பல வாங்கனிவருக்க நானஞ் சந்தனம் புழுகுபசிய மஞ்சள், விற்புருகற் புரமாதி வேண்டுமுப கரணமெலாம் விண்ணோர் நல்க. 70

எண்ணிரண்டா முகமனொடுங் குகனடியிற் பூசனைசெய் திருடீரன்பி, னுண்ணிறையு மாநந்த வெள்ளமுவட் டெடுத்துகத்தினுட்கொள்ளாம,நண்ணிவெளிப் படுவதெனவிழிப்புனல் பாய்ந் துடல்முழுது நனைய மெய்ம்மைப், புண்ணியன் சன்னிதினின்று கரங்கூப்பி யினையதுதி புகல்வதானுன். 71

வேறு.

வேத மந்திர வுருவமா மெய்மையா சரணந்
தாதவிழ்ந்திடு கடம்பணி தடம்புயா சரணம்
சீதரன் செருக் கடக்கிய சேவகா சரணம்
பூத நாயகன் குரவனும் புண்ணிய சரணம். 72

அடியரேஞ் செய்த கொடும்பிழை யனைத்தையும் பொறுத்தெங்
குடியெலாம்புரந் தருளிய கொற்றவா சரணம்
நெடியவன் பிரமன்பணி நிருமலா சரணம்
படியிலோங்கிய சிவமலைப் பண்ணவா சரணம். 73

வேறு.

இன்னணந்துதிசெய் வானவர் கோன்முனெம்பிரான் மயி ன்மிசை தோன்றிப், பொன்னகர்க்கிறைவ வன்பொடு நீசெய் பூசனையுவந்தனம் வேண்டும், மன்னு நல்வரங்கள் கேளென மகவான் வணங்கியெங் குலககுறைமுழுதும், முன்னமே தவிர்த்தா யினி யெனக்குன்றுள முளரிதந்தருளெனச் சொல்வான்.

பன்னெடுங்காலம் பொனனினுட்டிறையாய்ப் பற்பலபோகங்கடுய்க்கும, ரனனலவாழ் வெய்திப பகைதனை முறுக்கி நமை மனத்துன்னியங் கிருததி, பின்னை யானநத வீடியாந் தருதும் பெயர்நதிடு நின்னகாக வெனனத், துன்னலர்க்கடந்த வேற் படைதாங்குந தோனறலங் குமரவேள் சொன்னான். 75

அருந்திறன்முருக னிபமுறை புகல வண்டர்கோன் சிவ மலையதனைப, பிரிநதிடமனது பொருநதிடாதியலபிற் பின்னரு மவ்விடை யெழுநா,ளிருநதுதன னுமமுலகினில் விளங்க விநதிர தீர்த்த மென்றனபு, பொருநதிடக்கண்டு சுரருடன் சென்று பொன்னகர் புகுநது வீற்றிருநதான். 76

இந்திரன் அருச்சனைச் சருக்கம் முற்றிற்று,
ஆ. விருததம், 256.

நகுடன் சாபந்தீர்த்த சருக்கம்.

வேறு.

காசின் மன்னவன் கந்த வேளெனும்
தேவர்க்குப் பணி செய்ததோதினும்
நாவினுற்பிழை நகுட மன்னவன்
சாவ நீங்கிய தன்மைச் சாற்றுவயாம். 1

மகிதலம்முழு தாளுமன்னவன்
நகுடனென்பதோர் நாம வேலினன்
தகைமை மாகமந் தனிற்ச தஞ்செய்து
நகவில் போகமார் நாக நண்ணினன்.

சுரர்கள் யாவருந் தொழுது சூழ்வரப்
பரமன்றனையே பத்தியாற்பக
விரவினுந்தொழு மேழு மாதவர்
திரவெழின் மணிச் சிவிகை தாங்கவே. 3

வேறு.

இந்திரப்பட்டந்தரித்து வருநகுட னிந்திராணி யின்ப மெய்தி, வந்தவெழு முனிவரர்தம் பெருமையை யிவ்வளவேனு மனத்தெண்ணுமல், இந்துமுகச் சசியிடத்தி லேகிடுமின் சர்ப்ப வென்று னிசையின் மிக்க. சநதமுனி வெகுண்டவனைச் சர்ப்பமாகெனச்சபிக்கசசர்ப்பமாகி. 4

அந்தரத்தி னின்றுமிந்தப்பார்நோக்கித் தலைகீழ தாக வீழ்ந்து, நொந்துடலம் பதைப்பநெடு மூச்செறிந்து சதமகத்தினுண்மை நீங்கி, யந்தரவான் முகடுநிழித் தமரர்பதி யளவுமுயர்ந் தகன்றபார, விந்தகிரித் தென்பாலிற் காளத்தித்தடவரைபால் வேய் சூழ்கானில். 5

சால நெடுங்கால முடன் மண்புரளக் கிடந்தன்னோர் தமியனுகக், காலைதனிற் றுருவாசன் கஙகைநதி சூழவரு காசிதன்னில், ஏலவொரு மாவிலிங்கப் பதிட்டைசெய் பூசனை செய்தேற்றிப் போற்றி, மாலவன் சங்கரனுன குற்றாலப்பதி காண வருகும்போது. 6

உரக வுருவாய்க் கிடக்கும் நகுடனென வறியாம லொரு கற்பாறை, சுரநெறியிற் கிடந்ததென மதித்து மதித்தேறவந்தத் துருவாசன்றன், சரணமெய்யிற் படுதலு நல்லறிவு வந்தாங்கவன் மலர்த்தா டன்னைச்சூழ்ந்து, பரவிமுன்னு ளகத்தியனுற் றுன்பணியா முறையாவும் பகர்ந்து பின்னர். 7

எந்தையே யரவுருநீத்தினியானுய்ந்திடு வண்ண மியம்புகென்னச், சிந்தையா குலத்துடனே மிகவிளம்பத் துருவாசன் செப்புவான்முன், விந்தமடக்கிய முனிவ னிட்டபெருஞ் சாபத்தை விலக்க வல்லா, ரெந்தவுல கத்துமிலை யெத்தேவர் தம்மாலுமிது தீராதால். 8

ஆயினுமெம் மனத்தினி லொன்றுதித்ததுகே ளிருந்தமிழ் நூலாரணங்கள், பேயசிவா கமமனைத்துங் குறமுனிவர்க்குரைத் தருள் செய் வேளாமந்தத், தூயவன்ற னாலயத்தைச் சூழ்ந்து வல மாகவந்து துதித்து நின்று, லேயுமா வுருநீங்கிப் பாகதி யுங் கிடைத்திடுமென் றியம்பினனால். 9

அந்த வாசகம் வினவும் பணிநகுடன் முனிவனைப்பார்த் தையவந்தக், கந்தவேளினி துறையுங்காரணமெய்த்தலமொன்று கழறுகென்னச், சிந்தைதனிற் குசனுறையுந் தலமனைத்து மன த்தினெண்ணித் தெளிந்துபாச, பந்த மறுத்திடு மெம்மான் பத மனத்தி லிருத்தியன்பிற் பகர்வதானன். 10

வேறு.

வானவர்களிற் சிறந்ததோர் மணிகண்டனுடன் மூவர்
மான மன்னரிற் சிறந்தோர் வழுதியுடனொரு மூவர்
மேன்மை வேளாளர் தமின் மிகச்சிறந்தோன் மன்றுடி
தானகன்ன னெனுந்தடக்கைச் சருக்கரை மன்றுடிமன்னன் 11

பன்னரிய புகழ்படைத்த பல்லவராயக் குரிசி
லென்னவரு மூவர்களுமேனைய வேளாளரும் வேன்
மன்னவர்க்குமுதான்றுதொட்டு வழிவழியாயடிமை செய்வா
ரன்னவர்கள் குலதெய்வ மாகிநிற்ப னெங்கோமான். 12

ஆங்கவர்களுடல் பொருளோ டாவியென வொருமூன்றுங்
காங்கேயன் றனக்கினிய காரணத்தா லவருறையும்
பாங்கு பெறுந்திருநாடு பார்மகட்குத் திலதமதாய்
ஓங்கு புகழ்க் காங்கேயநா டெனநாம முற்றதுவே. 13

வேறு.

அகல்விசும் பினிற் கங்கையின் மாடமேலாகிய கொடி தோய்ந்து, பகலவன் கதிர் வெம்மையுங் குளிர்நனி படைத் திட மிகவீசுந், துசடார்நதிடு மாகம மங்கமெய்ச் சுருதிநூல் புராணங்கள், புகழுமுத்தமி ழுந்தினமோங்கியே பொலியுமத் திருநாடு. 14

அந்த நாட்டினிற் சிவாசலந் தன்னிலெம் மாறுமா மூகத்தண்ணல், சந்ததங்குடி யாயிருந் தடுத்தவர் தமக்கெலா மருளோடுஞ், சிந்தையுன்புற விந்திரச் செல்வமுஞ் சித்தியு நணி நல்கிப், பந்தபாசமு மறுத்தொன் னிகரிலப் பரம முத்தியும் மீவான். 15

அத்த டங்கிரி தனிற்சென்று கடன்முழு தங்கையி னெடுத்தண்ட, வித்தகக்குறு முனிவராகிய மெய்த்தவன் முன்கண்ட, வுத்தமம் பெறுந் தடப்படிந்தணிந்து நீறுருத்திர வடந்தாங்கி, முத்தி தந்திடு மப்பெருவரையினை மும்முறை வலஞ் சூழ்ந்து. 16

திருமுன் முழ்ந்து நின்றேத்திட நீபெருந் தீயதோர் பெருஞ்சாப, பொருளி முன்புபோ லரசின துரிமைபெற் றுயர்சிவ பதஞ்சேர்வை, யிருமையுந்தரு மத்தல மலதுவே றிலையொரு தலமென்னப், பெருமை மாதவன் மற்றதற் கேகெனப் பேசி யாங்கவன்சென்றான். 17

வேறு.

அரியதிரு வாசமுனி மொழிவினவி மனமுருகி யாங்கு நீங்கிப், பெரியவரை யுங்காணும் பின்னுகவளி விசையிற் பெயர்ந்து வந்து, சரியவிழிப் பசுந்தோகைக் கவுரியொரு பாகம்வைத்த கடவுண்மேனாள், தரியவர்கள் புரந்துலைக்க வெடுத்தவில்லின் வீந்த சிவசயிலங்காண்பான். 18

பாவவினை வேரறுத்துப் பரமசுக மருளவல்ல பான்மைத்தான, காவிரியிற் படிந்துநண்ணு நாககிரியுமை பாகன் கழல்பிரமேசர், தாவிலகத்தியலிங்க முளசைமுக்க ணீசுரர்பொற்றுளைமேயத்திப், பூவிரியும் பொழிற்கறையூர் மகுடலிங்கங் கண்டுசிவ பொருப்பைக் கண்டான், 19

கண்டவுட னிறைஞ்சியயர் வகன்றுடலம் பொடிப்பவுள்ளங் கசியத்தூய, தண்டமிழ் மாதவன் கண்ட தீர்த்ததிற் படிந்து சிவ சயிலந்தன்னை, யண்டிவலமாய்ச் சூழ்ந்து குமரவேடிருமுன்பதாகநின்று, மிண்டினு லெனக்குவந்த கொடுஞ்சாபந்தீர்த் தருளிம்மெய்ம்மையான. 20

என்றிறும தன்பர்தம்மோ டிருக்கவருள் செய்திடுமென வேத்தியிவ்வா, ரென்று மூவரென்பது சாணியமமாய்ப் புரிந்தி ட்டு முமைசேய் பச்சைக், குன்றுசிறை படைத்ததென வருமயிலின் மீதுவந்து கொடும்பாம்பாகத், துன்றுநகுடனைநோக்கி யுரகவுருத்தனை நீத்துத் தொன்மைபோல. 21

இத்தரணிக்கரசாகி நெடுங்கால மறச் செங்கோலினிதினைச்சிச், சித்த சுத்தமெய்தி மலபரிபாகமாகி யிந்தச் செகம்பொய்விடு, நித்தியமென்றறிந்திடுமெய்ஞ் ஞானம் வந்தா னந்தம் நீங்கா தோங்கு, முத்தியும் பெற்றிடுதியென மொழிந்தகன்றான் றேவருக்கு முதன்மையானன். 22

பண்டுபோல் மானிடமெய் கொண்டுமலர்ப் பகழிவேள் படிவந்தாங்கி, எண்டிசையுந் தனிபுரந்து பலபோக மகபதிபோ லினிது துய்த்துத், தண்டளவ மூரனுமை யொருபாகங் கலந்திருக்குந் தம்பிரானறன், புண்டரிகப் பதநிழலிற் கலந்திருந்தானகுடனெனும் பூமான் மாதோ. 23

நகுடன் சாபந்தீர்த்த சருக்கம் முற்றிற்று

ஆகவிருத்தம். 279

வள்ளி நாயகி திருமணச் சருக்கம்.

உம்பர் பணிந்திட விந்திரனாகிய வுலகாள் மன்
வெம்பணியாகிய சாவமகன்ற விதஞ் சொன்னம்
கும்ப மிரண்டன வுந்தனமேந்திய குறமாதை
யெம்பெருமான் குகனன்பின் மணந்த வியல் சொல்வாம். 1

வேறு.

என்னையாளுண்டக் குமரவேள் கயிலையிலிருந்து
பின்ன ராடலின் மனம்புடை பெயர்ந்திட வெழுந்து
வன்னமாமயின் முதுகினிலிவர்ந்து வான்மதியந்
தன்னிலொன்றிய திருத்தணி வரையினிற் சார்ந்து. 2

பச்சை மாமயில் விட்டிழிந் தப்பருப் பதத்தி
லுச்சி மீதினிற் கதிரவன் கதிர்புகா துயர்ந்த
செச்சை பாசிலைச் சந்தனச் சோலைநன் னிழலி
[illegible] மகிழ்ந் தாடல்செய் தினிது வீற்றிருந்தான். 3

அன்னகாலையிற் புவியிடை வடதிசை யடைந்து
பின்னர் நாவலன் றீவினிற் பெயர்ந்து பாரதமா
மென்னவோதிய கண்டத்துளெய்தி யாழ்வல்ல
மன்னு நாரதன் வெள்ளிமால் வரையிடை வந்தான். 4

அங்கணோர்தினைப் புனத்திடை யமைந்திடு மிதணிற்
சங்கை கொண்டனன் மருங்குலை வாட்டிடுந் தகைய
கொங்கை தாங்கி வெண்முருநகை மூரன்மின் கொழிக்கத்
திங்க ளென்றவா ணுதலினிற் குறுவெயில் செறிய. 5

காந்த ளங்கரத் தொருகவணேந்திநீள் கருங்கார்
கூந்தல் பின்புறஞ் சரிந்திடக் குமுதவாய் மலர்ந்து
தீந்தண் மென்மொழி குயிலினங் கிளியினந் திகைக்க
வாய்ந்த சொற்களாற் கதிர்கவர் குருகின மகற்றி. 6

புடை பெயர்ந்திடுஞ் சித்திரம் போன்றங்கு நின்ற
மடமயிற்குற வள்ளியை விழியினாற் கண்டு
படவராவுல கத்தினிற பண்ணவ ருலகிற்
புடவி தன்னின்மற் றெவ்வுல கத்தினும் போந்த. 7

சுந்தரத்திரு மடநலார் தம்மிலித் துணைநாள்
இந்தமாதுபோற் கண்டில மிறையவன் விழியில்
வந்த வெந்தையாங் குகனுக்கே யாமென மதித்துக்
கந்த வேடனைத் திருத்தணி தனில் வந்து கண்டான். 8

கருணை தங்கிய வாறிரு கண்ணுடைக் கடவுள்
சரண பங்கய முடியுறத் தாழ்ந்தெழுந் தைய
விருணி ரம்பிய வனஞ்செறி வெள்ளிவெற் பிடத்தின்
மருளு மான்விழி படைத்ததோர் மங்கையைக் கண்டேன். 9

வேறு.

கண்ணகன் மலையிலெயினர் பத்தியிலுறு மடிகமழ் குவளை செங் கமலந், தண்ணறுங் குமுத முருக்கொடு முல்லை சண்பகங் கோங்குண்பங்காந்தள், வண்ணமென் குமிழ்நன் மலர்கொடுவந்து வரைத்தெய்வ மாகி வீற்றிருக்கு, மண்ணலைப் பூசை செய்யுந்தற் கமைத்த வணிகிளர் மாலையென் றயிர்த்தேன். 10

முருகவே ளெம்மை முனிந்துசெங் கையினான் முடித்தலை துளக்குறப் புடைத்து, கருகிடக் குகையில் வல்லிபூட்டியநாட் கிரத்திலர் தேவரில்யாரு, மருள்கனிந் தவனை சிறைவிடுத் தாண்டானவன்மன மகிழ்ந்திடயாது, புரிகுவ மெனத்தேர்ந்தரியதே வாங்கப் பூவைசெய் துதவினன் மலரோன். 11

கரியமால் பிறப்பிற் கூர்மமென் மலர்த்தாட் கண்ணிணை மீனரி மருங்குல், பொருபடை மிடறு துயிலிட முதரம் பூவணை யல்குல்வேளுரும்,பரிமொழிகளிறு குழல்குடை வதனப் பருமணிமுடி முலை பரமன், சிரவணி நுதல்பொன் மனைகரமாகச் செய்யணங் காம்வள மன்றே. 12

பொருவரு கலைமான் மேனகை யரம்பைபொன்சசி யாதியாமாதர், மருமலர்க் கூந்தல் வள்ளிகண் டுடைமெய் வதனமாமுருப்பிய னாய்ப், பெருமையா லன்றோ வானகவர்தமமைப் பேருல கத்துளோராரு, உருவினிற் சிறப்பின் மகிமையிற் பெருக்க முளரவ ரெனவுரைப் பதுவே. 13

எங்கொடும் பகையாந் திங்களன் வதன மின்னுமாங் கவன்மனை வியரிற், செங்குமு தம்வாய் விழிகருங் குவளை சீறடி நகமுடி வினையாய்த், தங்கிய தெனக்கு சிறிதுறுப் புருவந்தருகெனப் பணிந்த தாலன்றோ, பங்கய மாதின் கரம்முகந் தடங் கண்பதத்தினிற் சிறிது போன்றனவே. 14

வேறு.

ஏந்துகொங்கை யிணைகள் கல்லாரமே
வாய்ந்த நோக்கு மருக்கொள் கல்லாரமே
மாய்ந்த வோதி பணிமலர்க்கோதையே
சேர்ந்து காரளி செய்யுமக் கோதையே. 15

வேறு.

இன்னனம் வள்ளி நாயகியெழிலை யிசைத்திடு நாரதமுனியை, மின்னயிற் படைதாங் கண்ணலாங் குமரன் விருப்புட னோக்கியேயந்தப், பின்னலங் கூத்தர் சிற்றிடைமாதின் பேரெழிற்சிறப்பதாந் தமதாய், இன்னமு முரைத்தி யெனமுக மலர்ந்தேயாழ்முனி பகருவ தானான். 16

காரையங் தரத்தி லிலையவிட்டிருளைக் கருத்தக மடக்கிழீ
ளறலைச், சோமட் படுத்திக் கொன்றையங் காயைச் சீர்லைம்
பார்த்திடச் செய்து, யாருறுகாவை மட்டுறப்படுத்திப் பசியதா
ஞ்சைவலக் கொத்தை, வாரிமே லெறிந்து நிகரிலா திருக்கும்
வனமயிலின் மருமலர்க்குழலே 17

எந்தையாம் பரமன் செஞ்சடைக்காட்டி னிருளகற் றிடு
மணி யென்ன, வந்திடும் பிறையை யினனிடை யேற்றி மாமழை
பொழிந்திடப் புகுந்த, இந்திரவில்லை நிலைத்திடா தகற்றி யிருந்
தவர் விழிமனங் கவர, சிந்துரந் தீட்டுந் திருநுதற்கிணை யத்தி
ருநுத லன்றி வேறிலையே. 18

ஈரேழுபுவனச சுடர்முதலானோர் யாரையும் வெற்றிகொள்
வலிய, மாரவேள் கருப்புச் சிலைதலை குனிந்து வணங்கி நாணுற்
றிடக்கண்டு, பாருறு திசைகள் பத்தினு நமக்குப் பகையிலை யெ
னச்செருக் கடைந்து, வீரமேற் படைத்து விளங்கியபுருவ விற்
கிணை விளம்புவா ரெவரே. 19

திரிபுர மெரித்த பகழியை வீரன் றிருக்கையிற் படையை
யந்தகனை, விரிதிரைக் கடலின் வந்தவெவ் விடத்தை வென்று
தண்ணமுதையுள் ளாக்கி, யரிபரந் தகன்று நீண்டுமை மளாவி
யணிமணிக் குழையொடு பொருதிக், கிரியுரங் கிழித்த நின்கை
வேலுடனே கேண்மை கொண்டடும்பிணை விழியாள். 20

வள்ளைகத் திரிகை யென்று நூல் கற்ற வல்லவர் வீணிலே
விழுப்ப, ருள்ளவா றுரைக்கி னவ்விரு வகையு யிரத்தினி லொ
ன்று நேரா கா, தெள்ளிதிற் செய்த மணிக்குழை கண்டோர் சிந்
தைகண் கவர்ந்துமேன்மையவர், யெள்ளலில் செம்பொ னூச
லாண்டாயி னிருகுழைக் கிணையெனலாமால். 21

கள்ளவிழ் நறிய சண்பக மலரைக் கடிந்துமென் குமிழி
ளம்பூவை, யெள்ளியெட் போதை முனிந்துவைத்தி லெதிரொ
ன்று மின்றிவீற்றிருக்குந், துள்ளுசேனயனைக் கழுமலர்க்கீர்த்
துடியிணைப் பொற்றொடி செங்கை, யொள்ளிழை யவடன் மூக்
கினுக் கிணையே தொருபொரு ளுரைப்பவ ரெவரே. 22

வளர்மறை சலஞ்செய தூசலையலைத்து மன்னுகத் திரிகையை யிகழ்ந்து, தள்ளிவாய் கிழித்து மணிக்குழைவானி தாங்கிய வெழிற்குழை யோராய்ப், பள்ளவா ருதியி லரிதுயி லமர்ந்த பண்ணவ னுந்தியங் கமலத், துள்ளுறை விரிஞ்சன் படைத்திடும் பொருளி னுவமையே யுளரப்பவனெவனோ 23

தளிரடித் துவர்வா யனனடைத் தீஞ்சொற் றடமுலை கரந்தளஞ் செங்கைக், களிமயிற் சாயல் வள்ளிதன் வதனக் கமலநேராகுதற் கன்றே, குளிர்மதி பரமனிடத்தினிற் புகுந்துங்கோவிடை நிலையிலா துலைந்து, நளிர்கடற் றோய்ந்துந் தேவராலயத்தை நாடொறுஞ் சூழுதலாமால். 24

வேறு, மாங்குயின் மொழியினாள் வதன நோக்கினா
னோங்கிய மதிநிக ருற்றிலோமென
வேங்கிய மனப்பிணி யாலுடம்பெலாம்
வீங்கியு மிளைத்தலு மேவினனரோ. 25

வடிமதுத் துளிக்குங் கமலமென் மலரில் வைத்திடுங் குழுதமும் பவளக், கடிகையு மதற்குட் டரளமாலிகையுங் கண்டன போலுமா முகத்திற், குடிகொளுஞ் செய்ய வாயுமெல்லிதழுங் குளிரும்வெண் மூரலுமென்னப், பிடிநடை மாதின் பவளவாய் கண்டோர் பேசுவதன்றி வேறிலையே. 26

வால்வளைக் குலங்கள் வாய்பிளந்தேங்க வளரிளம் பசுங்கமுகொற்றைக், காலினின் றரிய தவமுஞற்றிடச்செய் காரிகை மணிமிடற்றினுக்கு, நூல்பல தெரிந்து கவிசொலும் புலவோர் நுண்ணிய மதியினா ராய்ந்து, மேலினி யுவமை யாதுசொல் குவரோ மேதினி யிடத்தரியேமால். 27

திருப்பிறந் தகமோ வானவருணவோ சித்தச னேந்திய சிலையோ, விருப்புற வவன்முன் னூதுகாகளமோ மேற்கொளும் பரியதோ பணைக்கைப், பொருப்பு மாமுகத்தோன் றந்தையைச் சூழ்ந்து பொருக்கென வாங்கியுண்டதுவோ, மருப்பசுந் துளவோ னிசைக்குமேல் லிசையோ மாதரா ள்பகர்ந்திடு மொழியே. 28

மருமலர்க் கூந்தல் மாதுதன் றோள்போல் வாயதந்திலம் யாமெனவெண்ணி, யொருகழை கண்முத்தரும் பியுள்ளுடைக்து முண்மை கண்டுயர் வரையிடத்தின், வருகழைக் குலமு மந்தவாறுகி வந்து தாழ்ந் தெழும்மைகின் வாறுப், பொருதரவமையென் றிரந்ததாலன்றோ பொருந்திய தப்பெயர தற்கே. 29

பதுமமென் மலரைப் பயமுறப்பங்கப் படுத்தியாழ் கயத்தினில் வீழ்த்தி, மதுவிழிந் தொழுகுங் காந்தளேக்கான்மேல் வணங்கியே நின்றிடக்கண்டிங், கிதுவது விரண்டு மிணையொழி பின்னரியாதா நேரின்றி வீற்றிருக்கும், புதுமலர்க் கூந்தற்றுடியிடைச் சேறகட்பொற்றொடி திருமலர்க்கரமே. 30

வேறு.

ஐங்கரன் முனிசொல் லெழுதியவேடோ வவனெழுத்தாணியோ பொதியந், தங்கிய முனிவனன்னவோ வதனந்தனை முழு மதியென வெண்ணிப்,பொங்கிய நிலவை யயிறர்வந்த புட்கொலோயா தெனப்புகல்வேன், குங்கும மணேந்து ததும்பியண்ணுந்து குவித்திடுங் கனதனத்துணையே. 31

மங்கையர் சூடாமணியெனவந்த வள்ளிக்கு வயிறெனமலரிற் றங்கியவேத னிளந்தளிராலேச் சமைத்தபி னரியமாதவற்குத் திங்களின்வதன நிலமகளுடனே திருமகள் பதமலர் வருடவங்கநல்லியோக நித்திரைசெய்யு மாலிலேயென்ன வானதுவே.

பாரவெம்முலையைச் சுமைக்குட மென்னப் பற்றுவான் புகுந்தசிற்றெறும்பு,சேரளே தனினின் றார்ந்திடுமொழுங்கோ செழுமுகையிரண்டினை யேந்து,மேருறுங்கமலநாளமோ வன்றி யிபமுகத் தெழுந்திடுங் கரமோ, ஆரமாலிகைதாழ் வயின் வயின் செறிந்த வழகொழுகிய மயிரொழுங்கே. 33

சந்ததவாச நறவு கொப்பளிக்குந் தாமரைத் தவிசினிலிருக்கும், அந்தணனுற்றி னீர்ச்சுழியதனையா யிழையுந்தி செய்தன்றேன், செந்துவர்வாய்மின் னுந்தியையந்தச் சிதநீர்சுழிகள் செய்தனனே, விந்தவாறன்றி மற்றொருபொருளே யிணைசொலயார்க்குமுற்றுதால். 34

உயிர்தொறும் பரமனிருந்துசெய் தொழில்களுய்த்தறிவிப் பரனெனவவன்சொல், செயிரறு நூலாலறிவதுபோலச் செழுமணி மேகலைகூறை, யியலுறத் தாங்குந் தன்மையினெங்கு மினையி லா வோவியவுருவக், குயின்மொழிதனக்கு மருங்குளுண் டென்று கூறுவதன்றி வேறிலையே. 35

வடிமதுத் துளிக்கு நறுமலர்க்கொம்புமார வேளுருவமின் வல்லிக்,கொடியிளவஞ்சி விசும்புமெல்லியநூல் கோளரிவெண்பி றைக்கொழுந்து, முடியையம் பொய்கைப் பிடியெனப்பலருஞ் சொல்லுவ தன்றிவாரிதிசூழ், படிமிசை மதுரக்கவிஞர்தம்மனை மைப் பகரலாம் பாவைதனிடையே. 36

சேயிழையல்குலரவெனவதனைத் திங்கள்கண் டஞ்சிடுமெ ன்றும், சாயலைக்கண்டு மயிலெனவந்தத் தகையரா வெருண்டி டுமென்று, மேயுமிவ்விரண்டு காரணந்தனையு மெண்ணியன் றோ படாங்கொண்டு, மேயபொற்றிகிரி யனவல்குலதனை வெளிப்ப டாவகைமறைத் தனரால் 37

மதிநகற்பவள வாய்மயிற்சாயன் மடவரறிறன் மணிக்கு றங்கு, கதிர்பெறுகதலிக் குலத்தையுங் கப்பந்தன்னையும் வென் றமை காணூஉ, வதிர்குரற்றறுகட் புகர்முகநால்வா யானையின் கொடுங்கை மற்றதனை, யெதிரிடவஞ்சித் துதித்தலாற்றுதிக்கை யெனப்பெய ருற்றன மாதோ. 38

வேறு.

கனவினிலுமெமையெதிரே காணிலச்சங் கொண்டு வெய்யோன் கதிர்புகாத, வனமதனிற் கடிதோடும் வலியெதிர் பொருதவஞ்சி மறைந்துநின்று, முனைகொளுவெங் கணைதொ டுத்துத்துணைவரொடுஞ் சேர்ந்தவனை முடித்தானென்னத், தறு கிராகவன்விரந்தனை நகைக்கு மடவரல்தன் சானு மாதோ. 39

காவினிற் பயிலு மதன வேள் விருதாங் காகளஞ் சின்னமாய்ச் செய்து, மாவரா லினையும் வனத்திடைத் துரந்து மின்னிடு மெழிற்கணைக்காலை, யேவுபெய் தூணிகண்டெனம்புழு தி யாமினி யிதற்கினை யெவ்வா, றுவமென் றிரங்கி நின்றதா லன்றோ வதன்பெய ராவமானதுவே, 40

மாதவன்விழியு மாரவேள்கணையு மதுரமாம்பாற்கடற் பிறந்த, கோதையில் லக்குமமாய்ச் செய்தனை யினுமோர் குறையுளதென்னெனில் வள்ளி, பாதநோக்க வேண்டுமவ் வண்ணம் படைத்தரு ளெம்மையென் றன்றோ, வேதமில் விரிஞ்சன் றனைச்செழுங்கமல மின்னமுஞ் சுமந்து நிற்பதுவே. 41

வேறு:-இத்தகு கவினு ரேந்திழை யவளை யானவன்கா ணுமப் பொழுதே, யத்தநின் பொருப்புப் புயத்தினிற் றரிக்கு மலங்கலுக் குரியளா மென்னச், சித்தமேற் கொண்டுவந்தன னவள்பாற் சென்றுநீ மணம்புரி யெனவே. மெய்த்தவ னுரைத்து மகபதியுலக மேவினன் பின்னரெம் பெருமான். 42

வேறு:-இருக்குமுதன் மறைபலவுந் தேடரிய பதமும்பூ விடத்திற்றோய, விரித்துடுத்த கச்சிடையும் வீரகண்டா மணிப் பதமும் விளங்கவுற்ற,கருத்ததனி ஞாதன்செல் வடிவமெலாங் குடியிருக்கக் கணையும் வில்லுந், தரித்தவேடக்குமா ரனாகியுயர் வள்ளிவரை தன்னில் வந்தான். 43

சந்தமணங் கவர்ந்துதென்ற லுலவிவரு மலைச்சார றன்னிலோர்சார்,வந்ததினைப் புனத்தினிடைக் கிளிகடியுங் குரற்குயிலை வணக்கநின்ற, செந்துவர்வாய்த் துடிமருங்குற் சீரடிக்குங் குமக்கொங்கைச் சேற்கட்சீத, கந்தமலர்த் திருவுமொப்பில்களிறுமிலை விழியிணைகள் களிப்பக் கண்டான். 44

வேறு:-சிங்கவே றெனத் திடங்கொள் சிந்தையை
யங்கசன் கணை யலர்கள் போழ்ந்திடத்
திங்களா னனச் சேற்கட் சிற்றிடை
மங்கை மேவிதன் மருங்கிற் சென்றனன். 45

ஓவியவுரு வுறழநின்றிடும், பாவைதன்முகப் பதுமநோக்கியே, மாவும்வேலையும் வரையும் வென்றவேற், றேவனுண் மகிழ்வோடு செப்புவான். 46

அல்லைநேர் குழலாரணங்கனைச்,சொல்லுநின்பெயர் சொல்லாயெனில், மல்லலூர்சொலல்லேனின் மாநகர், செல்லுநல் வழி செப்பு கென்றனன். 47

வேறு:-மாதர்நோக்கினின் மைகமெனுழுதவோ, பாதபங்க யமபற்றி வருடவோ, சூதைவென்றது ணைமுலைமீதினில், சீத குங்கமச் சேறிணையப்பவோ. 48

இலகுதண்பிறை யேய்க்கு நுதலினில், திலகந்தீட்டவோ சிவிக்குழனில், மலரினுற்புனை மாலிகைசூட்டவோ, கலகமாரன் கலவி நூலோதவோ. 49

கந்தமார்கன்னிகாரங்குமிழ் மூருக்,கந்தவாம்பல்செவ் வம்பு யஞ்சண்பக; மிந்த நன்மலர் யாவையுங்காட்டினை,' யந்தமுல்லை யுங்காட்டியருளுவாய். 50

அத்தங்காட்டினை யாடகங்காட்டினை,சித்தமாரச்செழுந்து கிற் காட்டினை, நத்தங்காட்டிய நாகரிகக்குளிர், முத்தங்காட்டி யென் மோகந்தவிர்த்தியால். 51

காரைகாட்டுமைக் கண்ணிணைகாட்டிவேள் போரைக்காட் டினை போருக்குமாமணித், தாரைகாட்டுந் தனத்துணை தந்தல் குற், றேரைநட்டிச் செயம்பெறச்செய்குவாய். 52

வஞ்சகமாரன் மலர்க்கணை தாக்கியென், னெஞ்சடைந்தது நின்பதபங்கையந், தஞ்சமன்றிவேறில்லைத் தயவுகூர்ந், தஞ்சலெ ன்றினியாண்டருள் செய்குவாய். 53

கரமென்றும்மலர்க் காந்தளுங் கண்ணென்றுஞ், சாமூந் தேரளென்றுந் தண்கழையுங்கொண்ட, வரவமேகலையாயிதழ்த் தேன்தந்து, விரகதாபவிடாய்தவிர்த்தாளுவாய். 54.

வேறு:-வென்றிவேல் மயிலுமின்றி வேட்டுவவுருவர் தாங் கும்' வன்றிறற் குகனிவ்வாறு மாமயற் குணங்கள் காட்டி, நின் றிடு மேல்வைதன்னில் நெடியதா மிரலைகாளந், துன்றிய பம் பைசங்கந் துடிக்கட லொலியைச் சாய்ப்ப. 55

வேந்திறல் வேடர்சூழ வில்லொடு வாளிதாங்கித்
தந்தையா நம்பியென்போன் சார்தலு மஞ்சுவான்போல்
விந்தமால் வரையி லோங்கும் வியன்சினை வேங்கையாகி
[illegible] ங்ளாந்து நின்று னறுமுகத் தமல னங்கண் 56

வேறு:-கண்டனாத் தருவைவந்த வேடர்குழா முழ்றுமெரி கண்ணி னோக்கிப், பண்டொரு காலந்தனிலுங் கண்டறியா வேங்கையிந்தப் பசும்புனத்தின், விண்டொடர்ந்து நின்றதென்னு தீங்கொவேள்வாய்க் குயத்தால் வெட்டிவெட்டிக், கண்டதுண்டஞ் செய்யுமென்பார் வேரோடேதனையுமெனக்கடிதிற் சொல்வார். 57

வருகுறவ ரிவ்வாறு சினத்தினொடு புகலவவர் வதனநோக்கிக் குரிசிலமரியு நம்பிகூறுவானம்மனோர் குடிக்குத்தீங்கு தருவினாற் புரிந்திடவும் முற்றுமோ மதியிலீர் சாற்றுமென்ன திருமகருமுறுந்தேனுந் தினைமாவுங் கனிகிழங்குஞ் சேரநல்கி 58

வேடர்பிரான் தமர்களொடுஞ் சீறூர்க்கு மேவியபின் வேங்கையாகி, யாடல்செயு முருகேசன் பண்டுபோல் வேட்டவுருவாகித்தோன்றி, யேடவிழ்தார்க் குழல்சரிய வாலோல மெனச்சொல்லி யிதண்மே னின்று, பேடைமயிலன்னாட னருகில்வந்து பலமொழிகள் பேசலுற்றான். 59

வேறு:- குறவர் பூங்கொடி யேயிக் குரல்கவர்,புறவுகிள்ளை முதலிய புள்ளெலாம், நிறையுமியோசனை நீளத் துரத்துவ னறைமலர்தரு மாதவி நண்ணுவாய் 60

அல்லைநேர்குழ லாயுன் னணிமுலைக்,கல்லதன்றிமனமுங்கல்லானதோ, வல்லமாரன் வடிக்கணை யாலென்மெய், சல்லடைக் கண்ணதாக்கிச்சலஞ் செய்தான். 61

என்னவோதி யிறையவனிற்றலு, மன்னமென்னடை யாய்தொடி மாதராள், மன்னுநாணொடு மானில நோக்கியே. கன்னலின்சுவை கைக்கக்கழறுவாள் 62

இம்மொழியெமர் கேட்கிலிதுபொழு,தம்ம நும்மையடர்த்தத் துனிவரற்,செம்மையன்றுநீ சிவனைத் தாங்கியே,நன்மையோடு நடவுமினி யென்றான். 63

வேறு:-வேலைவிட்டு வருங்காளை யுடனிவ்வா றுயிழையாள் விளம்பி நிற்குங், காலையிலெம் மன்னைதனைப் பெற்றெடுத்த வேடர்பிரான் கருணைவாரி,போல் மறவர் புறஞ்சூழ வருதலைக்கண்

டியாய மொழிப் பூவையன்னாள், சால்வளைக்கை தன்னெறி
த்து மெய்சுடுங்கி முச்செறிந்து வாடிச்சோர்ந்தாள். 64

வேடுருவாய் வந்தருகன் முகநோக்கி யெமர்கள்பொல்லா
வெய்யர்நில்லா, தோடுகெனப் புகலுதலுந் தயவினிமாதுக்கு
நம்பி னண்டுண்டென்ன, வாடுமுக வரவிந்த நாண்மலரைக்
காட்டுழுது மறையோனுகி, யாடுதலையுமமோங்கிக் கனைக்கு
நெஞ்சுக் தளர்கடையு மாகிநின்றான். 65

வருவேடர்தம்பெருமான் திருமகடன் முகநோக்கி மாதே
யிந்தப், பெருமறை வேதியர் விருத்தர் யாரென்னக் குதலைமொ
ழிப்பேதை சொல்வாள், தெரிவரிய காஸ்மீர தேசமதிலிருந்து
தெற்குத் திசையிற் சென்று, கரியகட லாடுதற்காய் வந்தண
ரசும் வேங்கையெதிர் கண்ணுற்றஞ்சி. 66

கடிதோடவலியுமின்றித் தடுமாறி யயர்ச்சியொடுங் கவலை
கூர்ந்து, முடியாத பசியினொடு மிகவருந்தா ருழுவைகண்டு
மூசிக்கப்பட்ட, படியாலொன்றையும் வேண்டா ரொருவர்வழி
த்துணைகூடிற் பற்றிக்கொண்டு, நெடிதாமெம் மலைக்கானம நீங்
கியப்பாற் சேர்வமென நிகழ்த்தினுசால். 67

என்னவருந்தவப்பேற்றால் வந்தமகள் புகலுதலு மிணையில்
வேடர், மன்னவனே ராறுமுகங் கரந்துவந்த வேதியன்றன் வத
னம் நோக்கிப், பன்னரிய முதியவரே மூன்றுநாளிங்கிருமப்
பால் யாம்வந்து, நன்னர்வழித்துணைகூட்டி விடுதுமிகு பசியா
றனினேடும். 68

கந்தமிகுங் கனிதினைமா வேண்டுமட்டு மிக்கன்னி கைகொ
ணர்ந்து, அந்திவோ ளருந்தியிளைப்பாறியிரு மெனவேடர் தலை
வனேன், சிந்தைமகிழ்ந் துறைத்திடலு மயல்நின்ற தமர்வேடர்
செப்புவாரிவ், வந்தணனைத் தனியிருக்குங் குலமகடன்னிடத்
திருத்த லழகிதன்றே. 69

எனச்சொல்ல வேடர்பிரா னிருங்கானில் வியாக்கிரத்தா
[illegible]த், தினைப்புனத்தி னிடைவந்தான் மறைக்குரிய
[illegible] தலைபனிப்பும்

காட்டுமுதுமூப்புடையோன் காளையல்லன்,மனப்பயத்தாலவாது
வனை யிப்பொழுதே யேகென்றல் மாண்பதன்றே. 70

தனியிருக்குந் திருமகட்குத் துணையாகு மெனப்பலவுஞ்
சாற்றியிங்கே, யினிதிருத்தி முதியவரே யெனவுரைத்துக் குன்
றவர்கோ னெயினரோடுங், குனிசிலைவெங் கணைதூண்டிமனை
யுழுவை முயல்காடி குரங்கமேனங், தனிமடங்கல் குருகினங்
கள் வேட்டஞ்செய் தவன்பதியிற் சார்ந்திட்டானால். 71

வருவேட ரகன்றதற்பி னெம்பெருமான் குறவர்தலைமயி
லுக்கெமமேற், பரிவுடைத்தா தலினன்றோ தமர்க்கேற்கப்
புலிதொடர்ந்த பயத்தாலிங்கு, மருள்கொடுவந் தணைந்தவேதி
யனென்றனை யென்ன மனத்திலுன்னிப், பெரிது மகிழ் வாகி
மடப்பேதை முகம் பார்த்தினிய பேசலுற்றான். 72

யான்பகர்ந்த மொழியனைத்துங் கரந்தனது தாதைக்கு
மயலினின்ற, வுன்பொருந்து வேற்றடக்கை யுறுநர்க்கும் பகர்ந்
தெனதின் னுயிரைக்காத்தாய்,வான்புரிந்த நன்றிதனக் குவரிசூ
ழ்ந் திடுபுவிகைம் மாறென்செய்யுங், கான்பொருந்துங் குழலணை
ங்கே நீசெய்ந்நன்றிக் கியானசெய்யுங் கைமாறென்னா. 73

வேறு.

இணையநன்மொழி யியம்பியமாதராய்,நனிபசிப்பிணி நலியப
வாடினே, னெனநறுந்தினைமாவுமீந்தனை, தனை நுகர்ந்த வருநதி
சாற்றுவாய். 74

பாரெலம் முலைத்துணைப் பாவையேபசி, தீரநன் மதுவொடு
தேனளித்தனை, நீவிடாய் கொண்டன னெடியவிக்கிரிச், சாரலி
ற்றடஞ்சுனை தன்னைக்காட்டென்றான். 75

வேறு.

வாட்டடங்கண் மாது சொல்வாள் வடபாலேழ் வரைக்கப்
பால் மருதின் மாட்டுக், கோட்டிதழ்ச்செங் கவிமலர்க் கலை
யுன்று சென்றநந்து தூய் பிறென்னைக், காட்டினல்லவிருணிக
ம்புங் கடுங்கானிலவ்வண்ணங் காண்பேனென்று, ஞெட்டமொ
ரு மூன்றுடையோன் றனக்குபதேசித்தகுருநாதன்மன்னோ. 76

அரியமறை முதியவன்சொற் கிரங்கினன்று வாவென்பின்
னுகவென்று, பரிவுடன் கூடயோதிமப்பேடெனநடந்து தடஞ்
சுனையின் பாற்போய்த் தெண்ணீர், 'பெரியமுது வேதியரே வி
டாய்தீரப் பருகுமெனப் பேசலேகூடுஞ், சரியளைக்கை மாது
நல்லாய் நன்றெனவு மெந்தைமலர்த் தடத்திழிந்து. 77

ஒருகைநீர் திருவாய்ப்பெய் துவரிதியான் கொண்டவிடா
யொழிந்திடாதுன், திருமலர்ச்செவ் வாம்பனிகர்ச் செவ்வாயி
னூறலினோர் திவலைதந்தாற், பருகியுயி ருய்ந்திடுவன் பாவை
நல்லா யருட்கடைக்கண் பார்த்திடென்ன, விருசரண மலரி
னிற்றாழ்ந் திறைஞ்சுதலு மெய்நடுங்கி யியம்பலுற்றான். 78

வேறு.

எழுகுலத்தவர் யாவருமன்பொடு,தொழுகுலத்தினிற் றோ
ன்றும்பெறுமையா, யிழிகுலத்தினி லெய்துமெளியளைத், தழுவு
தற்கு நினைத்ததென் றன்மைகாண், 79

அன்றியுமெமர் சற்றுமருளிலார், கன்றுவெஞ்சின ரிக்குண
ங்கண்டிடிற்,கொன்றலாது குறைதவிரார்மாத,ரென்றும் வேதிய
ரென்றுங் குறித்திடார். 80

ஏனவின்புனத் திற்பசுங்கிள்ளைகண்,மானமென்புறா வின்கு
லம்வாயச, மானதியாவு மழிக்கும் விளைவினை, யானங்கே குவ
ணங்கது காத்திட. 81

மந்தரம்பொரு மற்புயவேடரு, மெந்தையுமிவ ணெய்திடு
முன்னமே, யுய்ந்திடும்படி யொல்லையிற் செல்லெனச்,செந்தினை
ப்புனஞ் சேர்நடந்தனள். 82

வேறு - மாங்குயிலாள் கற்பியலு மனத்திடமு மெம்பெரு
மான் மனத்தினோக்கி, ஈங்கிதனுக் கென்செயலா மெனநினைந்து
தனக்குமுன்ன பிளவலான, ஓங்குபணைத் தடக்கைமத வும்ப
றனை நினைந்திடலு முயர்வெற்பென்னத், தாங்குமொற்றைக் கர
மூசலாட்டிரு செவிக்காற்றுச் சயிலம் பேர்ப்ப. 83

தந்திமுகத் தெம்பெருமான் சுனைமருங்கில் வந்திடலுந்
தையல்கண்டு, சிந்தைநடு நடுங்கியரி வொழிந்துடலம் வெயர்வு

தாத் தியங்கியேங்கி, எந்தைபிரா னுமறையோன் றனைக்கடிதிற் கட்டியணைத் தினிமேலுந்தன், புந்திமகி ழும்படிக்குச் செப்பு பணி கேட்பனிது போதுதன்னில். 84

இவ்வானைப் பயந்தனைத்தீர்த் தெனையினிது காத்தருள் செய் யென்று தேறற், செவ்மாம்பற் றேன்றளிக்கு மாறென வே மயிலனையாள் செப்பலோடு, மவ்வானை முகத்து முன்னோன் றனைப்பரவி யிருக்கையிற்சென் றருள்வாயென்ன, வைவேலோ னுரைத்திடலு மிபமுகத்தோன கன்றபின்னர் வனத்திலோர்சார்

மாதவி மண்டபத்திலெய்தி வள்ளிநாயகியுடனே மருவியி ன்பச், சீதசா கரத்தமுழ்ந்தி யிருவோர்தம் மனமுமொன்றாய்ச் செவ்விதாகித், தாதவிழு மலர்ச்சோலை நிழல்நீங்கித் தினைப்புன த்திற் சார்ந்து தீஞ்செசர்ன், மாதிதணி லிவர்ந்து வருகுருகினத் தைத் துறந்திருந்தான் மயிலூரெம்மான். 86

மாங்குயிலி னினியமொழி மாதிருக்கு மிதண்மேல்பால் மாமரத்தின், பாங்கருற்று ளப்பொழுதி னயலேனப் புனங்காக் கும் பாங்கிவந்து, தேங்கமழுங் கோதைநல்லாள் திருமுகம்பா ர்த் திதழ்வெருப்புஞ் சிவந்தநோக்கும், கோங்கரும்புக் கொங் கைவிம்மும் மெய்முழுதா நரந்தமுங்குங் குமமுந்தோய்ந்த 87

வாசமுமென் னுதல்வேர்வு மனவேறுபாடுமிந்த வகை யெலாங்கண், டாசில்குறத் திருவனையா ளின்னேரந் தினைப்பு னம்விட் டயலினெங்கண், ணேசமொடு சென்றனை யித்தினை யெலாங் கிளிகவா நிகழ்த்தி டென்னக், கூசிமொழி பேசலஞ்சி மனத்துணிவா யிகுளையுடன் கூறலுற்றாள். 88

இன்னுயிருக் குயிரனைய பாங்கிகேள் வெயிலுருப்ப யான் பொறுமற், றன்னுசெழுங் காவிமல ரல்லிமலர் நிறைந்ததடஞ் சுனையிற்சென்று, மன்னியநீ ராடிவர வேகினேனெனவுரைக்க மதித்துநோக்கி,மின்னினிடை யிகுளைசொல்வாள் நறுங்களப வா சமலர் மெய்யின்மேலும். 89

திருநுதலிற் குருவெயர்வு மதழ்வெளுப்பு வனைநெரிவுஞ் சிவந்தநோக்கும், தருவதொரு சுனையுளதோ வுள்ளவாறுரை

யெனவுஞ் சைதயனல்லாள், பொருபிழைக ளென்மீதிற் கற்பிக்க வந்தனையோ போதுமென்று, மருலர்ச்சீசந் திருவனையாள் வெருண்டுசொல வுயிர்பபாங்கி வணங்கிச்சொல்வாள். 90

அறியாது சிறியேன்சொல் பிழைபொறுத்துக் கோடியென வன்பிற்கூறிச், செறிவாய்கன் மனத்தோடு மிகுளையுடன் மாதிருக்குஞ் செவ்வி நோக்கி, வெறியாருங் கடப்பணிதோள் வேலவன்பூர் தழைகண்ணி விரைவினேந்தி, மறிமானைக் கியரிருக்கு மிதணிழலி னின்றினைய வகுத்துச் சொல்வாள். 91

யானெய்த மதகிரியென நீர்சோரி சொரிந்திடவு மிந்தக் கானிற், றனெய்தக் கண்டதுண்டோ வின்னனையீ ருரையுமெனச் சாற்றக்கேட்டுக், கானெய்துந் தார்மார்பா வுனதுபெரு வலியுநீ கற்றிருக்கு, மேன்மைவித்தை தனையுமெங்கட் குரைப்பதென விகுளையவளியம்பிப் பின்னும் 92

அந்தணனிற் பெரியவனே தானையின்றிச் சிலையினுட னப்புமின்றி,விந்தகிரி போலுயர்ந்த தறுகண்மத வாரணங்கள் வேட்டஞ்செய்யத், தந்தரமு மந்திரமுங் கற்றதுபின் சொல்லலாந் தனியாயிங்கு, வந்ததென்ன காரியஞ்சொல் லென்னமறை யவனுன வள்ளல்கூறும். 93

வடதிசையி லிருந்துகன்னி யாகுமரி தோய்ந்திடவும் வந்தேனென்றான், றடமுலையளிவ்வனத்திற் றங்கியதென் னென்னக்கொடிதான் றடுத்ததென்றான், திடமனதாய்த் தடைநீரத் திருப்பதினதூரவுஞ் செல்வாயென்று, ளிடமகன்ற வல்குநல்லீர் கார்த்திகைநாள் செல்வனியா னென்றானண்ணல் 94

வேறு.

காரிகைமீர்க,வென்று வருகுவை கழறுகென்றாள்
வாரிமை முனிந்தோ னென்றும் வருமிரு ளகன்றுலென்றான்
பூருவமையாவெங்க ளுற்றது புகல்தியென்றாள்
சூரியன் காலைதன்னிற் றோன்றிட மென்றான் றாயோன். 95
பூந்தழை கண்ணிகொண்ட புதுமையென் னென்றாள் சூரைக்
காய்ந்தவ னினியதோர்மான் கன்றகப்படுத்தற் கென்றான்

ஏந்திழை நின்மேல்வாச மென்னென்றாள் பிரணவங்க
ளாய்ந்தவன் பருத்திதன்னு லாகியவாச மென்றான். 97

கோதைநின் னெஞ்சிற்சூது குடியிருப்பென்றா ளெங்கோ
னூதுநீ ரணிந்தகச்சிங் கவிழ்த்திடிற் றெரியுமென்றான்
ஏதமில் மறையோனின்றனிடைபொயா மொழியாமென்று
ளோதினும் மிடைபொய் யன்றி யொருபொய்மற் றில்லையென்றான்

நீயினி யுற்றதென்னு டென்றனள் நிகரிலாதான்
தீயினு ணின்றுவந்த செம்மறி யாகுமென்றான்
மேயமற் றாருநாமம் விளம்புதி யென்றாள் தையல்
தூயவன் குறங்குசோகந் துடையதனுமமென்றான். 98

வேறு:-இன்னவா றெம்பிரானு மினியதாய்த்,தன்னுயிர்த் துணைத்தாழ்குழற் சேடியுஞ், சொன்னவாசகத் தான்மகிழ் துன்னியே, யன்னமன்னவ ளன்பிலிருந்தனள். 99

ஏனல்காத்திடு மேந்திழைசெய் கையு,மானையெய்தின மென்றிடுமந்தணன், பான்மையுமவர் பார்வைகள் சொல்லுமென், றீனமின்யனத்தெண்ணியிருளையும். 100

வேறு:-மயிலனைய தலைவிதிருத் தாள்பணிந்து விடைபெற்ற வடபாலோர்சா, ரயலதனிற் றன்காக்குந் தினைப்புனத்தினிடையேகி யங்கணுற்ற, குயில்கிளிகள் புறவுமுதற் புட்குல, மே லாந்துறந்து குலவிநிற்கு, மியலறிந்தெம் பெருமானும் பாங்கியிடத் தேகியிவை யியம்புவானால். 101

வேறு:-கன்னியன்னப் பேடைநல்லா யெனதுயிரு மனதுமொக்கக் கவர்ந்துகொண்ட, பொன்னனையா ளிடத்தினிற்சென் றிதவுசித மொழிபலவாய்ப் புகன்றென் சிந்தை,தன்னைமகிழ் வுறச்செய்யிற் குலங்குடிகோத் திரமுழுதுந் தழைத்துவாழ்வாய், பின்னுமொரு கோடிபல னினக்குண்டா மெனவிரங்கிப் பேசலோடும். 102

தலைவிதிரக் தெரிந்தவுயிர்ப் பாங்கிசொல்வா ளுலகதனிற் லமையான, குலமதனி லவதரித்த வந்தணனீ யடாதமொழி

யின் மகிழ்ந்துகாத்த, லாய்ந்தமறை வலமேலாய்கின் மேற்கடனு
மெனப்பலவு மன்பிற்கூறித், தீந்தண்மொழிப் பாங்கியவள்
திரும்பிடலுந் தோகையொடுந் தேவர்தேவன். 115

வேறு:-விரைவினினடந்து பலபலவரையும் வெங்கடுங்கான
மூங்கித், தரைகிழித்துயரு நீள்பெறுவிசம்பு தைவருஞ் சிவ
மலைச்சார்பிற், குரைகமழ் பூங்கா விடைமதுபிலிற்றுங் குரவ
மாதவிசொரி கின்ற, விரைமலர்ப் பாய லிடைவள்ளி யுடனே
யிருந்திருந் தலைன்சுரர் மேலோன். 116

சங்கிவ ரிவ்வா றிருக்கவேரில்லா வெம்முனை யன்னையைப்
பயந்த, திங்ககன் மனத்ததா யருந்தமருஞ் செற்றலர் செருக்கினை
முருக்கும், வாங்குவெஞ் சிலைகனைத் தாதையு மூரின் மற்றுள
ரியாவருமீண்டிப், பூங்கிளி மொழியைக் கண்டலாதழுங்கிப்
பெருக்கென வெழுந்தபல் மனையும் 117

வேறு.-தெருப்பெரு சதுக்கங் கவலைபூந்துடவை செய்
குன்றுமலர்நறுஞ்சுனைகள், பருப்பதச்சார லருவிதாழ்விடங்கள்
பருமணி மேடையாடரங்கு, விருப்பமுற்றேறிய முடன்பல காலு
மேவிட னெங்கணுந் தேடித், திருப்பயில் காவில் புகுந்திடந்
தோறுந் தேடியா ராய்ந்திடுமளவில். 118

வரிவிழிப்பேதை மலரடிச்சுவடு மறையவன் றிருவடிச் சுவ
டுந், தெரிவரப் பற்றித் தொடர்ந்துவில்லெயினர் சிவமலைஞார
கரின்வந்து, விரிமலர்க் காவினணங் குடனிருக்கும் வேதியன்
றனை யெதிர்கண்டார், தரியலராகி வந்திடுமெயினர் தம்மையெ
மன்னையுங் கண்டாள். 119

கண்டவெல்லையினில் மனமிகக்கலங்கிக் கைநெரித் தெங்
தையைநோக்கித், திண்டிறலெயினர் வீரரோர் கோடி சிலையு
டைக்கையராயிங்கு, மண்டிவந்தனரே யென்செய்து மினியா
னென்னவா வெனவிரங்குதலு, மண்டர்கள் பெருமான் மயிலெயன்
னாளை யஞ்சலென்றவ ரெதிர்நின்றான் 120

வந்துமெயின ரண்டர்கோடியின்மேல் வானவர்தமக்
கெனாமேனா, மெந்தையென்றுயர் [illegible] [illegible]

தோடிவனொரு மணிதனேவெமது, கொந்தவிழ்கோதை மாதினைக்கரந்து கொண்டுசெல்வானெனக்குறித்து, வெந்திறற் கணைகள்கோடியின்மேலும் வேலவன் மீதினிற்பெய்தார். 121

ஆங்கவர் தொண்மேல் வருகணை தன்னையே யண்டலர் சிரங்களுஞ்சரணம், வீங்குடல் மார்பு புயமிடை தொடைகள் விரைவினிற் றுணிபெனவேவித், தாங்குவெஞ் சிலைக்கை யெயினரோரிலக்கர் தம்முயிரொருகணப் பொழுதி, னீங்கிடத் தடிந்து புன்னகைசெய்து நின்றனனிகரிலெம் மண்ணல். 122

அங்கது காலை நாரதமுனிவனுமிடையெய்தி வேல்கரங்க, துங்கவீரனையு மவனிடத்திருக்குஞ் சுகமனமொழியணங்கினையு, மங்கமெட்டுருபபுப் புடவியிற்படிய வடிபணிந் தேற்றி முன்னின்ற, சங்கரனுதவுங் குமரயாமொன்று சாற்றுவன் கேளெனவுரைப்பான். 123

மாதவன்சிவமா முனிவசனிவர்கள் வளர்முற்றுறை தெவம்மாயை, யாதரவுடனே பலபலவளர்த்த வருந்தவ வெயினர்கோமானைக், கோதிலாவவன்றன் குலத்துளோர் தமமைக்கொல்லுதனீதியன்றிவரிப், போதினிலுய்ய வருள்புரிகென்னப் பூதரக் குமரிசேய் மகிழ்ந்து. 124

வருசரற்கால மதியெனவிளங்கும் வதனமோராறு முன்னான்கு, திருமலர்க் கரமுங் கோடிபாதவர்கள் திரண்டொருபுடையுதித்தென்னப், பொருவரு வடிவுங் கிண்கிணிசதங்கை புலம்புசெஞ்சீரடிமலரு, மருள் செறிகமலவிழிகணீராறுமாகவே லேந்தி நின்றான். 125

வேறு:-இந்தவாறுகண்டெம்பெருமாட்டியு, மந்தமில்லதோரற்புதமெய்தியே, பந்தவேதப் பயன்றனைதக் கோதிய, வெந்தைமுன்னின் றினையன கூறுவாள். 126

வேறு:-மின்னகு கதிர்வேற் கரந்தொருகோடி வேளெனுந் திருவெழில் கரந்து, பன்னிரு கரமுங் கரந்திருமூன்றுபனிமதிவதனமுங் கரந்து, முன்னையவங்க முழுவதுங்கரந்து முதிர்மறைவேதியனாகி, யென்னையோர் பொருளாய் மதித்தவன் றெனி யாட்கிதம்பெற வினியன புகன்றாள். 127

நன்னெறி முறையே வழிவழிசிறந்து நலந்தரும் பொருள் தனையுதவு, மென்னுயிர்ப் பாங்கிக் கிதம்பல பேசி யெனக்கவட் கொண்டுபோதித்து, மின்னிலவரைப்பின் னேழைமார் போலி யா னீட்டிடும் பிண்டிதேனயின்றும், பின்னரும் வணங்கி நின் றவா றென்னோ பேசுக வென்னையாளிறைவ. 128

கருதருங்கவுரி மதலையென்றுன்னைக் கனவினுந் தெரிந்தி டின் மற்றுன், றிருவுளப்படிக்குச் செயத்தகுபணிகள் செய் குவன் மறையுநான் முகனும், பொருவின் மாதவனு முனிவருஞ் சுரரும் போற்றிடுங் கிண்கிணிச்சரணப், பெருமநின் மாற்றம் வினவிடா திருந்த பிழையெனக்குற்றதே யென்ன. 129

வேறு:-பேதைசொற்றலுந் தேவர்தே வாகிய பெருமான்
மாதரா யிங்கு வருகென மடியில்வைத் துன்மேற்
காதலால்விளை யாடலைக் கடிகமழ்நினது
பாதபங்கயம் முடியுறத் தாழ்ந்தனம் பரிந்து 130

மற்றதில்வருங் குற்றமே தின்னமுன் மலர்த்தாள்
பற்றியாடல்செய் குதுமியாம் பண்பினிமென்ன
வெற்றிவேல் விழி மெல்லியல் முதுகுறைவந்து
நற்றிறத்தருள் புரிதலு மாதோன்று நவிலும். 131

தடங்கைவெஞ்சிலைத் தாதையு மன்புறுந்தமரும்
விடங்கலுழ்ந்திடும் வேற்படை மறவரும் வெற்பி
னிடங்கடோறுமுற் றண்டிய வீரர்களெவரும்
அடங்கலும்மெளி யேன்பொருட் டாகவநதன்றோ. 132

உன்னருந்திறல் தெரிந்திடா தெதிர்த்துயி ரொழிந்தா
ரன்னமரந்தர்க ளுய்யும்வண்ண மருள்புரிகெனலும்.
முன்னநாரத முனிவனு மிம்முறை மொழிந்தான்
சொன்ன வண்ணமியான் செய்குது மெனவருள் சுரந்து 133

ஈண்டுமானவெஞ் சினத்தராயெம் முடனிகலி
மாண்டகானவ ரியாவரு முய்கென மனத்திற்
காண்டலும்மவ ரியாவரு மெழுந்தொலி கடல்போ
லீண்டி யெந்தைதா ளிணைமலர் பரவிநின் றிசைப்பார். 134

மங்கு ரேய்ந்திடும் வரைக்கெலா மன்னவனுகி
யெங்குலத்தினை யிரட்சைசெய் தெய்வநீ யெங்கள்
கங்கணக்கர மடைந்தையைக் கவர்ந்துகொண் டேகி
னங்குளாரெமக் கென்றுகொள் வாரியம் பேந்தாய் 135

இற்றை நாள்வரை மருவிலா வெங்குலத்தினுக்கோர்
குற்றம்வைத்தனை யினிச்செய லாவதென்குலத்தி
னுற்றகானவர் நட்பின ரூருளோர் காணக்
கொற்றநன்மணஞ் செயவினிதருள்கநீ கொள்ள 436

யாங்கள்வாழுமூ ரளவும்வந் தெம்மனை யிடத்திற்
பாங்கினன்மணஞ் செய்துகொண் டணங் கொடும்பரிவா
யீங்குவந்தினி திருக்கலா மித்திரமருளென்
றோங்குதன்கிளை யொடுபணிந் துரைக்கவுண் மகிழ்ந்து 137

அந்தவாறுசெய் குதுமென வாயிழைதமராய்
வந்தகானவர் சூழ்வர யாழில்வல்லவனு
மந்தளிர்ப்பத வணங்குட னெந்தையாங் ககன்று
விந்தமன்னமேதோர் வள்ளியஞ் சிலம்பின் மேவினரால் 138

எந்தைமன்னைதன் றுதையு மெயினர்கு ழாமுங்
கொந்தலர்க்குழ லெயிற்றியர் குழாங்களுங் கூடி
யந்தமில்லதோ ரற்புத வெள்ளமேற் பொங்கச்
சுந்தரச்சிறு குடியெலா மணிபெறத் தொகுத்தான். 139

மருமலர்க்குழல் வள்ளியை மணவணிசூட்டி
யிருவிசும்புதை வந்திடு மிளந்தளிர் வேங்கை
விரைமலர்ப்பருஞ் சேக்கையின் மீதினிலிருத்தி
வரையெறிந்தவேற் குமரனை வலவயின் வைத்து 140

தெய்வயாழ்முனி மணவினைச் சடங்கெலாஞ் செய்யத்
தையல்தந்தைவந் தெம்பிரான் றிருக்கரந் தன்னின்
மையல்வேற்கணெம் மன்னைதன் மலர்க்கரஞ் சேர்த்து
மெய்ம்மை யாகநங் குலத்துயர் வேலவர்தமக்கு. 141

வேதமாகம முனிவர்களெழுவர்கள் வெய்யோ
ளுதியாகுமுச் சுடர்களும் பூமியந் தரமாந்

நீதிநாதனும் மூர்த்தியுந் தெரிந்திடச் சிறியேன்
மாதையின்றுதான் கொடுத்தன னென்றுநீர்வார்த்தான். 142

சங்கமார்த்தன பேரிகளார்த்தன தடாரி
மங்குலென்னவு மார்த்தன மத்தள மொந்தை
எங்குமார்த்தன வந்தர வியங்களு மார்த்த
வங்கண் வானவர் பூமழை பொழிந்தன ரார்த்தார் 143

வேறு:-வெள்ளைவிடை மேவிமய மெல்லியலும் பிஞ்ஞகனும்
புள்ளரசின் மேன்மாலும் பூமகளுமோதிம மேற்
கள்ளவிழுங் கோதைக் கலைமகளு நான்முகனு
மெள்ளவிலா வாரணமே லிந்திரனுஞ் சுந்தரியும். 144

கொந்தாரலங்கற் குழலரம்பை மாதருடன்
முந்துதவஞ் செய்யுமுப் பான் முக்கோடி வானவரு
மந்தரமே நின்றுதனி யாடலாய் வந்துசெயுங்
கந்தன்றிருமணத்தைக் கண்களிபடக் கண்டுநின்றார். 145

திங்கண்முகக் குமுதமலர்ச் செய்யவாய்க் குறமாது திருக்கழுத்தின்
மங்கலநாண் சாத்தியனல் வலம்வந்து நகையரும்ப வுளளியாத
பங்கயமா மலர்க்கரத்தாற்பற்றியம்மி மீதில்வைத்துப்பரிந்துசாலி
யெங்குளாளென நாடியருளொழுகும் விழிகளிப்ப வெதிரினேக்கி.

செய்யுமணவினையாவு முஞற்றியபி னெந்தைபிரான் செவ்வாய்த்தீஞ்சொற், றையலுட னெமதூர்க்குப் போய்வருது மெனமகிழ்விற் சாற்றக்கேட்டு, வெய்யசிலை யெயினரொடும் வேடர்பிரான் றாழ்ந்தெழுந்து மிகநன்றியாக, ஞெய்யும்வகை யெமதுசிறு குடிற்குவந்து நங்குலத்தி லுதித்தமாதை. 147

உலகரிய மணஞ்செய்து கொண்டதே கோடிதவ முடையரானேஞ், சலசமலர் மேலவனை வல்லிபூட்டிய தலைவ நவப்பேறுமெங், குலமகளைக் கண்ணிமைபோற் காத்தல்கட னினக்கெனவுங் கூறிவாழுக, தலைமகனுக் கேகுமென வுரைத்துமீண் டெயினர்பிரான் றன்னிற் சார்ந்தான். 148

அருந்தவ நாரதனுமெங்களையன் விடைபெற்றுமல ரவன்பாற் சென்றான், சருந்தடங்கண் மாதிரெடு வள்ளிவரை முதல்

வரையுங் காத்துநீங்கி, யிருந்தவர்கள் பரவுசிவ மலைமேல்வாசு தினி திருந்தா னினையிலெம்மான் 149

என்னையாளுடைக் குகனுட னமர்புரி யெயினர்யாவரும் பட்டுப், பின்னரங்கவ னருளினுற் பட்டவர் பெறலரு முயிர் பெற்று, நன்னராவித் தெழுந்ததா லத்திரு நகர்தனக்கினிதாக, மன்னு நாமம்பட் டாலியென் றுயது வளங்கெழு புவியேத்த 150

வள்ளிநாயகி திருமணச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம். 429

வள்ளிநாயகி தருமஞ்சேய் சருக்கம்.

மின்னிய வயிற்படை விசாகனொரு வேடக்
கன்னியை மணந்துவரு காதையை வகுத்தே
மன்னிய பொன்மின்னிறொடுமாதுகுற வள்ளி
பன்னரு மறங்கள்பல பண்ணியது சொல்வாம் 1

என்னையாளுடை யெந்தைகந்தனெம், மன்னை தன்னுட ன கமகிழ்ச்சியாய்ப், பொன்னின்மேருவிற் பொருந்துகோடதா, மின்னெடுஞ்சிவ வெற்பின்மேவுநாள். 2

துள்ளுறு சேல்விழித் துடியினேரிடை,வள்ளிநாயகி மகிழ் நன் றன்முகக்,கள்ளவிழ்த்ந்திடுங் காமனேக்கியே,யுள்ளமின்புற வொன்றுகூறுவாள். 3

என்னையாளுடை யிறைவமந்தரம், பொன்னகம் வெள்ளிப் பொருப்பின் மஞ்செறி,நன்னகம்பல நண்ணப்பூவினி,லின்னகத் தினி யிருப்ப தென்னென்றாள். 4

வேறு:-காவியங்கருங்கட் செவ்வாய்த், தேவியம் மொழி செப்பலு, மாவின்மேல் வருமண்ணறன்,கோவில்வந்தவன் கூறு வான். 5

இன்னுயிர்த்துணை யிறைவிகேள்,முன்னம்வேலை முனிந்தவன் றன்னையுன்னித் தனித்துமால், பன்னருந்தவம் பண்ணினான். 6

வேறு:-அந்தமாதவன் றனிருவிழியதனி லானந்தநீருகு ளிதான், வந்தனவந்த விரண்டுழீரேழு வகையதாமுலகினிலு

ள்ள, சுந்தரந்திகழுந்த மாதர்களையாரு நுதித்திடத்தக்கபே ரெழிலாய், வந்தனரமுத வல்லி சுந்தரவல்லியென் மங்கையர்மாதோ. 7

ஆங்கவரெம்மை யுன்னியேயிந்த நாட்டிடை யரியமா தவங்கள், பாங்குற நெடுநாட் செய்தன ரவர்தம் பரிவுகண்டியான்றனிச் சென்று, கோங்குமென் முலைக டாங்குமெல் லியலீர் கூறிடும் வேண்டிடும் வரங்க, ளீங்கருள் செய்வோ முளமகிழ்வாக வியம்புதி ரியம்புதி ரென்றேன். 8

என்னலுந்தாழ்ந்து நின்னையாமணஞ்செய் தென்றுநின்னிடத்தினிலிருக்க, வன்னவா கனனே முனிந்திடுமிறைவ வருளெமக்கிவ்வர மென்னக், கன்னலின் மொழியீ ரிருவரி லொருவர் கற்பகநாடதுபுரக்கு, மன்னனிந் திரன்றன் மகளெனவருதிர் மற்றொருபேதையர் தாமும். 9

தீதறுமனத்து முனிவரிற்சிறந்த சிவமுனி யெனப்பகர்கின்ற, மாதவர் வெய்ய கானிடையரிய மாதவ முயன்றிருக்கின்று, ஞெதுமம் முனிபாற் செல்லுமி னவர்முன் னொருபிணையெய்துமற் றதன்பாற், காதல்கூர்ந்துடனே புணர்குவனந்தக் கண்முழைவயின்வயிற்சென்று, 10

மகண்மையாய்க் குறவ ரிடத்தினிற் சிலநாள் வளர்ந்து செந்தினைப் புனந் தனைக்காத், தகமகிழ்வாக யிருத்திர்முன்றே வராதிபன் மகளிரை மணந்து, பகருமற்றதன்பின்றினைப் புனங் காக்கும் பாவை தனிடத்தினிற்சென்று, புகலரிதான மாதவி நிழற்கீழ் பொருந்துமெண்மணமதிலரிதாய். 11

பேசுகந்திருவ முறையதாய் மணந்து பின்பு தாய்தந்தை சுற்றத்தார், மாசிலன்னகரார் பற்பல ரறிய வதுவைசெய்திடுவம் யாம்நீவிர், கூசிகலாது செல்லுமினென்னக்கூறின மவரிருவோரும், நேசமுற் றியாங்க ளுய்ந்தன மென்ன நேரிழை யிருவருஞ் சென்றார். 12

அன்னவாறாக வவதரித்திருந்தா ரியாமவர்க்கந்த நாடன்னிற், சொன்னவா சகத்தின் படிமணந் தின்ப சுகங்கொடுத்தரு

ளுகின்றோமா, லென்னவுங் குறவர் குலத்தினில்வாத விறை விதா னெனத்தெரிந்தயில்வேன், மன்னனைப்பணிந்து யாதொரு பெண்டான் மற்றொருகன்னியெங் கென்ன. 13

புவனமோரேழிற் பொருவிலாக் கணிகைப் பொருப்பி டைச் செம்பொனா லயத்திற், குவடெனப்பணைத்த முலையரம் பையர்கள் குளிர்மல ரடிபணிந் தேவல், கவனமாய்ப் புரிய வினி திருக் கின்றாள் காண்குவை நீயுமாங்கவளைத், துவளுறு மிடை யாய் நீவிர்க டவஞ்செய் தொண்மைநா டாகையினாலும். 14

ஆடகமேரு வுச்சியிலெந்தை யருளுட னென்றும் வீற் றிருக்கும் கோடது வாகை யாலுமெம்மன்னை கூறருந் தவஞ்செயலாலுந் தேடருந்துணைவ ரொன்பதோ டிலக்கர் சிறப்புட னுதித்ததனாலும் பீடுறு முனிவ னகத்திய னம்மைப் பெரிதுகந் தருச்சனைபுரிந்து.

இங்கிருந்தென்று மடுத்தவர்க் கெல்லா மிம்மையிற்றனத னல் வாழ்வு, மங்கவந்தத்தி லினையின் முத்தியுமீ யருளென வேண்டிதலானு, மெங்குளா நகர்க்கு முத்தம நகரா மின்னகரா கையினாலும், பங்கமில் சித்த ரெண்ணிலர் வந்து பரவியங் குறை தலினாலும். 16

ஒருகண மேனு நீஙகலன் விசும்பி னூடளா விச்சிவமலை யைப், பொருவிலிச் சயிலந் தெரிந்திடு மளவும் புண்ணிய பூமி யாமிதனில், பரிவுட னன்ன தானமாதிகளும் பவுண்டரீகம் மு தன்மகமுந், தெரிவுறச் செய்யி லன்னிய தலத்திற் செய்பலன் றனிற் சகத்திரமாம். 17

இம்மலையிடத்தி லெமையரிச் சிப்போ ரிந்திரபோகமார்ந் துள்ளச், செம்மையராகி முத்திசேர்ந் திடுவர் சிறந்திடு மித்தல மதனில், அம்மலி பூங்கா நந்தன வனங்கள் வைத்தவ ராலயங்க ண்டோர், விம்மிதக்கனகப் பணிகள்செய் திட்டோர் விளைநில முதவினோ ரின்னும். 18

பகரபிடேக நிவேதனஞ் செய்வோர் பத்திமை யுடனதில் வசிப்போர், புகரிலம்மலையை வலம்புரிந்திடுவோர் போற்றியே நமைத் தெரி சிப்போர், சகமுழுவதுமேயோர் குடைநிழறனி

லான் சக்கிரவர்த்தி மன்னவராய்ச், சிகரபந்திகள்சேர் கயிலை மாமலையிற் சிவகணத் தலைவர்களாவார். 19

வேறு:-என்றுகூறிய விலையிலெம்பிரான், றன்றுணையபதங் தாழ்ந்து போற்றியே, மன்றலார்குழல் வள்ளிகூறுவாள், நன்ற நாகுமின் னாட்டில்யாளுமே. 20

அறமியற்றிட வானதோர்பதி, யிறைவகூறென யிரங்கிக்கூறுவன், கறையயிர்ப்படைக் கரன்மகிழ்ந்துசெப், நிறைபருந்தநீ கர்க்குங்கற்புடை. 21

தேவி வள்ளிதன் றிருக்கரம்பிடித், தோவியம மெனவுருவ நற்றமே, நீவிவாஞ்சையி னிகழ்த்துவான் முன்னாட், டாவிலாப் புகழ்தழைக்குவகாஞ்சியில. 22

ஐயையாகுமம் மன்னையிவ்வுல, குய்யுமாறுசால் போன்றுநா லெட்டு, மெய்மமைநல்லறம் விருமபிசெய் முறைச,செய்யவலலை யோ வெனவுஞ் செப்பியே. 23

வேறு:-இநதமலைநப் பூரவ திக்கதனிலிளமரக்காக்
கந்தமலர்ப பூஞ்சோலை கடிகமழ் தாமரையோடை
யநதமிலா வளஞ்செறியுமறைசை யென்னும பதிசென்று
சிந்தையுட னற்றருமஞ் செய்தியென முகமலாந்து. 24

சுமையுடன்குற் றேவல் செய வயுதம்விண்ணவர் மகளிர
தமையுமுடன் கூட்டியக்க ணெகென வுந தாணபுகன்றவ
குமைமகன்வீற் றிருந்தனனமற ரொடாடியவவாறு சென்று
விமலமுடை யறச்சலூர் மேவியவகணிணி திருந்து 25

இளங்குழவி தலைக்குதவேய்த திடவெண்ணையருந்திடப்பால்
வுலங்குலவு மறுசுவையூன் வநதார்கள் பசிதீர
உளம்பொருந்தித் துயில்கூற வொண்டொடடிற் கட்டில்மெத்தை
சளஞ்செய்யும் பலபிணிகள் தவிாநதுய்ப வருமருந்து 26

வாட்டுபொருந் தாகவிடாய் மாற்றமலா பாதரிபூக்
கூட்டுநறுந் தெண்ணீர்மெய்க் குளிர்க்காடை வெப்பாற்ற
வீட்டுசெட்டி வேர்விசிறி விணையபாத ரட்சை குடை
யாட்டவிக்கள் துறைதக்குபண்செய் டனிமரைக்கா விடம்பின்னும்

பரிவினொடு முதல்வியிந்தப் படியறப்ப ணாட்புரிந்து
வரிவிழிச்சிற் றிடைவள்ளி யாதிருக்குமப்போது
விரிசுடர்வை வேற்கரச்செவ் வேள்சிவமா வெற்பிசெருந்
தொருபசுந்தோகையிலேறி யொண்டொடிபாற்சென்றணைந்தான். 28

தன்பன்னி வள்ளிபுரி தருமமெல்லாம் பார்த்துமகிழ்ந்
தன்பினொடு நீபுரியு மறங்கண்டு மகிழ்ந்தனமயா
மின்பமொடு வேண்டும்வரம் யாதுபுகல் தருதுமென
மின்பயில்வே லவனுரைக்க மெல்லியல்தாழ்ந் திணையசொல்வாள்.

வேறு:-நம்பினர்க்காக் குந்தெய்வ நாயக வெனையாளைய்யா
பைம்புனத் திடைவந்தென்னைப் பரிந்துமே விரதால்யான்முன்
கும்பிடுந் தேவரென்னைக் கும்பிடப் பெற்றேன்மற்றுன்
அம்புயந் தன்னிற்பூந்தா ரணிந்தரு கிருக்கப்பெற்றேன். 30

இப்பெரு மிதங்கள் யாவு மிறைவநீ தந்திருக்க
மெய்ப்பெரு வரங்கள்வேறு வேண்டுவ துண்டோவிந்த
மைப்புய லுறங்குங் காச்சூழ் மல்லலம் பதியெம்பேர்கொண்
டெப்புவி யோருஞ் சொல்லி யிசைபெறத் தருதியென்றாள். 31

அள்ளிலைவே லண்ணான்மகிழ்ந் தாயிழையாள் முதுகுறைவந்
தொள்ளிழையா யிப்பதிதா னுன்பெயரால் விளங்கவென்றான்
வள்ளறச லூரென்று மெய்நகருக் கன்றுதொட்டு
வள்ளியறச் சாலையென மற்றதன்பே ரானதுவே. 32

எந்தைபிரா னவ்வரமீந் திறைவியொடு மயின்மேலேறி
மந்தரமா வெற்புநிகர் வந்ததனி யாலயஞ்சென
றிந்துநுதற் பேதைதெய்வயானையைக்கண் டிருபாலும்
பைந்தொடியா ரிவர்களுற மிருந்திடப்பன் னிருந்து 33

தேவியா ரிருவரொடுஞ் செவ்வேள்பொன் மயின்மேலேறித்
தாவிறிருத் தணிநீங்கித் தரியாமற் சிவமலைவந்
தேவனக்கண் மாதருட னினிதிருக்கு மேன்மைதனிற்
றேவருக்காய் வேலையுண்ட திருமுனிவ னங்குவந்தான். 34

அத்திமுகற் கிளவலையு மன்னையர்க ளிருவரையும்
பத்திமையாய்த் தாழ்ந்திறைஞ்சிப் பரமனார் குரவனின்னை

யித்தினமுமா யான்பூசித் திடவேண்டு மெனவேண்ட
வத்தனுமெம் மன்னையரு மணியுருவிற் புக்கிருந்தார். 35

விந்தமடக்கிய முனிவன் மெய்யாக முப்முறையாய்க்
கந்தனையு மங்கவன்றன் காதலமொ டிருவரையும்
புந்தியுடன் பூசித்துப் போற்றியெந்தை விடைபெற்றுச்
சந்ததமும் வீற்றிருக்குஞ் சந்தவெற்புச் சேர்ந்தனனால். 36

வள்ளிநாயகி திருமணஞ்செய் சருக்கம் முற்றிற்று

தீர்த்த மகிமைச் சருக்கம்

வேறு:-கரிய வன்விழி தனில் வருங் காரிகைவள்ளி
பரிவினோடுநல் லறம்புரி செய்கையைப் பகர்ந்தேந்
தெரிய மாமுசு குந்தற்குக் கோதமன் செப்பு
மரியதீர்த்தத்தின சிறப்பையுந் தெரிந்தவா றறைவாம். 1

வேறு:-கருணையந் தாமரை யுணர் கலவிக் கரம்
பொருவரு தருமத்தினை வேலி போர்மக
டிருவிருப் பாகிய புயத்தன் செல்வத்தி
னிருநிதித் தனதன்மெய் யெழிலின் மாரவேள் 2

தருவினை யிகழ்வுசெய் சலசச் செங்கையான்
பொருதிரை வாரிதி போலுஞ் சேனையா
னொருகுடை நிழலிற்கோ லோச்சு மாணையான்
பெருமைகொண் முசுகுந்த னென்னும் பேரினான் 3

நிகரறு மனுநெறி நடத்து நீதியா
னிகல்வலி யசுரர்மே லெதிர்த்து வெங்கண்டு
மிகமக பதிக்குநல் வெற்றி தந்தவன்
சகமலி யுயிர்க்கன்னை தந்தை போல்பவன் 4

வேறு:-கலியிருடுறந்து நல்லறம் வளர்த்துக் கறைமிடற்
றண்ணலைச்சுரபி, யொலிசெழு மனுவோ டருச்சனைபுரிந்த வுயர்
வஞ்சி நகரின்கண் வாழ்நாள், வலிசெழு புலனோ டைந்தையும்
வென்ற மாதவக் கோதம முனிவனை. மலிபுகழ் படைத்த மாமு
சுகுந்த மன்னவன் றனைவந்து கண்டான் 5

அஞ்சலிசெய்து முகமனன்குரைத்தோ ராசன மிட்டருச்
சித்துக், கஞ்சமாமலர்வாழ் நான்முகனிகரறு கடவுண்மா முனி
வவெங்கெங்கு, சஞ்சரித்திங்கு வந்தனையென்ன தகைமை சேர்
முசுகுந்தன்வினவ, நெஞ்சகத் தரனை யன்றிவேறெண்ணு நிமல
மா முனிவரனிகழ்த்தும். 6

வேறு:-கங்கை முதலுலகிலுள்ள தீர்த்தமியாவுங் கண்டபடி.

ந் தாடிமிகக் கருணையோடும், தங்குபசுபதியைமனக் கவலைதீரத் தாழ்ந்திறைஞ்சவிக்ருவந்தேன் சதமகன்மேற், பொங்குகடலென்சூழ்தா னவர்களாரும் புறங்கொடுத்தோடப் புரிந்த புகழோ யென்றான், புங்கமிகு முசுகுந்தக் குரிசிலுள்ளம் பூரித்து மகிழ் வினொடுபுகலுவானால். 7

பாரில்வரு தீர்த்தத்திற் றோய்பவெய்தும் பலன்களென்ன வென்று மன்னன் பகரக்கேட்ட, சீரியநன் முனிசொல்வான் பலன்களொன்றோசித்தத்தி னினைந்தவெல்லாஞ் சிறக்கநல்கும், வாரிசன்மான் முதலான கடவுளோரு மாதவரு மாந்தர்களும் மற் றுளோரும், பேரியலு நன்னதி கடன்னிற்றோய்ந்து பெற்ற பே ற்றினையளந்து பேசலாமோ. 8

என்னலுமியான் கொண்டகுன்ம வலியினோயை யெத்தீர்த்தந் தோய்ந்திடிற் றீர்ந்திடுஞ் சொல்லென்று, மன்ன னுரைத்திடலு முனிவரனகைத்து மாருதசனனநோய் மற்றுந்தீர்க்கு, முன்னவரிதாந் தீர்த்தம் பலவாகக் கோடியுண்டதனிற் சிறந்தது வுமுரைக்கமுற்று, தென்னிலுமிப் பதிப்பசசி மத்தின்வீரை யென்னுமொரு தலமுளதத் தலத்தினாடே. 9

செப்பரிய தீர்த்தங்கள் பலவாமந்தத் தீர்த்தத்திற் சிறப்புடைய தீர்த்தமேமா, மெப்பரிதாங் கங்கைதன்னிற் பொன்னிதன்னிலுததிதனி லாறிரண்டாண்டுக்கோர் நாளின், மெய்ப்புருயந் தாகினிமோய் மகததீர்த்தத்தின மேலாகு மதிற்படிந்தோர் இருப்பமாகு, மெய்ப்பொருளும் பெறுவர் சிவபதவிசேர்வ ரென்னிலதன் பெருமையவரியம்புவாரே. 10

அந்தமகா தீர்த்தப்பேர் சக்ரதீர்த்த மகத்தியதீர்த் தமோங்கு மனுமதீர்த்த, மிந்திரதீர்த் தப்பரமானந்ததீர்த்தமிய ம்பிடுமங் மளதீர்த்த மிணையிலாத, வந்தவினை தவிர்வீரதீர்த்த மென்ன வருத்தவெழு தீர்த்தமொடு மாலினுந்தி, வந்தவயனுதியாத் தீர்த்தந்தன்னில் மகிழ்வொடுதோய்ந் தவர்பெற்றமகிமை சொல்வாம். 11

வேறு:-பண்டொரு வைகறன்னிற் படைப்பயன் மறந்தானீல
கண்டநல் லருளினாலே கருதருமாபிவுவந்து
தண்டருங் கமலர்பூத்த சத்தியாதீர்த்தந்தன்னைக்
கண்டதின் மூழ்கிவேதங் களைகண்டுவிதிப்புங் கண்டான். 12

மாதவன் விடத்தையூட்டி வன்முலைப்பாலைத்தந்த
பூதனை தன்னைக்கொன்ற பொருப்பழி விடாதுபற்றத்
தீதினை யகற்றுஞ் சக்தி தீர்த்தத்தின் வந்துமூழ்கிப்
பாதக மனைத்துநீங்கி பழம்பதித் துவரைபுக்கான் 13

அகத்திய தீர்த்தந்தன்னி லறத்தனு நிருதிதோய்ந்து
மகத்துவ மிகுந்தோர் திக்கின் மன்னவனானான் பாரிற்
புகழ்ப்பெருக் குடையகாதி புதல்வனு மதிற்படிந்து
சகத்தியல் கடந்து நின்ற தவர்கள்தன் றலைவனானான் 14

பொன்னுல கிறையாயங்கு போந்திடு நகுடமன்னன்
பன்னகமாகித்தீராப் பழிபெறுங் கொடியசாபஞ்
சொன்னவித் தீர்த்தந்தன்னிற் றோய்ந்துதன் சாபநீங்கி
மன்னுல காண்டுவெள்ளி மலைச்சிவ கணங்களானான் 15

அருவினை முழுதுந் தீர்க்கு மனுமன்யா தீர்த்தந்தன்னிற்
றருமனோடைவர்மூழ்கித் தரியலர்ச் செருத்துவாச
மருமலி வாகைசூடி மண்ணுல கதனையாண்டு
திருமலி தேசமன்னர் திறைதர வாழ்ந்தார்மன்னோ 16

இந்திர தீர்த்தந்தன்னி லியம்பரும் பாண்டுமன்னன்
வந்ததின் மூழ்கிப்பாண்டு வலிபிணி தீர்ந்துவாழ்ந்தான்
மந்தர வரைக்குத் தாம்பாம் வாசுகி தானுமூழ்கி
முந்துவெங் குன்மநீங்கி முடியாத வின்பமுற்றான், 17

சீதமார் பரமானந்த தீர்த்தத்திற் சிலம்பின் வந்த
மாதர்கள் மூழ்கிச்சேற்கண் மலைமகள் சபநீங்கி
மேதகு மிலக்கத்தொன்பான் வீரரைப் பயந்துவெள்ளிப்
பூதரந் தனிலெம்மன்னை பூம்பதத்தடிமை பூண்டார். 18

சித்தர்கள் பல்லோர் மூழ்கிச் செங்கதிர்த் தேசமேவி
மெய்த்தகு முகம்பல் கண்டு வீற்றினி திருந்தார் மற்றுஞ்
சத்திய பாமைமூழ்கித் தண்டுள வோனையுற்றாள்
பத்தர்கள் பலபேர் மூழ்கிப் பாகதியுற்றார் பின்னும். 1

இயம்புமங் கலதீர்த்தத்தி லிரதிதோய்ந் தெரிந்தமாரன்
வயம்பெறு மாவியுய்ய வரங்கொண்டின் பசுகங் கொண்டாள்

தயங்கிய வீரதீர்த்தந் தனிற்சுக்கி ரீவன்ரோய்ந்து
செயப்பெறு மிராமனட்பாய்ச் சென்றுதன் பகையைவென்றான்
இவ்வெழு தீர்த்தந்தன்னு ளியாதொன்றை விழியாற்காணிற்
செவ்விய கரத்தாற்றீண்டிற் ரோய்ந்திடிற் செல்வங்கல்வி
கல்லைமங் கலமேபெற்றுக் கருதுபல் போகந்துய்த்து
வெவ்வினை பலவுநீங்கி வீடடின்ப முறுவரன்றே 21

சொன்னவிவ் வெழுதீர்ந்தத்துந் தோய்ந்திடி னுலகினுள்ள
பன்னருந் தீர்த்தந்தன்னில் படிந்திடும் பயன்வந்தெய்தும்
தன்னிக ரில்லாவந்தத் தடத்தினிற் றென்புலத்தோர்க்
குன்னருங் கடன்களாற்றிச் சிவலோக முறுவரன்றோ. 22

நண்ணுமத் தடத்திற்றோய நடந்திடி னடியொன்றுக்குத்
திண்ணமாம் வாசமேயஞ் செய்பலன் றருமென்றாலப்
புண்ணிய தீர்த்தம்போலப் புவனமோர் மூன்றினுள்ளும்
எண்ணில்மற் றுண்டோவெங்கு மிணையில்மா தீர்த்தமாதோ. 2

மன்னவ நீயங்கெய்தி வாசவ தீர்த்தந்தோயி
னின்னது பிணியுமென்றும் நீங்கரும் பிறவிநோயு
மின்னனைய யாவுந்தீரு மேழுதீர்த்தத்து மூழ்கிற
பின்னரியான் சொல்வதென்ன பேருலகாண்டு பன்னாள். 2

இந்திர யோகபோக வின்பவெள்ளத்தின் மூழ்கிச்
சந்திர சேகரன்றன் றுணிழல் குறுகுவாயென்
றந்தமில் முனிவன் சொன்னா னரசனற் புதத்தனாகிச்
சிந்தைநன் மகிழ்ச்சிபொங்கச் சிவாசலந் தன்னிற் சென்றான். 2

மகபதி தீர்த்தப்பாங்கர் வந்ததின் மூழ்குமுன்ன
மிகவுமெய் வருத்தஞ்செய் யும் வெங்குன்மப் பிணியுநீங்கிப்
புகழ்கொள்வேளுருவம் பெற்றான் பொருவின்மற் றையதீர்த்தத்
மகமிகு மார்வத்தோடு மாடிவெற் பதனிலெய்தி.

அண்டர்கள் யாரு முய்ய வாழிநஞ் சயின்றநீல
கண்டனை யவன்பால் வைகுங் கருணைசே ருமையை மாவைத்
திண்டிறற் றுரைக்காய்ந்த சேந்தனை யிருபால்வைகும்
பண்டருமொழிமின்னாரைப் பணிந்து மெய்த் துதிகள்கூறி

வேண்டிய வரங்கள் பெற்று மீண்டுதன் கருவூரெய்தி
யீண்டுல காண்டுபன்னா ளிருவரு மறையும்பன்னாட்
டேண்டியுங் காணாவிந்து சேகரன் வீற்றிருக்குஞ்
சேண்டோடு கபிலைதன்னிற் சென்றுநற் கணமதானான். 28

வேறு:-இன்னதன்மைய சிவன்மலை யியலைப்
பன்னுகோடியி லொன்றியாந் தெரிந்தமை பகர்ந்தே
மன்னவாகன னிகர்த்திடு மருந்தவமுனிவீ
ரென்னவோதிய காதையை வினவின ரெவரும். 29

வேறு:-மெய்புளகரும்ப மொழிதடுமாற விழிகள்நீர் துளித்திடச் சிரமேற், கைகுவித் தயில்வேற் கைத்தல வேந்தைக் கமலமா மலர்ப்பதம் நெஞ்சிற், றைவர விருத்திப் பரவசமடைந்து தணிவிலா வற்புதமெய்தி, ஐயனாஞ் சூத முனிவனை யருச்சித் தடிபணிந் தினியனகூறி. 30

வானளாவளர்ந்த வுயர்சிவாசலத்தின் மகிமையைச் சொற்றிட வினவி, யீனமா ருடலை மெடுத்திடும்பயன்கள் யாவையுமின்றினி தடைந்தேம், தூநிலத் தவரிற் றேவரில் நின்போற் சுருதிநூல் பலவுமா ராய்ந்து, தேனமு தேய்ப்பச் சொல்வரா ரென்னத் திருத்தகத் துதித்தினி திருந்தார். 31

வாழி.

புவனி வாழ்கப் புயல்பெய்க நல்லிறை
மவுனி வாழ்க வளரற மோங்குக
உவமை யின்முறை யோங்குக தொண்டர்கள்
புவமுறுமநுப்பன்னிப்பரவவே. 32

தீர்த்தமகிமைச் சருக்கம் முற்றிற்று.
ஆ சருக்கம் 14க்கு,
விருத்தம், 497.

சிவமலைப் புராணம் முற்றிற்று.



உ

முருகன் துணை.

சிவமலைப் புராணச் சுருக்கம்.

காப்பு.

சீரிலகு மதிவெணிச் ஸிவபெருமா னயனநின்று
நீரிலகி யருமாதர் நிரம்பவளர்த் திடவுமையாங்
கூரிலகு மயிலேந்திக் குறைநீக்கி மயிலேறித்
தாரிலகு மணமேவுந் தற்பரன்பொற் பதந்துணையே.

கடல்சூழ்ந்த இந்நிலவுலகில் நல்லபுண்ணிய தீர்த்தங்கள் நிறைந்ததும், திவ்வியமான புஷ்பங்களாலும், பழங்களாலும் பரிமள நிறைந்துள்ள அடர்ந்த சோலை சூழ்ந்ததுமானது நைமிசாரணியமென்னும் ஒருபுண்ணியக்ஷேத்திரம். சூரிய சந்திரர்களது கிரணங்கள் புகாது மரங்களால் அடர்ந்திருப்பதால் குளிர்ந்து இருள் செறிந்து விளங்கும். அங்கங்கே உள்ள நாகரத்தினங்கள் விளக்குகள் போலவிளங்கும். மூன்றாம்பிறைச்சந்திரனைச் சடைமுடியிலேதரித்த சிவபெருமானை யன்றி மற்றொரு கடவுளுண்டு என்றுநம்பிவணங்காத சிந்தையுள்ள மாதவர்களின் கூட்டங்களே அங்கங்கு நிறைந்திருக்கும். ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினேயம் என்னும் அக்கினிவளர்த்து ஓமம் வளர்ப்பார்கள். அந்த ஓமத்திற் சொரியும் பால் நெய்யால் எழும் புகையை மேகமெனநினைத்து மயில்கள் தங்கள் பொற்சிறைகளை விரித்து நடிக்கும். அங்குள்ள பார்ப்பார்கள் சொல்லும், வேதம், ஆகமம், புராணசாஸ்திரங்களை எப்பொழுதுங் கேட்டிருக்கும் கிளியும், பூவையும், வாக்கியமும் அர்த்தமுந் தவறாமற் சொல்லும். அங்குள்ள மிருகமும், பக்ஷிகளும் தருமநெறியில் ஒழுகல்வழுவினும் புலாலுண்ணுவதால் நரகத்தை யநுபவிக்க வேண்டுமென்று தெரிந்தோ! அல்லது முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையுமென்னும் வாக்கியமுள்ளதால், இந்தபழிக்குப்பழி இப்பொழுது நம்மாற் கொல்லப்பட்ட உயிர் பின்னிட்டு நம்மைக்கொலைசெய்யுமென்று நினைந்தோ மற்றெந்தக் காரணத்

தாலோ பூஜைகளும் அந்த க்ஷேத்திரத்தில் புலால் அருந்துவ தில்லை. மற்றையுயிர்களிடத்து அன்பு பாராட்டும். மாயவன் மனைவி சீதேவிக்கும், பிரமன்தேவி சரசுவதிக்கும், வசிட்டர் பத்தினியாகிய அருந்ததியம்மனுக்கும், கற்புலக்ஷணங்களைத் தெரிவிக்க வல்ல தவசிரேஷ்டர்களது பத்தினிமார்களின் கூட்டங்கள் விளங்கி இருக்கும்.

இதுவன்றி பாம்பின் படத்துமீது எலி ஏறிவிளையாடும், மான்குட்டிகள் பயமின்றிப் புலிமுலையில் பால்குடிக்கும. குரங்குகள் நண்டினிடத்துச் சிநேகங்கொண்டிருக்கும். சிங்கக்குட்டிக்கு யானைதும்பிக்கையால் தண்ணீர் அள்ளியூட்டும். பருந்துடன் கிளி ஒருகூட்டில் வசிக்கும. இப்படி ஜாதிப்பகையுமே இல்லாது சாந்தாகாரத்தைத் தருகின்ற அந்தத் திவ்ய பூமியிலே மோக்ஷத்தை பெறவேண்டுமென்ற எண்ணமுடையவர்களாய்ப் பஞ்சாக்ஷரமன்றி வேறு மந்திரமும், விபூதி, ருத்ராக்ஷமன்றிப் பிறபூஷணங்களும் பூணாதவர்களாய் சிவசுப்பிரமணியக்கடவுளாரது திருவிளையாடல்களைப் புகழத்தக்கவர்களான பெரியோர்கள் செழித்திருப்பார்கள்.

இவ்வித மேன்பாடு கொண்டுள்ள தவசிரேஷ்டர்களின் மத்தியில், ஸ்ரீநீலகண்டபபெருமானின் திருவடிகளைச்சந்ததஞ் சிந்தைசெய்து கொண்டுள்ள சூதமுனிவர், வேங்கைத்தோல் விரிப்பின்மேல் வீற்றிருந்தனர். அந்தச சூதமுனிவரை முனிவர் குழாங்கள் வந்தனம் செய்து ஐயா, வேதியனான பிரமதேவனைப் போன்றவரே! உலகத்தில சனனதொல்லை நீக்கத்தக்க சிவதல மான்மியங்களைப்பல திருவாய் மலர்ந்தருளினீர்; அவற்றைக் கேட்டு எங்கள் தீவினை நீங்கி மனச்சுத்தம பொருந்தினோம். ஆயினும் எல்லாத்திசைகளினுமுள்ள சகல தலங்களினும், சிவஷண்முகப்பெருமானுக்கு இனிதாய், அந்தக் கந்தப்பன் எப்பொழுதும் நீங்காது வசிப்பதாய், எந்தக்காரணங்களாலும் மற்றொன்று, இத்தலத்துக்கு ஒப்புள்ளது என்று சொல்வதற்கில்லாது விளங்கத்தக்க ஒரு தெய்வீகத்தலத்தை எளியேங்கள் கடைத்தேறும் வண்ணம் சொல்லியருளல் வேண்டுமென முனிவர்கள்

வேண்டுதலும், பிரம விஷ்ணுக்களால் காணப்பெறாத பரம சிவ த்தின் பாதாரவிந்தங்களை சிந்தித்துச் சொல்லத்தொடங்கினர்.

அளவிலடங்காத விரிவான காந்தமகாபுராணத்து ஆறுசங் கைகளில் ஈசான சங்கிதையில் மூர்த்திதல தீர்த்தங்களில் விசே ஷமாகக் கூறப்பட்ட ஒப்பற்றதலம் இதுதானென்ன மனத்தில் தேறி, தேகமபுளக முறக்கண்களில் நீர்ததும்ப நாக்குளற இர ண்டு கைகளையுஞ் சிரசின்மீது கூப்பி, சிவசுப்பிரமணியக்கட வுள் பாதங்களை மனதில்தியானித்துச் சொல்லத்தொடங்கினர் சூதமுனிவர்.

சிவமலை.

பூர்வ காலத்தில் நெற்றிக்கண்ணையுடைய பரமேசுரர் திரி புர அசுரர்களைக்கொல்லும பொருட்டு வாசுகியை நாணியாகக் கொண்டு, வில்லுக்காக மேருகிரியை எடுத்து வளைக்கும் பொ ழுது அந்தப்பொன்மலையிலுள்ள பல சிகரங்களில், சிவபெரு மானுக்கு மிகவிருப்பமாக உள்ள ஒரு கொடுமுடி இவ்வுலகத் தில் விழுந்தது. அதனால் அந்தமலையைச் சிவமலை என்பார்கள். அது முதலுகத்தில் பொன், இரண்டாமுகத்தில் வெள்ளி, மூன் றாமுகத்தில் செம்பு, நான்காவதான இந்த கலியுகத்தில் கல் ஆதலால் இந்தப்படி மாறுவதால், காமரூபஜோதி கிரியென் றும் ஆன்றோர் கூறுவார்கள். இதுவே அன்றிப்பற்பல ஏதுக்க ளால் அம்மலையானது, சிவனைப் போலவும், மாயவனைப்போலவும், பிரமனைப்போலவும், விநாகனைப்போலவும், சுப்பிரமணியனைப் போலவும், இந்திரனைப்போலவும், விளங்கும். உயரத்திலும் வளப்பத்திலும் ஒப்பற்று சிவமலை யென்று உள்ளமுருகித் திட பத்தியான நம்பிக்கையுடன் சொன்னால் தீவினைகள் நசிக்கும். லட்சுமிக்கடாக்ஷம் வரும், புண்ணியமுண்டாம் சித்திகள் கூடும். அந்தக்கிரியை ஒருதரம் சுற்றினவர்கள் அரசராவார்கள். இரு தரம் சுற்றினோர் இந்திர பட்டம் பெறுவார்கள். மலைமீதேறிக் கந்தப்பெருமானைத் தரிசித்தவர்கள் பிரமபதவி பெற்று சிருஷ் டித்தொழிலை நடத்துவார்கள். உலகத்தில் காசிமுதலிய தலங் களிற் செய்கின்ற விரதம், பூசைமுதலியவைகளை இங்கு செய்

தால் விசேஷபலனுண்டு. கார்த்திகைநட்சத்திரத்தன்று தரிசித்தோர் உத்தமமான பலனை அடைவர் என்பது நிச்சயமாகும்.

சத்திமலை.

இமயமலையரசன் தவபுத்திரியாக அவதரித்த, பார்வதிதேவியாரை மணம்புணர்ந்த பரமேசுரன், உமாதேவியாருடன் கைலையங்கிரியடைந்தனர். ஒப்புவமையற்ற கோவிலுள்ளே சேர்ந்தனர். யாவர் வரினும் உள்ளே ஒருவரையும் விடவேண்டாமென்று நந்தி கேசுரனுக்கு கட்டளையிட்டுப் பார்வதிதேவியோடு திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்தனர். சூரபன்மன் முதலிய தேவர்கள் ஒருங்குகூடிக் கைலையங்கிரி சேர்ந்து தங்கள் வரவைப் பரமேசுரர்க்கு விண்ணப்பமாக்கும்படி நந்திகேசுரரைக்கேட்டுக் கொண்டார்கள். இப்பொழுது உள்ளே போகக்கூடாது நீலகண்ட பரமேசுரர் உத்திரவு வருமென்று கூறினர். தேவர்கள் தங்கள் குறைகளை முறையிடப், பரமேசுரர் நந்தியை அழைத்துத் தேவர்களை உள்ளே விடக்கட்டளையிட்டனர். தேவர்களே! ஒப்பற்ற ஒரு குழந்தையைத் தருவேன். அக்குமரன் வெருசிக்கிரத்தில் தோன்றி அசுரர்களை வேரறுப்பன பயமின்றிச்செல்லுங்க ளென்றனர். தேவர்கள் சந்தோஷத்துடன் தம்மிருப்பிடம் சேர்ந்தார்கள். ஐம்முகக்கடவுளாகிய எம்பெருமான் ஆறுமுகத்துடன் வீற்றிருந்தனர். ஆறுமுகங்களினின்றும் அக்கினிப்பொறிகள் தோன்றின. அவற்றை வாயுதேவனும், அக்கினிதேவனும், எற்றுக் கங்கையில் விட்டார்கள் ஆறுகுழந்தைகளாயின. இதனைக் கேள்வியுற்ற பார்வதிதேவியார், இத்தனைகால மிருந்தும் நம்மிடத்து மகவினை உற்பத்தி செய்விக்காது கண்வழியாகப பரமபதிசெய்தனரேஎன வருத்தங்கொண்டனர். எழுந்துநடந்தனர் அத்தேவியார் பாதத்தில் அணிந்துள்ள ரத்தினங்களை சிவபெருமான் நோக்கினர். நவமணிகளிலிருந்து சிறந்த வடிவுடன் ஒன்பது பெண்கள் தோன்றினார்கள். அப்பெண்கள்மீது உருத்திரமூர்த்தி நோக்கம்பட்டது. அப்பெண்கள் கருப்பமானார்கள். இதனையுங்கண்ட நம்பிராட்டியார் கோபங்கொண்டவராய் அப்பெண்களைப்பார்த்து நீங்கள்

கொண்டகருப்பம் குழந்தை பெறாது இருக்கக்கடவீர் எனச்சபித்தனர். உடனே கயிலையங்கிரியைவிட்டு நீங்கி நடந்து சிவமலையை அடைந்து அரியதவம் செய்து கொண்டிருந்தனர். கருவெளிப்படாது வருந்திய நவமாதர்களும், பரமசிவத்தினிடத்து அடைந்து வணங்கி எம்பெருமானே! உமாதேவியார் இட்டசாபத்தால் வருந்துகின்றோம் பிரசவிக்கும்படி அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென வேண்டினார்கள். பார்வதிதேவி கொடுத்த சாபத்தை ஒருவராலும் நீக்க ஒண்ணாது, அம்மையார் சிவமலையில் எழுந்தருளியிருக்கிறார், அங்குபோய் அடிபணிந்து சாபத்தைப் போக்கிக்கொள்ளுங்களென அனுப்பினர். அந்த உத்திரவு பெற்ற மாதர்கள் சிவமலையை அடைந்து பார்வதிதேவியாருக்குப்பணிவிடைசெய்துக்கொண்டிருந்தார்கள். பிராட்டியாருடைய கோபத்தைத் தணிக்கவேண்டுமென்ற சிவபெருமான், கைலையங்கிரியை நீங்கிக் கொங்குமண்டலத்துள்ள சிவமலைக்கு எழுந்தருளினர். காளகண்டம், திரிநேத்திரம், சடை, பிறை, கங்கை முதலியவற்றை மறைத்து, நல்லவடிவமைந்த மன்மதவடிவாகத் திருநீற்றொளி விளங்கப்பாதுகை, யோகபட்டிகை, தண்டு முதலியனகொண்ட தவவடிவினராய்த் தேவியார் முன்தோன்றினர். தேவியார், வந்ததவசியை ஆதனத்தில் எழுந்தருளச்செய்து ஐய, எந்த நாட்டினின்று என்னகாரியநிமித்தம் இங்கு வந்தீர்கள் என வினவினர்.

கயல்போன்ற கண்களையுடைய பெண்கள் நாயகமே! எந்த நாடும் எந்தப்புவனமும் எமக்குச்சொந்தம், என்றாலும் மேருமந்தரகிரிக்கு வடபாகத்தில் வசித்துள்ளோம்; ஒப்பற்ற மகிமைகொண்ட ஒரு புத்திரனைப்பெறவேண்டும். அதற்காக ரதிலட்சுமியைவென்ற அழகும், அருந்ததி கற்பும் பொறுமையும் சீலமும் உயிர்களிடத்தன்பும், தர்ம குணமும், ஈகையும், தவகுணமும், மங்கைப்பருவமுமுள்ள ஒருகன்னிகையைத் தேடினேன்; கிடைக்கவில்லை. ஆனால் நீசெய்ததவமும், எனது சுபதவமுங்கூட உன்னைக்கண்டேன். என்ற மொழிகேட்டவுடன் சிவ! சிவ!! என இரண்டு காதுகளை மூடிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு இரண்

டூடி உமையாள் எடுத்துவைக்குமுன், காளகண்டதிரிநேத்திரதாரியாய் விருஷபவாகனமீது தோன்றினர். உமையவள் கையைப் பிடித்துக்கொண்டு, உன்னுடன் கூடுமானந்தம் உள்ளடங்காமற் பொங்கி எம் கண்ணின்வழி அக்கினிப்பொறியாக வந்தது. உன்னையன்றிக் கந்தன் எப்படிவருவன்? அந்த ஆறு பொறிகளும் ஆறுகுழந்தைகளாகச் சரவணப்பொய்கையிலிருக்கின்றன. அந்தக்குழந்தையைப் பார்ப்பாயானால் உன் தனபாரத்தில்பாலூறும்என்றனர். இந்தமலையில் நீ அருந்தவம் செய்தமையால் இக்கிரிக்குச் சத்திமலை யென்று இனிப்பெயர்விளங்கும் என்றுகூறி விடபவாகனத்தில் பார்வதியையும் ஏற்றிக்கொண்டு கைலாயம் சென்று, சரவணப்பொய்கைக் கரைசேர்ந்து குழந்தைகளைப் பாரென்றனர் பரமசிவம். மலைமகளும் குழந்தைகளை ஆவலோடு சேர்த்து எடுக்கவே, ஒருடலும், ஆறுமுகமும், பன்னிரண்டுகைகளுமான திருவடிவமாக விளங்கினர் சுப்பிரமணியர் தொடையின்மீது அவ்விளவலைவைத்து பொன்வள்ளத்தில் தனதுதனபாரப்பாலைச்சொரிந்து ஊட்டித்தனக்கும், தன்மணாளனை சிவபரஞ்சுடருக்கும் இடையே இந்த கந்தப்பெருமானை வைத்தருளினர். தேவர்கள் ஆரவாரித்தார்கள். தேவர்கணங்கள் தோத்திரம் புரியக் கயிலைமலையுச்சி சேர்ந்து வீற்றிருந்தனர் தேவர்களெல்லோரும் வணங்கியிருந்தார்கள்.

வீரையானது

வெள்ளியங்கிரியில் அருளோடு வீற்றிருந்தருளும், சமயத்தில் உலகமாதாவாகிய தேவியைப்பார்த்து, உன் பாதச்சிலம்பில்வந்த ஒன்பது பெண்கள் கொண்ட கருப்பம் வெளிப்படாதிருக்கச்சாபம் கொடுத்தனையே, அதனால் அவர்கள் வருந்துகிறார்கள். அந்தக்கருப்பத்துள்ள சிசுக்கள், உனது குமரவேலனுக்குத் துணைவராய், தூணினின்று வந்த நாரசிங்கமும் பயப்படும்படி, கையாற் புடைக்கும் வல்லமைபெற்றவர்களானவர்கள். ஆதலால் கருவுயிர்க்கும் வகைசெய் எனப்பரமசிவம் கூறினர் உமையவளும் அவ்வாறே ஆகுக என்றனர். சிவமலையிடத்தே தவம்புரிந்துள்ள ஒன்பது பெண்களும் வீரவாகு, வீரகேசரி,

வீரதீரன், வீரபுராந்தகன், வீரமஹேசுரன், வீரமகேந்திரன், வீரமார்த்தாண்டன், வீரராக்ஷஸன், வீரராந்தகன் என்னும் ஒன்பது வீரர்கள் உதித்தார்கள், அந்தப்பெண்களின் வெயர்வையில் ஒருலட்சம் வீரர்கள் பிறந்தார்கள். இவ்வீரர்களின் பெருக்கத்தால் அந்தத்தலத்துக்கு வீரமாபுரம் எனப் பெயராயிற்று.

இப்படியுள்ள வீரர்களெல்லோரும் சிவமலையிலிருந்து அரிய தவஞ் செய்தார்கள். பரமசிவம் பிரத்தியக்ஷமாய் என்ன வரம் வேண்டுமென்றனர் சுவாமி! தேவரீரது திருவடித்தொண்டு செய்திருக்கும் வரமே வேண்டுமென்றனர். மகிழ்ந்த சிவபெருமான் வீரரைநோக்கி, வேலாயுதந்தைத் தரித்துள்ள இந்த கந்தன் எமது புதல்வன், உங்களுக்கு மூத்தோன். யாவருக்கும் மேலானவன். இவன் உத்திரவுபடிக்கு ஏவல்செய்து கொண்டிருப்பீரேல், எனக்கும், புவனமுழுதுமீன்றவளுக்கும் தொண்டு செய்தலினும் ஆயிரமடங்கு அதிகபலனை இவன் கொடுப்பன்; எனக்கூறி உமையோடு கைலைசென்றனர் இவ்வீரர்களுடனே சுப்பிரமணியக்கடவுள் அவ்வனத்தில் பலவிளையாடல்கள் செய்து கெண்டிருந்தனர்.

அகத்தியமுனி உபதேசம் பெறல்.

சத்தி வேலாயுத மூர்த்தியாகிய கந்தப்பெருமான் நவவீரர்களாகியவர்களுடன் கூடித் திருவிளையாடல் செய்தருளி யிருக்குங் காலத்தில், அகஸ்தியமுனிவர் சுப்பிரமணியக்கடவுளை வந்து வணங்கினர். பரமதேவனும் தெளிந்திடாத வேதப்பொருளை எளியேனும் அறிந்துய்யுமாறு அருளித்தனை. பதஞ்சலிமகாமுனிக்கு இறைவன் உரைத்த வடமொழிக்கு எதிர்க்கத், தென்மொழியாகிய தமிழியலை எல்லாம் அடியேனறியும் வண்ணம் தெரிவித்தனை. ஜனனத்தளையை நீக்கி நின்மலன் திருவடியில் வீற்றிருக்கத்தக்க மார்க்கத்தை அருள வல்ல மெய்ம்மையான ஆகம மார்க்கத்தை எளியேனுக்கு அநுகிரகிக்கவேண்டுமென்று அகஸ்தியமுனிவர் வணங்கிக் கேட்டுக்கொண்டனர். கரு

ணைக்கடலாகிய குருநாதமூர்த்தியானவர் புன்சிரிப்புடன் சொல் வாராயினர். தருமசிந்தனை, தவநெறி, வேதப்பொருளுணர்ந்துளல்; பிறவிப்பிணியை நீக்கும் மனம், எல்லாவுயிரிடத்தும் இரக்கம், சிவபஞ்சாக்ஷர ஜபம் முதலிய மற்ற சற்குணங்களுடன் தீக்ஷைபெற்றுச் சுத்தரா இருப்பவர்களுக்கு ஆகமம் கூறலாம். தானம், யாகம், பொறுமை, தவம், ஒழுக்கம், குலம், கல்வி, வித்தை, அகப்புறப்பூசை, நற்குண முதலியனவெல்லாம் உன்னிடத்து அமைந்திருக்கின்றன; ஆதலால் உனக்கு ஆகமத்தைச்சொல்லலாம் எனக்கூறி நவவீரர்கள் முதலியோரைப்பிரிந்து, ஆத்திமா நிழலுக்குத்தனித்து வந்து இருந்து அகஸ்தியமுனி தெளியும்படி சுப்பிரமணியர் உபதேசிக்கின்றார்.

எனது பரம பிதாவாகிய சதாசிவமூர்த்தியினது நான்கு திருமுகங்களிலிருந்து நான்கு வேதஙகள் தோன்றின. அந்நான்குமுகத்துக்கும் மேன்முகமான உச்சிமுகத்திலிருந்து ஆகமம் தோன்றின. அந்த ஆகமத்தை எனது அம்மைபிரார்த்திக்க, எமது பிதா உபதேசித்தார், அவர் மடியிலிருந்து நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதனைச்சுருக்கிக் கூறுவேன் என்றனர் சுப்பிரமணியர். ஆகமாந்தம் என்னும் சித்தாந்தத்தின் சாரமானது என்னெனில், பதி-பசு-பாசம் எனப்பதார்த்தம் மூன்று. பதியெப்படி அநாதியோ அதுபோலப் பசு பாசமும் அநாதி. ஆனால் பதியிடத்துப்பாசம் அணுகாது. பதிபொருந்தினல்பாசம் நில்லாது" எனத்திரிபதார்த்த லட்சணத்தைச் சுருக்கமாகத்திரட்டிக் கூறினர். ஆகமங்களை யெல்லாம் ஒருமுறைசொன்னவுடன். குறுமுனி தெரிந்துக்கொண்டனன். சொல்லும் பொருளும்போல நிறைந்துள்ள பூரணவடிவத்தின் தன்மையை மருள் கெடும்படி நன்கு தெளிந்து கொண்டனன் அகத்தியமுனிவன்.

அகத்தியமுனி பூசைசெய்தல்.

எனது தந்தை தாயினும் விசேஷமான கந்தவேளே! உன் அன்போடு பூசனைசெய்ய வேண்டுமென்ற விருப்பத்தோடு

இருக்கிறேன் என அகத்திய முனிவர் வேண்டினார். ஒருங்கோடி உதயகால சூரியனைப்போன்ற தேஜசுபிரகாசிக்க, நிறமுள்ள மயில் வாகனத்தின்மேல் ஆறுதிருமுகங்களும் வேலாயுதபாணியுமாய்ச் சுப்பிரமணியக் கடவுள் தோன்றினார். அகத்தியமுனிவர், கண்ட தீர்த்தத்தில் கண்டிகையிலிருந்த கங்கா தீர்த்தத்தைக்கலந்து, அத்தீர்த்தத்தில் முழுகித் திருவெண்ணீறுபூசி உருத்திராக்ஷ வடங்களணிந்து, ஷடாக்ஷர மந்திரஜபம் செய்துகொண்டு கந்தசாமியது திருமுன்புவந்து நெய் முதலாகச் சந்தனக்குழம்பு ஈறான திரவியங்களையுங் கங்காதீர்த்தமும் அன்புடன் அபிஷேகம் புரிந்து, வஸ்திரம், ஆபரணாதிகள், புஷ்பவகைகள், சந்தனம் சாத்தி, அன்னம் அபூபவகைகள் திருமுன்பு நிவேதனம் செய்து, ஆசமன அருக்கியபாத்தியாதி ஆகிய பதினாறுவகை உபசாரங்கள் புரிந்து, பூசைகளெல்லாம் சம்பூரணம் செய்தனர்.

திருமுன்னின்று திரிமூர்த்திகளிலும் மேலான சிவபரனுக்கு உபதேசகுருவே! உனக்கு வந்தனம். உமைமைந்த வந்தனம் தேவர்களுக்கெல்லாம் தேவனே! வந்தனம், அசுரர் துன்பத்தை தொலைக்கவந்த கருணைக்கடலே! வந்தனம், உன்னை துதிப்பவர்களுக்குபத்தி, புத்தி, சித்தி முதலிய பெறும்பேறுகளை அளிக்க எழுந்தருளிய சிவமலைக் கொழுந்தே உனக்கு வந்தனம்! வந்தனம்!! எனத்தோத்திரித்தனன். சிவமலையாண்டவன் கருணைகூர்ந்து ஏ குறுமுனிவ! உனது பூசையும் தோத்திரமும் உவந்தனம் உனக்கு வேண்டியவரத்தைக்கேள் என்றனர்.

கருணாமூர்த்தியே! அடியேன் பூசைசெய்கின்ற இந்தக்கார்த்திகைமாதம் பௌர்ணமி, கார்த்திகைநாள் கூடுகின்றநாளில் இந்தக்கிரியைத் தரிசினம் செய்தவர்கள், இந்நகரில் வந்திருந்தவர், இங்கு வருதற்கு முயர்ச்சிசெய்தவர்கள் மாதம் ஒரு கணப்பொழுதேனும் நினைத்தவர்கள் யாவரேயாயினும், அவர்களுடையபாதகங்களெல்லாம் போக்கிப்,போகத்தை யநுபவித்து பதவி பெறவேண்டும். என்னால் காணப்பட்ட தீர்த்தத்தைக்

கண்டவர்கள், தொட்டவர்கள், முறைப்படி முழுகினவர்களும், எழுமைப்பாவமும்போய் நற்கதி பெறவேண்டும். இவ்வாறு வேண்டியபடி அநுக்கிரகித்து முனிவரைப் பொதிகைக்குச் செல்ல விடைகொடுத்து, அணைவீரர்களோடு மலைப்பிரதேசங்களில் சிவமலையாண்டவர் திருவிளையாடல் புரிந்துகொண்டிருந்தார்.

அநுமன் பூசைசெய்தல்.

முன்காலத்திலே மேருகிரியின் சிகரம் தக்ஷிணபூமியில் வந்து விழும்படி வீசிய வலிபொருந்திய வாயுதேவனின் சிவ குமாரன் பராக்கிரமுள்ள அநுமான் என்னும் வீரன், சுப்பிரமணியரை மனதில் நினைத்துள்ளவன். அசுரர்களை எதிர்த்துத் தொலைத்தவன். அவன் தவஞ்செய்யச் சிந்தைகொண்டான் வைதிக ராஜதானியான காசிநகர்க்குச் சென்று கங்கையில் முறைப்படி தோய்ந்து, வெண்பொடியுங் கண்மணியும் பூண்டு, பஞ்சாக்ஷரத்தைச் ஜபித்துக் கொண்டு விசுவநாதனைத் தரிசித்து ஆலயவலமாய் வரும்பொழுது அவ்வாறேவருகின்ற வியாசமுனிவரைக்கண்டனன். உபசாரமொழிகள் பேசி திரிகால ஞானமுள்ள முனிவரே! பூலோகத்தில் தவஞ்செய்தற்கு அரிதான ஒரு தலத்தைச்சொல் என அநுமன் கேட்டனன். சூரியபகவனிடத்து அருமையான கலைஞானங்களையெல்லாம் அறிந்த அநுமானே! எண்ணியவரத்தைக் கொடுத்து கதியையும் அளிக்குந் தக்க தலமானது சிவமலை என்பெயரியது. அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சரவணபவனை அருச்சித்தால், இவ்வுலகத்திலுள்ள எல்லாதலங்கள் தோறுஞ்சென்று சிவபெருமானைக் கணநாதனை, குகப்பெருமானைத் தரிசித்த பலன்களை யெல்லாம் கொடுக்கும். அந்தத்தலமானது, வராககிரிக்கு வடக்கு காவேரி நதிக்குத்தெற்கு, பேரூருக்குக் கிழக்கு, கருவூருக்கு மேற்கு, இதன் மத்தியில் இருக்கிறது என்றனன் உடனே அநுமன் புறப்பட்டு நருமதைநதியை அடைந்து முழுகி ஒரு லிங்கமெடுத்துக்கொண்டு சிவமலையை யடைந்து வணங்கிக் காஞ்சிநதியில் முழுகி மலையில் ஆகமமுறைப்படிக்கு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்தனன். அபிஷேகாதிகள் புரிந்து தோத்திரஞ்

செய்தனன். பிரதக்ஷிணமாக வரும்பொழுது ஆத்திமரநிழலில் எழுந்தருளியிருக்கும் குமாரக்கடவுளைக் கண்டனன். மகிழ்ச்சியானந்தம் கொண்டனன். கங்கையிலபிஷேகம் புரிந்து தெய்வலோகத்துக்கற்பகப்பூக் கொணர்ந்து அர்ச்சித்துத் தோத்திரித்தனன்.

கந்தசாமி மயில்வாகனரூடாராய்க் காட்சிகொடுத்து "வாயுபுத்ரா! உன் பூசையை மகிழ்ந்தோம் வேண்டியவரத்தைக் கேள்" என்றனர். அநுமன் மனமுருகி "ஐயா, உன்பத தியானம் செய்திருத்தலான வரம் வேண்டும்" என்றனன். அருகில் வாவென்றழைத்து மேனியைத்தடவி "அநுமானே! இரணியனது கொட்டத்தை யடக்கும் பொருட்டு தூணில் வெளிப்பட்ட நரசிங்கத்துக்குச் சமானமான புஜபலம் உனக்கு உண்டாகும்." என வரங்கொடுத்து, இனி கங்காசலமும், கற்பகப்பூவும் கொண்டுவந்து அர்ச்சனை செய்துக்கொண்டு இங்கே இரு, பின்னிட்டு முத்தியுங்கொடுக்கிறோமென்று தமது திருவுருவில் மறைந்தனர்.

நாரதமுனிவர் காசி, காஞ்சி முதலிய தலதரிசனஞ் செய்துக்கொண்டு சிவமலைக்கு வந்து உமாதேவியார், சிவபெருமான், சுப்பிரமணியர் தரிசனம் செய்து வரும்பொழுது அநுமனைப் பார்த்து "கற்பகப்பூ இங்குவந்த காரணம் என்னவென்று கேட்டனர். "சுப்பிரமணியக்கடவுளுக்குக் கற்பகப்பூ கிடைப்பது அரிதோ, என்றனன். அநுமான். நாரதமுனிவர் தேவலோகம் போயினர். நெடுநாள் ஒரு நாள்போல சிவமலையப்பனைப் பூசித்துக்கொண்டிருந்து ஒருநாள் என் அப்பனே! எனக்கு, முத்தியருளல் வேண்டுமென அநுமன் வேண்டினன். வேண்டியவரத்தை அடியார்களுக்கு ஈட்டவல்ல கந்தப்பெருமான். "ஏ அநுமானே நீ மேருகிரிக்கு வடபக்கமாகப்போய் தவவடிவாக இரு. நாம் எழுந்தருளியபின்பு முத்தி கொடுக்கிறோம்." எனவிடை கொடுத்தனர். பணிந்து அநுமான் மேருகிரியில் வடபாங்கில் தவஞ் செய்து கொண்டிருக்கிறான்.

இந்திரன் பூசை செய்தல்.

ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் தனது அரசாக்ஷி செலுத்திச் சூரபன்மன் செய்யும் கொடுமைக்கு ஆற்றாதவர்களாய்த் தேவர் முனிவர்கள் மேருகிரிச் சாரலில் வசித்து வந்தார்கள். அப்பொழுது கந்தமாதன கிரியில் ஒரு திருமுகத்தான சுப்பிரமணியக்கடவுள் விளையாட்டாக, கிரக முதலியவற்றைப் பிடிக்கியும், மலைமேலுள்ளவற்றைத் தரையிலே நட்டும், பாற்கடலை உப்புக்கடலாக்கியும், நக்ஷத்திரங்கள் நிலைபெயரும் படிச்செய்தும், திக்கயங்களை மாறுவித்தும், அஷ்டநாகங்களையும் ஒருதிக்குக்கு வரச்செய்தும், தேவதருக்களைப் பூலோகத்திலே நட்டும் பல அரிய காரியங்களைச் செய்திருந்தார். இராக்ஷசர்கள் செய்யும் மாயம் இதுவென்று நினைந்து தேவர்களோடு இந்திரனும் வந்தார்கள். தேட ஒருவரும் அகப்படவில்லை. குமரக்கடவுளைக் கண்டார்கள். வஞ்சக வேடம் போட்ட அசுரகுமாரனிவனென்று எண்ணி யுத்தம் தொடங்கினார்கள். தொடுத்த பாணங்களெல்லாம் குமரன் பாதத்தில் பணிந்து சென்றன. இவன் சிவனல்ல, விஷ்ணுவல்ல, பிரமனல்ல, வீரபத்திரனுமல்ல. அல்லாமலும், சிங்கமுகாசுரனுமல்லன், சூரபன்மாவுமல்லன், தாரகாசுரனுமல்லன், ஆனதால் மற்றவர்கள் புஜபலம் நமக்குச் சமானமாகுமா? என்று இந்திரன் தன் வச்சிராயுதத்தைக் குமரன்மேல் விடுமுன், அது முருகவேளினடியில் விழுந்து சென்றது. கந்தப்பிரான் ஒரு கணையை ஏவினார். தேவர்களையெல்லாம் விரட்டிச் சென்றது. இதனைக் கண்ட தேவகுருவானவர் வேலவன் பாதத்திற் பணிந்து, "ஐயா, சூரபன்மன் தேவருலகஞ்சென்று இந்திராணியைக் கலக்க நினைத்தான். அதனால் தேவேந்திரன் இந்திராணியுடனும், சிலதேவர்களுடனும் மேருகிரிமேலிருந்து வசிக்கிறார்கள். தேவலோகத்திலிருந்த இந்திரகுமாரன் சயந்தனையும், மற்றும் தேவர்களையும் பிடித்துக்கட்டி வீரமகேந்திரத்திற் சிறையாக்கிவிட்டனன். ஓ! வேலாயுதக்கடவுளே! தேவரீர் எப்பொழுது எழுந்தருளக்கூடுமோ என்று காத்திருந்தோம். இப்பொழுது

அரக்கனை நினைந்து. தேவர்கள், கணைகளை எய்து விட்டனர் அது தேவரீர் பாதத்தைப் பணிந்து சென்றது. குமரக்கடவுளே அறியாது செய்த தப்பிதத்தை மன்னிக்கவேண்டு''மென மன்றாடித் தேவர்களும் முறையிட்டார்கள். தேவர்களே! நீங்கள் மேருகிரியிடத்து இருங்கள் என முருகவேள் விடை கொடுத்தனர். வியாளபகவான் தேவர்களைப்பார்த்துத் ''தேவர்களே, எம்பெருமானென்றறியாது வச்சிரமுதலிய ஆயுதங்கொண்டெறிந்தபாவம் நீங்கும் படிக்கு பரதகண்டத்தில் தக்ஷிண தேசத்தில் காவேரிநதிக்குத் தென்புறமாக சிவமலையென ஒரு புண்ணியமலை யிருக்கிறது அதிற்சென்றுபூசனைபுரிக எனத்தேவேந்திரன் சொல்வான். தக்ஷிண தேசத்தில் சூரனுடைய கிளைகளிருக்கிறார்கள். அவர்களால் தொந்தரவு நேருமே என்றான். ''ஆனால் அங்குச்சென்று பூசிக்குங்காலம் சமீபத்திருக்கிறது அப்பொழுது செய்யலா''மெனப் பொன்னவன் சொன்னான். எல்லோரும் மேருகிரியிலிருந்தார்கள். அசுரர்கள் துன்பம் சகிக்காத தேவர்கள் கைலைசென்று பரமேசுரரிடம் அழுதார்கள். பரமேசுரர், குழந்தைக் குமாரரை அழைத்து மடிமீதிருத்தி அரக்கர் குலங்களை நாசஞ்செய்து தேவவுலகத்தை இந்திரனாளும்படி செய்குவை யெனக் கட்டளையிட்டனர். அவ்வாறே லட்சத்து ஒன்பது வீரரால் தேவர்களுடன் சென்று அசுரர்களை வேரறுத்து தேவலோகத்தில் அரசு செய்யும்படி இந்திரனை இருத்தி தெய்வயானையை மணந்து கைலையங்கிரியில் குமரக்கடவுள் வீற்றிருந்தனர்.

இந்திரன் செல்வச் செருக்காலும், மாதராசையாலும் சிவதலத்திற் சென்று பூசிப்போம் என்பதில்லா திருந்தமையால் புத்தி மாறாட்டமாய்விட்டான். நாரதர் அங்குச்சென்று இந்திராணியைக்கண்டு, இந்த மாறாட்டந்தீருதற்கு தேவர்கள், தோத்திரஞ்செய்பித்துத் திரிபுரத்தை தகித்தும், நரசிம்மனுடைய பலம் வரும்படியாக அநுமனுக்கு வரங்கொடுத்த, சிவமலையாண்டவனைப் பூசித்தால்தான் இப்பாவம் நீங்குமென மொழிந்தனர்.

தேவேந்திரன் முன் சசிதேவிசென்று நாரதர் கூறிய வற்றைத் தெரிவித்தனள் "ஆம். ஆம். சூரசம்மார மானவுடன் சென்றிரு க்க வேண்டும் தவறியதால்தான் இத்துன்பம் வந்தது." என்று கூறித் தேவர்கள் சூழப் பொன்னுலகம் விட்டுச் சிவமலைக்குவ ந்து வணங்கி சிவமலை யாண்டவனை அன்பாக அபிஷேகாதி உப சாரங்களால் பூசித்துத் தோத்தரித்தனன். சிவமலைப்பெருமான் பிரத்தியக்ஷமாய் "இந்திரா? மகிழ்ந்தனம். பொன்னாட்டை ஆண்டுக்கொண்டிரு; முடிவில் இடையில்லாத முத்தியின்பத் தைக் கொடுக்கிறோம்" எனவரமருளினர். இந்திரனும் சந்தோ ஷமுற்று பொன்னாட்டு அரசைக் கைக்கொண்டு சந்தோஷமாக வாழ்ந்திருந்தனன்.

நகுடன் சாபந் தீர்த்தல்.

பூலோகத்து அரசர்களிற் சிறந்த நகுஷன் என்னும் வேந் தன் நூறுயாகத்தை வெகுசிரத்தையோடு செய்தனன். சப்த ரிஷிகள் பல்லக்குத் தாங்கிக்கொண்டு வந்து "ஏ மன்னனே நூறுயாகம் செய்தவர்கள் இந்திரப்பட்டம் பெறுவார்களான தால் அந்தப்பட்டத்தை நீபெறுதற் பொருட்டுச் செய்யவேண் டிய மரியாதைப்படிக்குப் பல்லக்குக்கொண்டு வந்திருக்கிறோம். புறப்படு" என்றனர். மெத்த சந்தோஷத்துடன் பல்லக்கிலே. நிருன் ரிஷி சிரேஷ்டர்கள் சுமந்துகொண்டு போகிறார்கள். இந்திராணியைச் சேரவேண்டுமென்ற ஆசையால் (சர்ப்ப) சீக்கி ரம் நடவுங்கள் என்றான். சீக்கிரம் என்பதற்கு வடமொழியில் சர்ப்ப என்பதுபொருள் ஆனதால் "சர்ப்பமாகப் போகக்கட வாய் "என முற்கொம்பு தாங்கிச்செல்லும் அகஸ்தியர் கோப மாகச்சபித்தார். உடனே அரசன் மலைப்பாம்பாக விந்தகிரிக்கு த்தெற்காக காளஹஸ்திக்கு மலைச்சாரில் விழுந்து கிடந்தான். வெகுநாளைக்குப் பின்பு துருவாசமுனிவர் காசியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பின்பு குற்றால தரிசனஞ்செய்ய வந்தார். நகுடன் பாம்பாகக்கிடப்பது தெரியாது இது பாறையென்று ஏறினர். கலைறிவுவந்து தனக்கு அகத்தியரால் நேர்ந்த சாபத்

தைச்சொல்லித்தன் வடிவு வரும்படி அநுக்கிரகிக்க வேண்டுமெ ன்று பிரார்த்தித்தான். "அகத்தியமுனிவர் சாபத்தை மாற்ற ஒருவராலும் முடியாது; ஆயினும் என்மனதிற் றோன்றுகின்ற ஒரு உபாயஞ் சொல்கிறேன்; அகத்தியமுனிவருக்குச் சிவாகம முற்றிலும் ஓதியருளிய கந்தப்பன் ஆலயத்தைப் பிரதக்ஷிணம் வந்து வணங்கினால் இந்தப்பாம்பு வடிவம்போகும்" என்றனர். எந்தத்தலம் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டிய நகுடனு க்கு முனிவர் கூறலாயினார்.

"நகுடராஜனே! தேவர்களிற் சிறந்தவர்களான பிரமன், விஷ்ணு, ருத்திரன் எனமூவரும், அரசர்களிற் சிறந்தவர்களான பாண்டியன், சோழன், சேரன் எனுமூவர்களும், மேன்மக்க ளான வேளாளர்களிற் சிறந்தவர்களான மன்றாடி, தானஞ்செ ய்வதில் கன்னனைப்போலக் கொடுக்கும் பெரிய கையையுடைய சர்க்கரை மன்றாடி மன்னன், சொல்லுதற்கு அரியகீர்த்தி வாய் ந்த பல்லவராயக் குரிசில் ஆகிய மூவர்களும், மற்றய வேளாளர் களும வழிவழியாயடிமை செய்வார்கள் அவர்களுக்குக்குல தெய்வமாகியிருப்பார் என்னை யாளுடைய சிவமலையப்பன். அவர்க ளுடைய உடல், பொருள், ஆவி என்பவற்றை காங்கேயனுக் கே அர்ப்பணம் செய்திருக்கின்ற காரணத்தினால் அவர்கள் வசிக்கும் திருநாட்டுக்குக் காங்கேயநாடு எனப் பெயராயிற்று. இன்னும் அந்தநாடு எல்லா வளங்களாலும் சிறந்துள்ளது. அங் குள்ள சிவாசலம் என்னும் பர்வதத்தில் ஆறுமுகப் பெருமான் சந்ததங்குடியாக இருக்கிறார். அடுத்தவர்களுக்குச் சந்தோஷ மாக இந்திரபோகமும், சித்தியுங்கொடுத்துப் பாச பந்தங்களை அறுத்து முத்தியும் அருளுகின்றார். ஆனதால் அந்தக் கிரியை அடைந்து அகஸ்திய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, அக்கிரி யை மும்முறை வலம் வந்து சிவமலைக்கடவுளைக் கண்டால் உன் பாவமெல்லாம் நீங்கும்" என்றனர். அதனை அன்புடன் கேட்ட நகுஷன், காடு மலை ஆறு முதலியவற்றை வாயுவேகமாகக் கட ந்து காவேரி நதியில் மூழ்கினான். பவானி சங்கமேசுரரைப்

போற்றினான்; திருச்செங்கோடு அர்த்தநாரீசுரரைச் சேவித்தான்; கொக்கராயன்பேட்டை பிரமலிங்கரையும், கட்டாற் றேசுரரென்னும் அகஸ்திய லிங்கரையும், மூனைச முக்கணீசுரரையும் கொடுமுடி மகுடலிங்கேசரையுந் தரிசித்துச் சிவமலையைக் கண்டான்; பணிந்தான். அகத்திய தீர்த்தத்தில் முழுகிக் கிரிப்பிரதக்ஷணஞ் செய்துக் கொண்டு இருபத்தெழுநாள் நியமமான விரதம் பூண்டு தரிசித்து "சுவாமி, எனக்கு நேர்ந்த கொடிய சாபத்தை நீக்கவேண்டு"மென்று பிரார்த்தித்தான். மனது இரங்கிய முருகையன் மயில்வாகனத்தின் மீது எழுந்தருளி "இந்தப் பாம்புடல் நீங்கிப்பழயபடி இந்த உலகத்துக்கு அரசனாக நெடுநாள் வாழ்ந்து, சித்த சுத்தியாய் மலபரிபாகம்பெற்று, இந்தச்சகம் அழியத்தக்கது, மோக்ஷம் நிலையானது என றறியத்தக்கும் ஞானம் பெற்று ஆனந்தங்கொண்டு எப்பொழுதும் நீங்காத முத்தி இன்பத்தை அடைவா"யென மொழிந்துமறைந்தனர்.

பாம்பு உடல்நீங்கிப் பழைய உருவங்கொண்டு அரசுபெற்று வாழ்ந்து சிவபெருமானின் திருவடி நிழலை யடைந்தனன் நகுஷன்.

வள்ளிநாயகி திருமணம்.

ஆறுடைய நாயகராகிய குமரக்கடவுள் திருத்தணி மலையில திருவிளையாடல் புரிந்து வீற்றிருந்தனர். நாரதமுனிவர் வந்து குமரக்கடவுளை வணங்கி, "சுவாமி! எளியேன் வெள்ளிமலைக்குச் சென்றிருந்தேன். அதன் தென்திசையில ஒருதினைப்புனத்தில அமைத்த பரணில் அழகிய கவணைக்கையில் வைத்துக்கொண்டு, பருத்ததன பாரத்தால் மெலிந்த இடைதுவள, புன்சிரிப்புடன் குழலுங் கிளியுந்திகைக்கும்படி மெல்லியகுரலால், ஆலோலால என்று தினையைத்தின்னும் பறவைகளை ஓட்டிக்கொண்டு சித்திரப் பாவைபோன்ற ஒரு யவ்வனப்பெண் இருக்கக்கண்டேன். இதுவரையில் மூன்று உலகங்களிலும் நான்பார்

ந்த பெண்களில் ஒரு மங்கையேனும் இவ்வளவு அழகுள்ளவ ளாக இருக்கவில்லை அதனால் பார்த்தவுடன் இக்கன்னிகை என் ஆண்டவனாகிய குகப்பெருமானுக்கே தகுந்தவள் எனமனத்தில் நிதானித்தனன். அந்தப் பெண்மணியின் பேரழகை யோசிக் கிறபொழுது ஓர் எண்ணம் தோன்றிற்று.

"சிவ சுப்பிரமணியக்கடவுளானவர் என்னைக் கோபித்துத் தலையிற்குட்டி சிறையில் போட்ட காலத்தில் எந்தத்தேவரும் வந்து காக்கவில்லை. அருட்கடலாகிய குகப்பெருமானே மனது வந்து சிறைநீக்கினர் ஆதலால் அக்கடவுள் மனது மகிழ்ந்திட யாது செய்யலாமென்று ஆராய்ந்து, தேவாங்கத்தில் ஒரு கன் னிகையைப் பிரமன் சிருட்டித்து தவினனோ? எனவும் நினைத் தேன். அன்றியும். அழகிய விஷ்ணு மூர்த்தியினுடைய அவதார ங்களில் கூர்மம் இப்பெண்ணின் பாதமாகவும், மதவலியம், இவள் கண்களாகவும், அவருடைய ஆயுதமாகிய சங்கம், அவள் கழுத் தாகவும், அவர் யோகநித்திரை செய்யும் இடமாகிய ஆல், அவள் வயிறாகவும், அவர் படுக்கையணையாகிய ஆதிசேஷன் (படம்) அவ ளது மர்மஸ்தானமாகவும், அந்த விஷ்ணுவின் மகனான மன்மத னதுவாகனமாகிய கிளி, அவளது மொழியாகவும், அம்மன்மதன் யானையாகிய இருள், அவள் கூந்தலாகவும், அவன் குடை அவள் முகமாகவும், அவன் கிரீடம், அவள் முலையாகவும், பரமேசுர னது தலையணி அவளது நெற்றியாகவும், லட்சுமி தேவியின் வீடாகிய தாமரை, அவள் கையாகவும் படைத்தபெண்ணும் என் னவளப்பம் பொருந்தியதாக இருக்கிறது என்று கேசாதிபாத பரியந்தம் நன்றாகஎடுத்து வருணித்தனன். ஓ; செவ்வேளே! இவ் வகையான அதிரூபவதியான மாதைப் பார்த்தேன். தேவரீர் உடனே அங்குசென்று மணம்புரிந்தருளும் எனக்கூறித் தன்வசிப்பி டம் சேர்ந்தனன். உடனே குமரக்கடவுள் வில்லும் கணையுங் கொண்ட வேடரூபமெடுத்துக் கொண்டு வள்ளிமலைக்கு வந்த னர். வள்ளி நாயகியை கண்குளிரக்கண்டார். அப்பெண்ணின் சமீபத்திற் சென்று "அடி பெண்ணே! உன்பேர்சொல். நீயில்

வழியில் [illegible]சொல் இல்லையேல் வழியாவதுசொல்" என்பது முதலிய வேடிக்கைச்சொல் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்பொழுது பலவேடர் சூழ வள்ளியின் தந்தையான நம்பி என்டவன் வந்தான். சுப்பிரமணியர் ஒரு வேங்கைமரமாக நின்றார் "ஈற்றில்லாது ஆச்சரியமாக இன்று இந்தமரங் காணப்படுகிறது ஏதேனும் நமக்குத்தீங்கு நேரிடுமோ தெரியவில்லை. மரத்தை வெட்டிவிடுங்கள்." என்று வேடர்சொன்னார்கள். "மரத்தினால் நங்குடிக்குத்தீங்கு வருமோ! புத்தியில்லாது சொல்லுகிறீர்களென்று போய்விட்டான் மறுபடியும் குகன் பழயபடியே வள்ளிநாச்சியாரிடம் பரிகாசவார்த்தை பேசியிருக்கும்போது வேடர்புடைசூழ வள்ளியின்தந்தை வருவதைத் தெரிந்தவள் வேடவுருவுற்ற குமரனைப்பார்த்து, "ஓடிப்போய்ப் பிழை" என்றாள். கிழ வேதியவடிவாக நடுங்கிக் கொண்டிருந்தார் சுப்பிரமணியர். நம்பி என்பவன் "மகளே இக்கிழ வேதியன்யார "னென்றான். "காஸ்மீரதேசத்திலிருந்து இக்காட்டில் வரும்போது வேங்கையைக்கண்டு பயந்து வந்தனன்." என்றனள். மூன்று நாள் இங்கு இரும் அப்பால் வந்து வழிகாட்டுகிறேனென்று போயினன். நம்பசிக்காகத் தினைமாக்கொடுத்த வள்ளியாரே! தாகத்துக்கு நீர் இருக்குமிடம் காட்டெனச் சென்று வரும்பொழுது ஆனையாக விநாயகர் வந்தனர். கண்ட மங்கை "ஐயா, வேதியரே கொல்லவரும் யானைப் பயத்தை நீக்குவீராயின் உன் இஷ்டப்படி நடப்பேன் "என்றனள். யானை போய்விட்டது. அப்பால் இருவரும் கூடிச்சுகித்தார்கள்.

பின்பு சோலை நிழல் நீங்கித் தினைப்புனத் துப்பரண்மீது வள்ளிநாயகி இருந்தனர். அடுத்த புலத்திலிருந்த தோழி வள்ளியைக்கண்டு, "கண்சிவந்து, உதடுவெளுத்தது, தேகத்தில் சுகந்தவாசனை, நெற்றியில வேர்வை, மனவேறுபாடு முதலிய குறிகள் உன்னிடத்துக் காணவேணடிய காரணமென்னவென்றனள். வள்ளியம்மை விடைகூற அஞ்சினவளாய் "அடிஎன் உயிர்ப்பாங்கியே! இவ்விடத்து வெயில்[illegible]

தேடிவரச் சென்றிருந்தேன்'' என்றனள். இப்படிப்பேசியிரு
க்கும் தருணத்தில் இந்தப்பாணிடம் வந்து வேடவுருத்தாங்கிய
குமரன், கைக்கணையால் எய்த விலங்கு இங்குவந்ததா? என்று
கேட்டனர். ''ஐயா, தாங்கள் கற்றவித்தையை தெரிந்து கொண்
டேன் எங்கிருந்துவந்தீர்'' என்று தோழிகேட்டனள் ''தென்தி
சையிலிருந்து கன்னியாகுமரி ஆடவந்தனம்'' எனறனர். இன்
னும் பலவிதமாகவேடிக்கை வார்த்தைகள் தோழி பேசிக்கொ
ண்டிருந்து இவர்கருத்தும், கன்னிகை கருத்தும், மயல்பூண்டி
ருக்கிறது என அறிந்து அடுத்த தினைப்புனத்துக்குத்தோழி
சென்றனள். பின்தொடர்ந்து இந்தத்தோழியிடஞ் சேர்ந்து
''அன்னம் போன்றவல்லவளே! என் உயிரையும் உடலையும்
உன் தலைவி கவர்ந்து கொண்டாள். அவளுடனே இன்பமான வார்
த்தைகள் பேசும்படி எனக்கு உதவிசெய்வாயானால் உனக்
குப் புண்ணியமுண்டு'' என்றனர். ''எங்கள் குடிக்குப் பழிச்
சொல் தேடிவைக்கப் பார்க்கிறாயோ போகாமல் ஓடிப்போ'' என்
று கோபக்குறியுடன் பாங்கி கூறினள். குகப்பெருமான் திரத்
துடன் ''நல்லது என்னுடனே வள்ளிநாயகியை அனுப்பினாலாச்
சது இல்லையேல் அவள் உருவத்தை எழுதி பனைஓலைக் குதிரை
யேறி அவள் பெயரைச் சொல்லிக்கொண்டு திரிகிறேன் பார்''
என்றனர். பாங்கி அச்சங்கொண்டனள். வள்ளிநாயகியிடம்
இச்சங்கதி தெரிவித்து மறுபடி இவரிடம் வந்து ''எங்கள் எஜ
மானியிடம் செல்லும்,, என்றனர். சென்று கூடியிருந்தார்கள்.
தினை விளைந்துவிடவே அறுத்துக்கொண்டு தங்களூருக்கு வள்
ளியையும் அழைத்துக்கொண்டு வேடர் சென்றார்கள். வள்ளி
நாயகியைக் காணாது இரவில் தனியாகச் சென்று ஊருவிருக்
கும் பாங்கியைக் கண்டு அவள் துணைகொண்டு வள்ளிநாயகியை
அணைந்தனர் ''விடிந்தால் வேடர்கள் கொன்று விடுவார்கள
விடியுமுன் போய்விடு'' என்று பாங்கி வழிசொல்லக் குகசேனா
னுள் வள்ளிநாயகியை அழைத்துக் கொண்டு பல காடுகள் கட
ந்து சிவமலைக்கு வந்து சேர்ந்திருந்தனர் குகப்பெருமான். காலை
வள்ளிநாயகியைக்காணாது வேடர்கள் பாங்கிக் காலடி அடை

யானத்தால் சிவமலையைச் சென்று பிடித்தார்கள். "சேவலைப் இவனே எம் குமரர்களைத் தருபவன் என பல கணைகளை முருகன் மீது எவினார்கள். பருப்பதைகளைத் திருப்பி வேடர்களை அடிக்க" எனச் சிவகுமரன் நினைத்ததனும், எதிர்த்து வந்த எட்டு வேடர்களும் மாண்டார்கள். அப்பொழுது நாரத முனிவர் வந்து சிவமலையைப் பார்க்க வந்தார். "வள்ளி நாயகியாரை வளர்த்தவர்களைக் கொலை செய்தது அதுதான் பாருங்கள் ஐயா," என்று முருகனை, முனிவர் இராது கேட்டார். ஆறுமுகத்தோடு காட்சி கொடுத்தனர். வள்ளியம்மை தரிசித்து உடனே நடுங்கி "சுவாமி வேட உருவம் எடுத்து அடியாளைச் சோதித்தீரோ! எளியவள் பாதத்தை செய்த என் மணாளர்க்குக் கவலையுண்டோ? என்னை வளர்த்தோர் பண்டு என் பொருட்டு மாண்டாரே? ஆதலின் ரக்ஷிக்க வேண்டு"மென வேண்டினாள். வேடர்கள் எழுக என முருகவேள் மனதிலே தயவாகவே இறந்த வேடர்களெல்லாம் உயிர் பெற்றெழுந்து சந்தோஷ ஆரவாரஞ் செய்தார்கள்.

எழுந்த வேடர்கள், சுவாமியைப் பணிந்து எங்கள் குல தெய்வமே' என்று கூறுகிறார்கள் "எங்கள் குலத்துக்கில்லாத ஒரு குறை நேர்ந்தது, விவாகப் பொருத்த சடங்குகளை தேவரீர் திருவுளம் பற்றி நாங்கள் ஊருக்கு வந்து கிரமமாக விவாகம் செய்துகொண்டு வள்ளியுடன் கூடியருள வேண்டுமென்றனர். "அப்படியே ஆகுக" என்று வேடர்கள் குமரநாதன் உடன்வர வள்ளிமலைக்குச் சென்று விவாகம் செய்துகொண்டனர் கோலாகல பூசை செய்தார்கள். வேடர்களிடம் பிரயாணம் சொல்லிக்கொண்டு வள்ளியம்மையுடன் சிவமலை வந்து திருவோலக்கமாக எழுந்தருளி யிருந்தனர்.

முருகவேளுடன் எதிர்த்துப்பட்ட வேடர்கள் பின் உயிர் பெற்று ஆலித்தல (களித்தல்லால) இவ்வூருக்குப்*பட்டாலி என்றும் பெயர் உண்டாயிற்று

வள்ளிநாயகி தருமஞ் செய்தல்.

சிவமலையில் எழுந்தருளி யிருக்கும் சிவ சுப்பிரமணியக் கடவுளை வணங்கி 'சுவாமி! பெரு முதன்மை பாலமலைக்களிறுக்க, இங் சபமலையில் அதிகப்பிரியமாகத் தேவரீர் எழுந்தருளி யிருக்கும் காரணம் தெரிவிக்க வேண்டு'மென்ற வள்ளியம்மையை நோக்கி முருகவேள் கூ...

*பட்டு ஆலி = பட்டாலி

பூர்வகாலத்தில் சிவபெருமானை நோக்கித் திருமால் தவஞ் செய்தனன். அவர் கண்ணிலிருந்து ஆநந்தக் கண்ணீர் இரண்டு துளி பூமியில் விழுந்தது. அமுதவல்லி சுந்தரவல்லி என இரண்டு மாதர்கள் உதித்தார்கள். நான் அவர்களைக் கருணையால் பார்த்து உங்களில் ஒருத்தி இந்திரன் மகளாயும், மற்றொருத்தி சிவமுனி என்பவரிடம் ஒருமான் வரும், அதனைக் கூடுவர். அம்மான் வயிற்றிற் பிறந்து, வேடர் சேரியில் வளர்ந்தால் நான் வந்து காந்தர்வ மணமாகச் சேர்வேன் எனவே இருபெண்களும் சென்றார்கள். அப்படியே உதித்தார்கள் இப்பசுநங் கொடுக்கின்றேனென்றனர் வள்ளிநாயகி மகிழ்ந்து" அடிபணிந்து "ஐயா நான் ஒருத்தியாயிற்று; மற்றொரு மடந்தையாவ"ளெனவே, திருத்தணி மலையிலிருக்கின்றாள் காண்பாய் என்று கூறினர். மேலும், நீங்களிருவரும் தவஞ்செய்த நாடானதாலும், பரமமாதா பிதாக்களான சிவசக்தி இருவரும் வசிக்கும் மேருகிரியின் ஒரு சிகரம் இது ஆனதாலும், எனது அன்னை தவஞ்செய்தமையாலும், எமது துணைவர்கள் ஒன்பதின்மர் உதித்த இடமாதலாலும், எனது அன்புடைய அகத்திய முனிவர் எம்மைப்பூசித்து வரம்பெற்ற இடமாதலாலும், அநவரத மகலாமல் அநுக்கிரகித்துக் கொண்டிருக்கிறோம் இம்மலையில் என்றனர். "அரிய தவமானதால் இதில் தருமஞ்செய்ய என்மனது கூடுகிறது" என அம்மையார் கூறினள். முருகப்பெருமான் கூறுகிறார் "எனது மாதா காஞ்சிபுரத்தில் முப்பத்திரண்டு தருமஞ் செய்தனள். நீயும் செய்வாயாக. அருகாமை; அறச்சலூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்திற் சென்று, இளந்தரத்தை தலைக்கு எண்ணெய் கொடுத்தல் முதலிய முப்பத்திரண்டு தருமங்களையும் செய்வாயாக' எனக்கட்டளையிட்டனர். வள்ளிநாயகியார் இறைவனுரைப்படி அவ்வூருக்குச் சென்று முறைப்படிக்குத்தருமம் புரிந்து கொண்டிருந்தனள். பலநாள் சென்றபின் எம்பெருமான் மயிலேறி வள்ளிமுன்பு சென்று "வேண்டும் வரங்கள் கேள்" என்றனர். அன்னையாரும் ஐயா, எனக்கு என்ன வரம் வேண்டியிருக்கிறது? நான் வணங்கிய தேவர்கள் தன்னை வணங்கவும், நீர் மாலைசூட்ட அருகிலிருக்கவுமான பெரும்பேறும்.

றை யடைந்திருக்கிறேன். ஆனால் நான் தருமம் நடத்திய இந் நகருக்கு என்பேர் விளங்க வேண்டுவதுதான் நான் இப்பொழுது வேண்டும் வரம் என்றனன். “அரசனே! என்றும், வள்ளியூறச்சாலை யென்றும இந்நகர்க்குப் பெயர் ஓங்கும்” என்றனர். பின்பு மயில் வாகனத்தின்மீது எழுந்தருளிக் கணிகைமலைக்குச் சென்று தெய்வானையைக்கண்டு இரண்டு தேவிமார்களும் இருபுறமும் விளங்கப் பலநாள் அங்கிருந்து சிவமலைக்கு எழுந்தருளினார்கள். அகத்திய முனிவர் வந்து சிவமலையாண்டவனையும், அம்மையாரிருவரையும் வணங்கி “சுவாமி, அன்னையரிருவரையுந் தேவரீரையும் இத்தலத்தில் பூசித்திருக்கும் ஆசை பெருகுகின்றது.” என வேண்டினர். வேண்டிய வேண்டியாங்குதவும் அண்ணலாராகிய கந்தப்பெருமானும் பிராட்டியாரிருவரும் அங்குள்ள திருவுருவத் திடத்து விளங்கினார்கள். பூசித்து, அகத்தியமுனிவர் விடைபெற்றுப் பொதியமலை அடைந்தனர்,

தீர்த்தச் சிறப்பு.

எல்லாக்குணமும் சிறப்பும் பொருந்திய முசுகுந்தன் என்னுஞ் சக்கிரவர்த்தி திருவாவிலையென்னும் க்ஷேத்திரத்தில் பசுபதீசுவரரைத் தரிசித்துக்கொண்டு வாழுநாளில், கௌதமமுனிவன் அங்கு வந்தனர். எங்கிருந்து இங்கு எழுந்தருளுகின்றீர் எனக்கேட்ட முசுகுந்தனை நோக்கி, மன்னவா, நான் தீர்த்த யாத்திரைசெய்து வருகின்றேனென்னவே, தீர்த்தங்களில் முழுகினால் எனக்குள்ளிருக்கப்பட்ட நோய் தீருமோ? என்றனன். நோய் தீருவது மாத்திரமல்ல, சித்தி முத்தியுந்தரும் என்றனன். அவ்விதமுள்ள விசேஷதீர்த்தம் எதுவெனவே, இவ்விடத்துக்கு மேற்றிசையில் விரையமா நகரம் என ஒரு பதியிருக்கிறது அங்கு ஏழு தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றுள், வேதத்தை மறந்த பிரமதேவன் சிவபிரானைப்பூசித்துச் சத்தி தீர்த்தத்தில் முழுகி வேதத்தைக்கண்டு சிருஷ்டியை நடத்தினான். பூதனையை முலைப்பாலருந்துவதுபோல அவள் உயிரையுண்ட தோஷந்தீருமபடி சத்தி தீர்த்தத்துள் முழுகிக் கண்ணபிரான் [illegible] [illegible]. அகத்திய தீர்த்தத்தில் நிருதி முழுகித் திக்குபால

ஞானான். விசுவாமித்திரனு மத்தீர்த்தத்தே படிந்து ரிஷியானான். கருடனும் இத்தீர்த்தத்து மூழ்கி மலைப்பாம்பு வடிவு நீங்கினன். அனுமந் தீர்த்தத்தில் முழுகிப் பஞ்ச பாண்டவர்கள் சத்துருக்களை சயித்தாத தேசமன்னர் திறை தரவாழ்ந்தனர் இந்திர தீர்த்தத்தன் பாண்டுவேந்தன் முழுகி பாண்டுநோய் தீர்ந்தான். வாசுகி முழுகிக் குன்மநோய் தவிர்ந்தான். பிரமானந்ததீர்த்தத்தில் பார்வதிபாதச்சிலம்பில் வந்தவொன்பது மாதர்களும் முழுகி, உமையம்மை சாபம நீங்கி லட்சத்து ஒன்பது வீரர்களை ஈன்றனர் சித்தர்கள் முழுகி ஒளிபெற்றுப்பல யுகங்களிருக்கிறார்கள்; சத்தியபாமை முழுகிக் கண்ணனைக் கணவனாகப் பெற்றாள்; பல பக்தர்கள் படிந்து பாகதிபெற்றார்கள். மங்களதீர்த்தத்தில் இரதி முழுகி எரிந்த மன்மதன் உயிர் பெற்றுவர இன்புசுகம்பெற்றாள்; வீரதீர்த்தத்தில் சுக்ரீவன் முழுகி இராமனது சிநேகம் பெற்றுப்பகையைப் போக்கிக்கொண்டான். இவ்வாறு இவ்வேழு தீர்த்தத்து முழுகினோர் பாவங்களெல்லாம் நீங்கின. இத்தீர்த்தக்கரையில பிதுர்க்களைப் பூசித்தால் சிவலோகம் பெறுவார்கள். ஆதலால நீசெல்வாயாக எனலும், பூரித்து புருந்த னங்கு சென்று இந்திர தீர்த்தத்தில் விதிப்படி தீர்த்தமாடினவுடன் வெங்குன்மம் நீங்கி விட்டது; மன்மதவடிவம் பெற்றான். யானைமுகக் கடவுளைப் பரமசிவத்தை, பார்வதிதேவியை, சிவமலையாண்டவனை, வள்ளி தெய்வயானையைத் தரிசித்து இஷ்டகாமியார்த்தங்களைப் பெற்றுக் கருவூர் சென்று பட்டம்பு முடிவில் கைலைசென்று சிவகணநாதராக வீற்றிருந்தனன்.

எனச்சிவமலைமகத்துவத்தைச் சூதமுனிவர் கூறக் கேட்டிருந்த முனிவர்களெல்லாம், உடல் புளகமுற, வார்த்தை தடுமாற, கண்களில நீர்ததும்பப் பரவசமாகி முனிசிரேஷ்ட [illegible] தங்களைப்போல் பத்திரசத்தைப் போதிக்கத்தக்கவர்கள் [illegible] ரில்லையென்று தோத்திரித்தார்கள். சுபம்.

முற்றுப்பெற்றது.

சருக்க அட்டவணை

பிழை திருத்தம்.

[illegible] பிழை திருத்தங்களைச் செய்துகொண்டு படிக்கவேண்டும். வாசிப்பவர்கள் தப்பு [illegible] படடுவோர்களாக [illegible].

பிழை	திருத்தம்	பக்கம்	வரி
டன்ற	யபின்ற	3	14
டொணை	கூடொணை	5	6
[illegible]மலை	சிவமலை		6
ளிநாதிட	ளிரதிட	5	23
சுருதபாகம	சுருதியாகம	6	1
ஒளன்னி	ஒளணனி		26
[illegible]கள	னயகள்	9	8
பல்வுள்	பல்வுள	10	2
ஒருன்றே	ஒருணறே	10	23
ளிளை தகைத	ளிளைதகைத	15	9
றண்டு	றனடு	16	7
வங்கிதன்	வாதிதன்		17
தன	தன்	17	1
சந்தர	சந்தா	18	2
யுடையர	யுடையரா	22	13
சனன	சனன		14
வருந்திட	வருந்திட		20
ளியப்பரு	லியமபரு	23	1
விருக்து	விருந்து		3
தகரு	தறகரு		5
ளெனக்குத்	ளெனககுத		22
யுபிரகு	யுயிர்க்கு	24	5
சோந்த	சேர்ந்த	25	16
கார்த்தி	கார்த்தி		17
தனிற	தனிற	26	8
திரண்டா	திரண்டு	29	11
[illegible]	நயப்பதுற்		
[illegible]	பயயாது	30	7
[illegible]	வகை		13
[illegible]	கிருக்க	37	1
[illegible]	பரவ		6
[illegible]	தென்பால்		21
[illegible]	படைத	38	2
[illegible]	[illegible]	42	5
	பொருந்திட	43	11
	யின்புற	45	3

பிழை	திருத்தம்	பக்கம்	வரி
தொன்	[illegible]	[illegible]	[illegible]
போய்	பொய்	46	[illegible]
வெற்ளி	வள்ளி	47	[illegible]
பறிய	[illegible]		22
காந்	காந்	50	[illegible]
மூற்றிட	மூறுற்றிட		21
மேல்	மெல்		[illegible]
ன்மேன்	[illegible]	51	27
செல	சொல	53	13
காரைகா	காரைக்கா	54	[illegible]
றேன்	றேனை		15
பயசைய	புங்கய		17
வொதிற	வெந்திற		26
வோன	வொன்	55	4
மகரு	மகட்கு		[illegible]
மான்ப	மாண்ப	[illegible]	[illegible]
ஓற்றுன்	ஒருன்	[illegible]	[illegible]
பெறுமை	பெருமை		[illegible]
சொல்வான்	சொல்வான்	60	3
னப	னம்		[illegible]
வனறு	வென்று		[illegible]
வரு	வறு	62	[illegible]
பாலை	பாலை	63	6
பொதாய	பொறதாய	[illegible]	4
மொழிவாய்	[illegible]	[illegible]	[illegible]
தொணமை	தொண்மை	[illegible]	8
விவாய	[illegible]	[illegible]	[illegible]
பிரகி	[illegible]	[illegible]	[illegible]
யபிப்ப	[illegible]	[illegible]	[illegible]
சமையு	[illegible]	[illegible]	[illegible]
சீதாகரு	[illegible]	[illegible]	[illegible]
கீரு	[illegible]	[illegible]	[illegible]
வெளனி	[illegible]	[illegible]	[illegible]